# பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி

கி. வீரமணி

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி

*கி. வீரமணி*

International Institute of Tamil Studies
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை - 600 113

தந்தை பெரியார் பகுத்தறிவு அறக்கட்டளை
(அறக்கட்டளை நிறுவியோர் - முனைவர் ந. வேலுசாமி)
வரிசை எண் : 1 நாள் : 12.11.2002

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Periyāriṉ paṉpāṭṭup puraṭci |
| Author | : | **Thiru K. Veeramani** |
| Publisher | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Chennai - 600 113.<br>☎.2542992 |
| General Editor | : | Dr. S. Krishnamoorthy |
| Publication No | : | 437 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Date of Publication | : | 2002 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type Used | : | 10 point |
| No. of Pages | : | vi + 90 |
| No. of Copies | : | 2200 |
| Price | : | Rs.25/- (Rupees Twenty five Only) |
| Printing | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004 |
| Subject | : | Tamil culture |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம்
பொறுப்பன்று

**முனைவர் சா. கிருட்டினமூர்த்தி**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

செயற்கரிய செய்வார் பெரியர்' என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் தந்தை பெரியார். சாதி, மத, இனச் சாக்கடையில் சிக்கித் தத்தளித்துக்கொண்டிருந்த தமிழ் மக்களிடையே தன்மான உணர்வை ஊட்டி விழித்தெழச் செய்தவர் பெரியார் ஆவார். பிறரால் செய்ய இயலாத அரிய செயலைச் செய்து இந்தச் சமுதாயத்தைத் தூக்கி நிறுத்த அவர் மேற்கொண்ட பணியைப் பற்றி, "பகுத்தறிவையே அடிப்படையாகக் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும் நான் அத் தொண்டுக்குத் தகுதியுடையவன் என்று கருதுகிறேன்" என்று அவரே கூறுவதால் தன்னுடைய தொண்டு எத்தன்மையது என்பதையும், தான் செய்த அனைத்துச் செயல்களும் இச்சமுதாயத்தை நோக்கியன என்பதையும் அவர் தெளிவுபடுத்தியிருப்பதை இதன் வழி அறியலாம்.

பெரியார் என்ற ஒரு மாமனிதர் தமிழக மக்களுக்காக உழைக்கப் பிறந்திருக்கவில்லையெனில் இத்தமிழக மக்கள் இன்று எந்நிலையில் இருப்பர் என்பதை நம்மால் எண்ணிப் பார்க்க இயலாது. சமுதாய மாற்றத்திற்காகப் பெரியார் அவர்கள் ஆற்றிய தொண்டு என்பது அவர் சிந்தனையின் ஆழத்தில் எழுந்ததாகும்.

தாம் சிந்தித்தால் மட்டும் போதாது; தம்முடைய மக்களையும் சிந்திக்க வைக்க வேண்டும் என்பதில் முனைப்பாகச் செயல்பட்டார். எந்த ஒரு புரட்சியும் முதலில் தனி மனித உள்ளத்தில் தோன்றும் சிந்தனையாகத்தான் அமையவேண்டும் என்று கூறுவார் எமர்சன். எனவேதான், தனி மனிதனாகிய தன்னைப் பற்றியும், தான் இருக்கும் நிலை பற்றியும் ஒவ்வொருவரையும் சிந்திக்க வைத்ததோடு தன்மான உணர்வு தமிழனுக்கு வேண்டும் என்பதைத் தந்தை பெரியார் வலியுறுத்திக் கூறினார். பண்பாட்டுச் சீர்கேட்டாலும் சாதி உணர்வாலும் தமிழினம் சிதறுண்டு நிற்பதை எடுத்துக்காட்டித் 'தமிழர் ஓர் இனம்' என்பதை உணர்த்துவதில் தீவிரம் காட்டினார். மூட நம்பிக்கைகள் மனித சிந்தனையை

மழுங்கச் செய்யும் என்பதால் அம் மூட நம்பிக்கைகளுக்கும், போலிச் சடங்குகளுக்கும் எவரும் ஆளாகக்கூடாது என்பதை வலியுறுத்தினார். உண்மையிலேயே சமுதாய மேம்பாட்டுக்காகப் புரட்சி விதைகளைத் தமிழ் மண்ணில் விதைத்துள்ளார் என்றுதான் கூறவேண்டும். பகுத்தறிவு நோக்கம் கொண்ட உலக அறிஞர்கள் பலரும் அவருடைய கொள்கைகளில் ஆர்வம் காட்டியும், ஆய்வு செய்தும் வருகின்றனர். இத்தகு பெரியாரின் பெயரால் இந்நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ள அறக்கட்டளையின் முதல் சொற்பொழிவாக இச்சொற்பொழிவு அமைகிறது.

பெரியாரின் வழித் தோன்றலாகிய விடுதலை இதழின் ஆசிரியர் மானமிகு கி. வீரமணி அவர்கள் **'பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி'** என்ற தலைப்பில் இச்சொற்பொழிவை நிகழ்த்துவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இச்சொற்பொழிவு நடைபெறும் நாளிலேயே இச்சொற்பொழிவை நூலாக வெளிக்கொணர்வதில் இந்நிறுவனம் பெருமையடைகிறது. இவ்வறக்கட்டளையை நிறுவிய பெரியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் முனைவர் ந. வேலுசாமி அவர்களுக்கு இந்நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் முனைவர் மு. தம்பிதுரை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு- மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும்., **கூடுதல் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்தம் செய்த முனைவர் மு.வளர்மதி ஆய்வு உதவியாளர், அயல்நாட்டுத் தமிழர் புலம் அவர்களுக்கும் இந்நூலினை அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்டிங் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் நன்றி.

சென்னை **இயக்குநர்**

05-11-2002

# ஆசிரியரைப் பற்றி



1933 டிசம்பர் 2 ஆம் நாள் தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் பிறந்தார். தந்தையார் பெயர் திரு. சி.எஸ். கிருஷ்ணசாமி. இவர் 9 மாதக் குழந்தையாக இருந்தபோதே தாயை இழந்தார். அதனால் சிற்றன்னை திரு பட்டம்மாள் இவரை வளர்த்தார். இவர் 10 வயதிலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளை மேடைகளில் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். 11வது வயது முதலே திராவிடர் கழக மாநாடுகளில் உரையாற்றிப் பெரும் பாராட்டைப் பெற்றார். எம்.ஏ. வகுப்பில் (1956) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றார். 1961 ஆம் ஆண்டில் சட்டக் கல்வி முடித்துக் கடலூரில் வழக்குரைஞராகப் பணியாற்றினார். 1962 ஆம் ஆண்டு முதல் திராவிடர் கழக ஏடுகளான 'விடுதலை', 'உண்மை,' 'The Modern Rationalist' ஆகிய இதழ்களின்' ஆசிரியர் பொறுப்பில் இருந்து வருகிறார்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களின் இட ஒதுக்கீடு, சமூக நீதி, மொழி இனப் பாதுகாப்பு, ஈழத்தமிழரின் போராட்டம், மனித உரிமை, பெண்ணுரிமை தொடர்பாகத் திராவிடர் கழகம் நடத்திய போராட்டங்கள், மறியல்கள் ஆகியவற்றில் கலந்து கொண்டு தளபதியாகச் செயல்பட்ட இவர் 38 முறை கைதாகிச் சிறைத்தண்டனை பெற்றுள்ளார். அன்னை மணியம்மையார் மறைவுக்குப் பிறகு 1978 ஆம் ஆண்டு திராவிடர் கழகத்தின் பொதுச்செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் செயலாளராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டு வருகிறார். 1983 இல் சென்னையில் பெரியார் திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார். 1988 இல் தஞ்சை மாவட்டம் வல்லத்தில் மகளிர்க்கான பொறியியற் கல்லூரியைத் தொடங்கி வைத்தார். 'இனமானப் பேரொளி', பெரியார் விருது, CIDA-Award of excellence, 'பாரத் ஜோதி' ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். அமெரிக்காவில் உள்ள பெரியார் பன்னாட்டு மையத்தில் சமூக நீதிக்கான 'வீரமணி விருது' வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. முதன் முதலில் இந்த விருதைப் பெற்றவர் முன்னாள் இந்தியப் பிரதமர் வி.பி. சிங்.

தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பரப்பும் வகையில் பல அயல் நாடுகளுக்குச் சென்று உரையாற்றியுள்ளார். தமிழிலும், ஆங்கிலத்திலும் சுமார் 50 நூல்கள் எழுதியுள்ளார். தமிழருக்குரிய நலன்களைப் பாதுகாப்பதில் தளபதியாகச் செயல்பட்ட இவர் 'தமிழர் தளபதி' என்று அழைக்கப்பட்டார். இன்று 'தமிழர் தலைவர்' எனச் சிறப்பிக்கப்படுகிறார். இன்றும் இவருடைய இலட்சியப் பணி தொடருகின்றது.

- மு. வளர்மதி

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| 1. | பண்பாட்டுப் புரட்சி | 1 |
| 2. | பெரியார் ஒரு (புது உலகம்) வரலாற்றுப் படைப்பாளர் | 4 |
| 3. | 'திராவிடர்' என்றார் ஏன்? | 13 |
| 4. | பண்பாட்டுப் புரட்சியில் பெரியார் பெற்ற வெற்றிகள் சில எடுத்துக்காட்டுகள் | 19 |
| 5. | சமூகநீதி என்னும் நெம்புகோல்! | 22 |
| 6. | மொழியில் மறுமலர்ச்சி | 29 |
| 7. | விழாவில் புரட்சி! | 38 |
| 8. | கலையில் மாற்றம் | 44 |
| 9. | பெண்ணுரிமை சகாப்தம்! | 54 |
| 10. | களம் கண்டபோது. . . ! | 61 |
| 11. | பெரியாரின் அணுகுமுறை | 68 |
| 12. | தந்தை பெரியார் பற்றி . . . | 77 |
| 13. | தொலை நோக்காளர் | 88 |

# 1. பண்பாட்டுப் புரட்சி

தமிழ் இனம் பண்பாட்டுப் படையெடுப்பால் அடிமைப்பட்டுக் கிடந்தது. முகவரி இன்றி தவித்தது. 1916-17-ஆம் ஆண்டுகளிலே உதயமான இயக்கத்தினை பார்ப்பனரல்லாதார் இயக்கம் (Non Brahmin Movement) என்று எதிர்மறைப் பெயரில் அழைத்தனர்.

இதைக் கண்டு குமுறியவர் தந்தை பெரியார். அதற்கு மாற்றாகத் 'திராவிடர்' என்ற வரலாற்று முகவரியை, மூதறிஞர்களும் மறுக்க இயலாவண்ணம் தந்தார் பெரியார்!

அந்தப் பண்பாட்டுப் புரட்சியின் துவக்கமே, அடையாளம் இல்லாத இனம் என்ற அவலத்தைப் போக்கிற்று. இந்த இனத்தைப் போற்றினார். உலக நாகரீக வரலாற்றில் மூத்தகுடி, முதற்குடிமக்களாகிய திராவிடரின் இன்றைய நிலை என்ன?

பெரியார் பெரிதும் கவலை கொண்டார். இவருக்கு முன்னர்த் தோன்றிய "ஜீவாத்மாக்களும், பரமாத்மாக்களும், மகாத்மாக்களும்" அடுத்த உலகத்தைப் பற்றியே சிந்தித்தனர், பேசினர், ஆசை காட்டினர், அதற்கு 'வழி' கூறினர்.

தந்தை பெரியார்தம் முறையோ, இந்த உலகத்தையும் இனி வரப்போகும் அறிவியல் சார்ந்த புதுமை உலகத்தையும் பற்றியே சிந்தித்த புதிய முறையாகும். தான் சிந்தித்தால் போதாது என்று கருதித், தன் மக்களையும் சிந்திக்க வைக்க அரும்பாடு பட்டார்!

அந்தத் 'தகுதி' அவருக்கு எப்படி உள்ளது என்பதற்கு அவர்கள் கூறும் விளக்கம்: அடக்கமும் ஆழமும் நிறைந்த ஒன்றாகும்!

"ஈ.வெ. ராமசாமி என்கிற நான் திராவிட சமுதாயத்தைத் திருத்தி, உலகில் உள்ள மற்ற சமுதாயத்தினரைப்போல் மானமும்

அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டை மேற்போட்டுக்கொண்டு அதே பணியில் இருப்பவன்.

அந்தத் தொண்டு செய்ய எனக்கு 'யோக்கியதை' இருக்கிறதோ இல்லையோ, **இந்நாட்டில் அந்தப் பணி செய்ய யாரும் வராததினால் நான் அதை மேற்போட்டுக் கொண்டு தொண்டாற்றி வருகிறேன்.**

இதைத்தவிர, வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவை அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுப்பதாலும், நான் அத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

சமுதாயத் தொண்டு செய்பவனுக்கு இதுபோதும் என்றே கருதுகிறேன்."

சுயமரியாதை இயக்கம் என்று தந்தை பெரியார் அவர்கள் ஏன் பெயர் சூட்டினார்? அதுவே அவர் துவக்கிய பண்பாட்டுப் புரட்சிக்கான கால்கோள் விழா - "திராவிட சமுதாயத்தைத் திருத்தி, மானமும் அறிவு பெறவே," சமத்துவம் அற்ற நிலை போக்கிடவே பிறந்த பகுத்தறிவு இயக்கமே சுயமரியாதை இயக்கம்!

அவ்வியக்கத்திற்கு மனிதநேயமே அடிப்படையாகும் - ஏன் அப்படி பெயர் வைத்தார் என்பதற்கு அவர்கள் கூறும் விளக்கம் இதோ!

### சுயமரியாதை

"இந்த உலகத்தில் உள்ள எல்லா அகராதிகளையும் கொண்டு வந்து போட்டு, ஒரு ஏடாய்ப் புரட்டிப் பார்த்தாலும், அழகும், பொருளும், சக்தியும் நிறைந்த வார்த்தையாகிய 'சுயமரியாதை' என்ற வார்த்தைக்கு மேலானதாகவோ, ஈடானதாகவோ உள்ள வேறு ஒரு வார்த்தையை யாராலும் கண்டு பிடிக்க முடியாது" **('குடிஅரசு'- 1.6.1930)** என்று கூறுகிறார் தந்தை பெரியார்.

தமிழினம் ஆரியப் பண்பாட்டுப் படையெடுப்பால் வருண கொள்கைக்கு ஆட்பட்டு சாதிகளாகச் சிதறுண்டு போயின. இனப்பெயர் மறைந்து தமிழன் தனித்தனி சாதிப் பெயர்களுக்கு ஆளாகித் துண்டுதுண்டாகிப் போய்விட்டான். இந்த நிலையில்தான் தந்தை பெரியார் அவர்கள் தமிழர்கள் ஓரினம் என்பதை உணர்ந்துகொள்ளவும், ஆரியத்தால் இழிவுபடுத்தப்பட்ட நிலையிலிருந்து விடுபட்டுத் தன்மானம் பெறவும் இனத்தின் பெயரால் ஓர் இயக்கம் கண்டார்.

# 2. பெரியார் ஒரு (புது உலகம்) வரலாற்றுப் படைப்பாளர்!

### சுயமரியாதை இயக்கம்

உலக மக்கள் யாவரும் மகிழ்ச்சி பொங்க - சகோதர உணர்வுடன் - ஏற்ற தாழ்வகற்றி - சமவாய்ப்பு, சம நுகர்ச்சியுடன் - இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்பதே பெரியாரின் கொள்கை - குறிக்கோள். இதற்குக் குறுக்கே நிற்கும் எந்தத் தடைகளையும் அகற்றவேண்டும் என்பதே அவரின் அணுகுமுறை.

அவர் கண்ட இயக்கம் சுயமரியாதை இயக்கம். அவ்வியக்கத்தின் நோக்கங்களாக அவர் அறிவித்தவை:

"மக்களுக்கு உயிரை விட மானம் பெரிதென்பது அதன் முதலாவது கொள்கை. எல்லோரும் பிறவியில் சமம் என்பது இரண்டாவது கொள்கை. பெண்களுக்குச் சமவுரிமை இருக்க வேண்டுமென்பது மூன்றாவது கொள்கை. ஜாதி மத பேதங்கள் தொலையுமட்டும் நாட்டின் ஒற்றுமையையும் எல்லோருடைய நன்மையையும் உத்தேசித்து ஒவ்வொரு ஜாதிமதத்திற்கும் அரசியலில் சரியான பிரதிநிதித்துவம் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

கண்மூடி வழக்கங்களும் மூட நம்பிக்கையும் தொலைய வேண்டும். நேரம், சாஸ்திரம், புராணம், பழக்கம் என்னும் காரணங்களால் மனிதனின் பகுத்தறிவைக் கட்டுப்படுத்தக் கூடிய பார்ப்பனீயம் ஒழிந்து சுயேச்சையும் அறிவும் வளர வேண்டும்".

('குடிஅரசு' - 27.5.1928)

## அன்னியன் சுரண்டிச் செல்லும் நாடு

## "தற்குறி"த் தன்மை வாய்ந்த நாடு தமிழ்நாடு!

*"தமிழன், ஏன் சமுதாயத்தில் 4-ஆவது 5-ஆவது ஜாதியாக இருக்க வேண்டும்? தமிழ் மகள் ஏன் சூத்திரச்சியாய், தாசியாய், அன்னியனுக்கு வைப்பாட்டியாய் இருக்கவேண்டும்? தமிழன் ஏன் 100-க்கு 90-பேர் தற்குறிகளாக இருக்கவேண்டும்? ஏன் பியூன் உத்தியோகத்திலும், தெருக் கூட்டும் வேலையிலும், கக்கூசு எடுக்கும் வேலையிலும் 100-க்கு 100 பேர் தமிழர்களாகவே இருக்கவேண்டும்? தமிழ்நாட்டில் எல்லாச் செல்வங்களும் இருந்தும் தமிழன், ஏன் இந்த நாட்டில் பிழைப்பு இல்லாமல் வெளிநாட்டுக்குக் கூலிகளாகப் போகவேண்டும்? தமிழ்நாடு ஏன் மற்ற எல்லா நாட்டாலும் வந்து சுரண்டிக் கொண்டு போகும் கேள்வி கேட்பாரற்ற மடமக்கள் நாடாக இருக்கவேண்டும்?*

*இந்த நிலை உள்ள நாடு உலகத்தில் எங்காவது இருக்கிறதா? இந்தியாவில் எங்காவது இருக்கிறதா? தமிழர்களுக்கு இது தெரியவில்லை என்றால், தமிழ்த் "தேசிய"வாதிகளுக்கும் இது தெரியவில்லை என்றால், தமிழனுக்கு மானம், அறிவு, தேசாபிமானம், சமூகாபிமானம், மொழி அபிமானம் இருப்பதாக எப்படிச் சொல்லிக்கொள்ள முடியும்?"*

*"சமுதாயத்தில் தமிழன் ஒரு வகுப்பாக இல்லையே, இதற்கு என்ன காரணம்? தமிழனே, தமிழனை இழிவுபடுத்துகிறான்; ஒருவர் தொட்டதை ஒருவர் சாப்பிடுவதில்லை; ஆசாரி வீட்டில் செட்டியார் சாப்பிடுவதில்லை; செட்டியார் வீட்டில் ஆசாரி சாப்பிடுவதில்லை. கோமட்டிச்செட்டியார் வீட்டில் வாணியச் செட்டியார் சாப்பிடுவதில்லை, வாணியச் செட்டியார் வீட்டில் மேல்கண்ட மூவரும் சாப்பிடுவதில்லை. இவர்கள் நால்வரும் முதலியார், பிள்ளை, நாயக்கர் வீட்டில் சாப்பிடுவதில்லை. அவர்களும் இந்த நால்வர் வீட்டில் சாப்பிடுவதில்லை. அன்றியும் இவர்கள் இத்தனை பேரும் ஒருவருக்கொருவர் கீழ் ஜாதி-மேல் ஜாதி என்று பேசிக்கொள்ளப்படுகிறார்கள். தமிழர்களில் பாடுபடும் மக்கள் எல்லாம் கீழ் ஜாதியாக*

மதிக்கப்படுகிறார்கள். பழந்தமிழர்கள் பறையர், பள்ளர், சக்கிலியர், சண்டாளர்களாக இருக்கிறார்கள்.

இப்படி நூற்றுக்கணக்கான ஜாதியாய்த் தமிழர்கள் பிரிந்து ஒருவரை ஒருவர் இழிவு படுத்திக்கொண்டி ருக்கிறார்கள். அதனாலேயே அய்ரோப்பியனுக்கோ - ஆரியனுக்கோ - முஸ்லிமுக்கோ இருக்கும் சமுதாயப்பற்றும், ஒற்றுமையும் தமிழ்நாட்டில் தமிழனுக்கு இல்லை. இதை எல்லாம் தமிழர்கள் இன்று சிந்திக்க வேண்டாமா?" என்று கேட்கிறார் தந்தை பெரியார். ( "தமிழர் தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு"- 11.1.1942-இல் தந்தை பெரியார் ஆற்றிய உரை)

## சாதி ஒழிப்புக் கொள்கை

சாதி ஒழிய வேண்டும் என்பதைத் தமது வாழ்நாள் இலட்சியமாகவும், அதற்கான அறவழிப் போராட்டங்களில் ஈடுபடுவதைத் தமது பணியாகவும் கொண்ட தந்தை பெரியார் அவர்களின் கருத்து உலக அரங்கில் ஏற்றுக் கொள்ளும் வகையில், அது ஒழிக்கப்பட வேண்டியது அவசர அவசியம் என்ற குரல் ஓங்கி வருவது, தந்தை பெரியார் அவர்கள் துவக்கிவைத்த பணி தொய்வின்றித் தொடரவே செய்யும் என்பதற்குச் சில முக்கிய ஆதாரங்கள் உள்ளன.

ஆசிய நாட்டின் வளர்ச்சிபற்றி ஆய்வு செய்த சுவீடன் நாட்டுப் பொருளாதார நிபுணரும் பேராசிரியருமான குன்னர் மிர்தால் (Gunnar Myrdal) அவர்கள் 'Asian Drama' என்ற பெயரில் அவரது ஆய்வை ஒரு நூலாக எழுதினார்.

"இந்தியப் பாரம்பரியத்தில் ஜாதி என்பது மிகமிக ஆழமானதும் மிகக் கடுமையானதுமாகும். அறுவை மருத்துவத்தால் மட்டுமே அதனை அடியோடு அழிக்க முடியும். இதற்கான உள்ளார்ந்த அக்கறையுடைய அரசியல் அழுத்தமெதுவும் அங்குக் கிடையாது." அதில் அவர்,

"Caste is so deeply entrenched in India's tradition that it cannot be eradicated except by drastic surgery and for this,

there has been no serious political pressure" (page 278) எனக் குறிப்பிட்டுள்ளார்.

தந்தை பெரியார் அவர்கள் பல ஆண்டுகளாக சாதி ஒழிப்புப் பற்றிக் கூறிவரும் கருத்து இதுவே. தன்னை ஒரு சமுதாய அறுவைச் சிகிச்சை மருத்துவர் என்று தந்தை பெரியார் அவர்கள் கூறியதோடு, மருத்துவமுறையில் உள்ள Physician's Cure என்ற வெறும் மருந்துமூலம் குணப்படுத்த முடியாத நோய் இது; Suregeon's Cure என்ற அறுவைச் சிகிச்சை மூலம் மட்டுமே குணப்படுத்த முடியும் என்றார்.

குன்னர் மிர்தாலுக்கு அவரது பொருளாதார ஆய்வுக் கருத்துகளுக்காக நோபல் பரிசு கிடைத்தது .

தந்தை பெரியார் அவர்களுக்கு நோபல் பரிசு கிடைக்காமலிருக்கலாம்; ஆனால் அவரது கருத்து நோபல் பரிசைப் பெற்றிருக்கிறது என்று நாம் மகிழ வேண்டும்.

அவரது பண்பாட்டுப் புரட்சியின் எதிரொலி உலக மாமன்றங்களில் எல்லாம் கேட்கத் துவங்கிவிட்டன!

1999-இல் மும்பை நகரத்தில் I H E U (International Humanist and Ethical Union) என்ற பன்னாட்டு மனிதநேயர்கள் அமைப்பு கூட்டிய நான்கு நாள் மாநாட்டில் அதன் உறுப்பினர் என்ற முறையில் பெரியார் தொண்டர்களும் , திராவிடர்கழகத்தினரும் கலந்துகொண்டபோது அது முன் வைக்கப்பட்ட தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியாவில் சமூக மாற்றம், முன்னேற்றம் ஏற்படவேண்டுமெனில், சாதி ஒழிப்புப்பற்றிய வேலைத்திட்டம் வேண்டும். இதை உலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டு சென்று பரிகாரம் தேடிட முனையவேண்டும். இக்கருத்து, அண்மையில் ஜெனீவா மாநாட்டில் ஏற்கப்பட்டுள்ளமை பெரியார் செய்த பண்பாட்டுப் புரட்சியின் நல்ல விளைவுகளில் ஒன்றல்லவா?

தமிழர்களிடத்தில் இல்லாத சாதி ஆரிய நுழைவால் வந்து சேர்ந்தது. சாதி ஒழிப்பு மனித உரிமைக்கும், நேயத்துக்கும் எதிரானது. தமிழர் ஒற்றுமையையும் சிதைக்கக்கூடியது.

அதனால்தான் சாதி ஒழிப்பை உயிர் மூச்சுக் கொள்கையாகக் கொண்டார் பெரியார்.

"வருணாசிரமத்தின் மூலம்தான் தீண்டாமை அமலில் இருக்கிறது. வருணாசிரமம் இல்லையானால் தீண்டாமை பரவ, நிலைபெற இடமில்லை" என்றார் ('குடிஅரசு' - 7.8.1929).

தந்தை பெரியார் இறுதியாக நடத்திய "தமிழர் சமுதாய இழிவு ஒழிப்பு மாநாட்டில்" (8, 9.12.1973) நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

"இந்திய அரசியல் சட்டத்தில் 17-ஆவது விதியில் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதற்குப் பதிலாக ஜாதி (Caste) என்ற சொல்லை மாற்றி ஜாதி ஒழிப்பை அரசியல் சட்டமே பிரகடனப்படுத்துவதாக அமைய வேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

சாதி ஒழிப்புத் திருமணங்களை ஏராளமாக நடத்தினார்கள். கழக இளைஞர்கள் கட்டளைத் திருமணமாக ஏற்றுச் செயல்படுத்தியும் காட்டினார்கள் - செயல்படுத்தியும் வருகிறார்கள்.

1929-இல் செங்கற்பட்டில் நடத்தப்பட்ட முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில் சாதிப் பட்டத்தைத் துறப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அந்த மாநாட்டிலேயே சாதிப் பட்டத்தைத் தூக்கி எறிந்தார்கள் சுயமரியாதை வீரர்கள். இன்றைக்கு பெயர்களுக்குப்பின் சாதிப் பட்டம் தமிழ்நாட்டில் அருகிவிட்டதா - இல்லையா?

இது தந்தை பெரியார் கொளுத்திய பண்பாட்டுப் புரட்சிக்கான அடையாளமாகும்.

தந்தை பெரியார் இயக்கத்தைத் துவக்கிய அந்தக் கால கட்டத்தில் தமிழ்நாட்டின் நிலை என்ன?

சென்னை ஜார்ஜ் டவுனிலும், மவுண்ட் ரோட்டிலும் பஞ்சமர்களும், நாய்களும், பெரு வியாதியஸ்தர்களும்

பிரவேசிக்கக்கூடாது (உணவு விடுதிகளில்). ('குடிஅரசு' - 25.5.1936) என்று எழுதிவைத்தார்கள்.

1935-இல் கும்பகோணம் நகராட்சியில் "அக்கிரகாரத்துக்கு கக்கூஸ் எடுக்கத் தாழ்த்தப்பட்டவர்களை நியமிக்கக்கூடாது - அதற்குப் பதிலாக சூத்திரர்களை ஏற்பாடு செய்யவேண்டும்" என்று தீர்மானம் போடப்பட்டது. ('குடிஅரசு' 6.10.1935)

1901 மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் சென்னை மாகாணம் பிராமணர்கள் 3.4 %, சூத்திரர்கள் 94.3 % என்றுதானே இருந்தது?

அரசு ஊழியர்கள் சூத்திரர்கள் என்று 1927 வரை பதியப்பட்ட அவலநிலைதானே இருந்தது ? - 1927 அக்டோபர் 22, 23 ஆகிய தேதிகளில் சென்னை எஸ்.அய்.ஏ.ஏ. மைதானத்தில் நடத்தப்பட்ட பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தின் முதல் மாநாட்டில்தானே இதனை நீக்க வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ? அம்மாநாட்டில் தந்தை பெரியார், பனகல் அரசர், டாக்டர் ஏ. இராமசாமி முதலியார், ஜே.எஸ். கண்ணப்பர் முதலியோர் பங்குகொண்டனர். இந்த வரலாறெல்லாம் நம் இளைஞர்களுக்குத் தெரிவிக்கப்படுவது அவசியமாகும். 'சூத்திரன் என்றால் ஆத்திரம் கொள்!' என்ற அந்த முழக்கம் ஆதிக்கபுரியினரைப் பணிய வைத்தது!

வட இந்தியாவைப் பொறுத்தவரையில் நிலைமை இன்னும் மோசமாகும். மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சராக இருந்த பாபு ஜெகஜீவன்ராம் அவர்கள் காசியில் முன்னாள் உத்தரப்பிரதேச முதலமைச்சர் டாக்டர் சம்பூர்ணானந்த் அவர்களின் உருவச்சிலையைத் திறந்து வைத்தார். உயர் சாதி (காயஸ்தா) சிலையைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜெகஜீவன்ராம் திறந்ததால் சிலை தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறிக் காசி பல்கலைக்கழகத்தைச் சார்ந்த உயர் சாதி மாணவர்கள் கங்கை தண்ணீரைக் கொண்டுவந்து சிலையைக் கழுவித் தீட்டுக் கழித்தனர் என்றால், எவ்வளவு பெரிய அநீதி! இவ்வளவுக்கும் பாபு ஜெகஜீவன்ராம் படித்தவர் - பணக்காரர் - பெரிய பதவியிலும் இருந்தவர். எந்த நிலையில் இருந்தாலும்

பிறப்பு எதுவோ அதுவேதான் ஒரு மனிதனின் தகுதியை நிர்ணயிப்பது என்பது நியாயமாகுமா?

அந்த நிகழ்ச்சி நடந்த மறுநாள் சென்னை வந்த பாபு ஜெகஜீவன்ராம் ஆத்திரம் பொங்க உணர்ச்சி எரிமலையாக வெடித்தார்!

மராட்டிய மாநிலத்தில் நாக்பூரில் பாபுலால் பாரத்தே என்ற தாழ்த்தப்பட்ட தோழர் சாய்பாபா கோயில் ஒன்றைக் கட்டிட 50,000 ரூபாய் நன்கொடை அளித்தார். கோயில் செலவுகளுக்கு என்று மேலும் 5,000 ரூபாய் அளித்த அவரை, கோயிலுக்குள் உள்ளே நுழைய அனுமதிக்கவில்லையே!

உச்சநீதிமன்றம் அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்கிற தீர்ப்பை இப்பொழுது வழங்கி இருக்கிறது. காலத்தின் நிர்ப்பந்தம் நீதித்துறையிலும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது என்பதுதான் உண்மை!

## தமிழ்நாட்டில் காந்தி

காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது நடைபெற்ற ஒரு முக்கிய சம்பவம்பற்றிய ஒரு குறிப்பு மிக முக்கியமானது.

தேசப்பிதா என்று அனைவராலும் அழைக்கப்படும் அவர், சாதியில் வைசியர் என்பதால்தானே 1927-க்குமுன், சென்னையில் அவரை விருந்தினராக வரவேற்ற திரு. சீனுவாச அய்யங்கார் வீட்டுத் திண்ணையில் அவர் அமர்த்தப்பட்டார். அவருக்கோ அவரது துணைவியார் அன்னை கஸ்தூரிபாய்க்கோ சீனுவாச அய்யங்கார் வீட்டு அடுப்பங்கரை வரையில் செல்ல இயலவில்லை; ஆனால் சுயமரியாதை இயக்கம் 1925-26-இல் பிறந்து வளர்ந்தபிறகு நிலைமை மாறுகிறது. 'தமிழ்நாட்டில் காந்தி' (பக்கம் 520-521).

மன்னார்குடியிலிருந்து நாகப்பட்டினம் பாசஞ்சர் இரயிலில் மறுநாள் காலை தஞ்சாவூருக்கு அண்ணலும் அவரது குழுவினரும் வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொரு பெரிய நகருக்கு வரும்போதும், கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக அதற்கு முந்திய இரயில் நிலையத்தில் காந்திஜி இறங்கி விடுகிறார் என்பதை

அறிந்த தஞ்சை மக்கள் இன்று ஒரு தந்திரம் செய்தார்கள். மன்னார்குடியிலிருந்து தஞ்சைக்குள் டாக்ரோடு வழியாக நுழையக்கூடிய இடத்தில் கூடி நின்றார்கள். ஆனால் இம்முறை காந்திஜி அவ்வாறு இறங்கவில்லை. திட்டப்படி தஞ்சாவூர் இரயில் நிலையத்திலேயே வந்து இறங்கினார். மறுபடியும் பொது மக்களுக்கு ஏமாற்றம் தான். தஞ்சையில் காந்திஜி குழுவினர் "உக்கடை ஹவுஸ்"-இல் தங்கியிருந்தார்கள்.

இந்த நகரில் நடைபெற்ற ஒரு முக்கியமான காரியம் நீதிக் கட்சியைச் சேர்ந்த சில தலைவர்களும் காந்திஜியும் சந்தித்து பேசியதேயாகும். பன்னீர்செல்வம், உமா மகேசுவரம் பிள்ளை (நீதிக்கட்சித் தலைவர்கள்), உக்கடைத்தேவர், சைபத் தாஜுதின், கார்குடி சின்னையாபிள்ளை, பட்டுக்கோட்டை தண்டபாணி செட்டியார் ஆகியோருக்கு அண்ணல் பேட்டி அளித்தார் (மற்றும் பாப்பாநாடு ஜமீன்தார் கே. நடராஜன் முதலிய பல பிரமுகர்களையும் காந்திஜி சந்தித்துப் பேசினார். கே. நடராஜன் தாயாரான வயதான அம்மையார் காந்திஜியைப் பார்க்க வந்தபோது அண்ணல் அவரை அன்போடு வரவேற்று, பெண்கள் கட்டிக் கொள்ளத்தக்க மெல்லிய புடவைகள் கதரில் இருப்பதாகச் சொன்னார். நீதிக்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது இருதரப்பினருக்குமே நல்லதாகப் போயிற்று. காந்திஜியின் தரப்பைக் அவர்களும், அவர்கள் தரப்பை காந்திஜியும் அதிகம் புரிந்துகொள்ள இந்தச் சந்திப்பு உதவியது.

நீதிக்கட்சித் தலைவர்களான பன்னீர்செல்வமும், உமா மகேசுவரம் பிள்ளையும் காந்திஜியைச் சந்தித்துப் பேசிய உரையாடல் "சுதேசமித்திரன்" இதழில் அந்தக் காலத்தில் விவரமாக வெளியாகியிருந்தது. சுருக்கத்தைப் படித்துப் பார்ப்பது கூட இப்போது சுவையாக இருக்கும்.

உமா மகேசுவரம் பிள்ளை: பிராமணர் பிராமணரல்லாதார் விவகாரம் வரவரச் சிக்கலாகி வருகிறது. தலைவர்கள் இதில் தலையிட்டு, சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும்.

மகாத்மா: பிராமணரல்லாதாரே இந்த இயக்கத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர் பிராமணரல்லாதாருக்கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்து விடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார். என்னைப் போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். ஆனால் ஈரோடு இராமசாமி நாயக்கர் தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும், என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு, மன நிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு வந்தபோது, எஸ்.சீனிவாச அய்யங்கார் வீட்டில் தாழ்வாரத்தில் தான் உட்கார்ந்திருந்தேன். இப்போது அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகி வருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரைவரை செல்கிறாள் என்று காந்தியார் கூறினார்.

இந்த வரலாற்றுக் குறிப்பு எதைக் காட்டுகிறது?

தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கம், அவர் ஏற்படுத்திய புரட்சி காந்தியாரின் சுயமரியாதைக்கே கூட உத்தரவாதத்தை அளித்துள்ளதே!

சுயமரியாதை இயக்கம் தோற்றுவிக்கப்படுவதற்குமுன் ஒரு அய்யங்கார் வீட்டில் பெரிய தலைவரான காந்தியாருக்கே இருந்த மரியாதை என்ன? சுயமரியாதை இயக்கப் புரட்சிக்குப்பின் காந்தியாருக்கு அளிக்கப்பட்ட மரியாதை என்ன என்பதை இதன்மூலம் தெரிந்து கொள்ளலாம்.

# 3. "திராவிடர்" என்றார் ஏன்?

மானுடப்பற்றுக் கொண்ட உலகத்தின் ஒப்பற்ற சுய சிந்தனையாளரான தந்தை பெரியார் அவர்கள்- தனக்கெனத் தனிப்பற்றுக் கொள்ளாதவர் - பின் ஏன் திராவிடர் இனம், தமிழர்கள், தமிழ்நாடு, தமிழர்தம் மொழி, பண்பாடு என்பதைப்பற்றிப் பேசுகிறார்?

"இது ஒரு சுய முரண்பாடு அல்லவா?" என்ற கேள்வி சிலருக்குள் எழலாம்.

உலகத்திற்கே பயன்படும் ஒரு மருந்தினைக் கண்ட விஞ்ஞானிகள்கூட அதனை அவரவர் வீட்டிலே, நாட்டிலே, அவரவர் ஆய்வுக் கூடத்தில்தானே ஆய்வு செய்து பார்க்கிறார்!

புத்தர் தனது கொள்கைகளை, ஒரு வாழ்க்கை முறையாக ஆக்கியவர். பார்ப்பனீய வர்ணாசிரம முறை, சமஸ்கிருதப் பண்பாட்டு எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு, மனிதநேயம் ஆகிய அவரது மக்களின் (வெகுஜன மொழி) பாலி மொழியில் தானே அந்த மக்களுக்கு சொல்லத் தொடங்கி, இன்று உலக முழுவதும் பரவியுள்ளது? அதுபோல எதற்கும் ஒரு தொடக்கம் அந்தந்தப் பகுதியில்தான் என்பது உள்ள நடைமுறைதானே!

இந்தியாவில் உள்ள பல மொழித்தடைகளாலும், இந்தியா முழுவதும் அன்றுமுதல் இன்றுவரை படித்தவர்கள் மேல் சாதியினராக ஆதிக்கம் செலுத்துபவர்கள் அதிகார வர்க்கத்தினராகியதாலும், விளம்பரம், தகவல் தொடர்பு சாதனங்கள் அந்த உயர் சாதியினரிடம் உள்ளதாலும் அந்த இரும்புத்திரைகளைக் கடந்து பற்பல இடங்களிலும் ஒத்த கருத்துள்ளவரிடையேகூட பரவ வாய்ப்பு முன்பு குறைவாகவே இருந்தது!

ஆனால் அதையும் தாண்டித் தந்தை பெரியார்தம் சமூகப் புரட்சிக் கொள்கைகள் வடபுலத்திலும் மய்யம் கொள்ளுவது தவிர்க்க இயலாத காலத்தின் கட்டாயமாகிவிட்டது!

ஒரு இனத்திற்கு அடையாளம் காட்ட அவர்கள் முனைந்ததே தனி மனிதனின் சுயமரியாதையை உயர்த்திடவே. பிறவியினால் ஏன் பேதம் இழிவு உயர்வு - தாழ்வு காட்டப்படவேண்டும்? நாயைவிட, பன்றியைவிட, மலத்தைவிடக் கேவலமாகவா ஆறறிவு படைத்த மனிதன் நடத்தப்படுவது? - அதற்குள்ள மூலகாரணம் என்ன? என்று அவர் ஆராய்ந்தபோது, ஒரு சுகாதாரத்துறை - மருத்துவராகவே காட்சி அளித்து (Health Dept. Doctor) பிறகு, சமூக நோய்த் தடுப்பைப் பற்றிக் கூறிடும் நிலையில், சமூக நோய் ஒழிப்பிற்கான (Medical Dept. Doctor) மருத்துவர் என அவரது சமூகப் புரட்சி அமைந்தது!

மனிதருள் ஏன் - எப்படி ஒருவர் தாழ்ந்த பிறவி, மற்றொருவர் உயர்ந்த பிறவி?

மனிதனின் பிறவியில் ஆண் உயர்வு, பெண் தாழ்வு என பிறவி பேதம் ஏன்? என்று அவரிடம் பொங்கி வழிந்த மனிதாபிமானம் (Humanism) கேள்வி கேட்டது. அவர் ஓர் சுய சிந்தனையாளர் ஆனபடியால் எந்த மன ஒதுக்கீடும் (Mental reservation) இன்றி ஆசாபாசத்திற்கும் இடந்தராது விடைகாண முயன்றார்!

இந்தப் புதிய புத்தனின் "போதிமரம்" - மக்கள் கூட்டமே! அவர்களின் அவதியும் அவமானமும் அடிமைத்தனமும் தான். அவை ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அவரது 'தவமானது'; விடியல் உருவாக்கச் சமூக விடுதலை தேவை என்று முழங்கினார்!

ஆனால் அவர் எந்த மக்களிடையே தொண்டாற்றினாரோ அவர்கள் அடிமை விலங்கை அணிமணியாகக் கருதி, சுமையைச் சுகமாக எண்ணி, ஏமாந்து, இந்த உலகத்தின் சுமை அடுத்த உலகத்தின் (மோட்சம்) சுகம் என்று நம்ப வைக்கப்பட்ட

பரிதாபகரமானவர்கள். "இந்த உலகில் நீங்கள் உழலும் துன்பம், நாளை அடுத்த உலகில் நீங்கள் அனுபவிக்கப் போகும் இன்பத்திற்கான அச்சாரம்" என்னும் இடையறாத மூளைச் சாயப் பிரச்சாரத்தை ஏற்றவர்கள். எனவே அவர்களது எதிர்ப்பையும் தந்தை பெரியார் அவர்கள் சமாளிக்க வேண்டியிருந்தது.

அவர் போன்று சமூகப் புரட்சிச் சிந்தனைக்கு தம் வாழ்வின் இறுதிக் கட்டத்தில் தயாரான வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகள்கூட, "கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப் போக" என்று கூறிச், சாதி, மத, சாத்திரக் குப்பைகள் பற்றியெல்லாம் பேசியும் எழுதியும் பார்த்து, சலித்து, சங்கடப்பட்டு இறுதியில் "கடைவிரித்தோம் கொள்வாரில்லை கட்டிவிட்டோம்" என்றார். ஆனால், தந்தை பெரியார் ஓர் பிடிவாதக்காரர்: எடுத்த செயலை, அவர் தொடுத்த போரை முடிக்காமல் விடமாட்டேன் என்று கூறி எதிர் நீச்சல் அடிப்பதில் இன்பங்கண்டார்! பெரும் அளவில் வெற்றியும் பெற்றார்.

"வெற்றியா தோல்வியா என்று நாம் இலட்சியப் பயணத்தில் ஒரு பணியில் - கிளர்ச்சியில் இறங்கும்போது அது வெற்றியில் முடியுமா? தோல்வியில் முடியுமா என்று சிந்திப்பதைவிட, அது செய்யப்படவேண்டிய ஒன்றா? செய்யப்பட வேண்டாததா? என்று பார்த்து, செய்யப்பட வேண்டிய அவசியமானதுதான் என்றால் பிறகு அதில் உடனே இறங்கியே ஆகவேண்டும். இலட்சியங்கள் என்ற பொருளைப் பெற கஷ்ட நஷ்டங்கள் என்ற விலையைக் கொடுத்துத்தான் ஆகவேண்டும்" என்றார்!

மனித நேயம், மக்கள் ஒருமைப்பாடு, பொது ஒழுக்கத்தினைப் போற்றிப் பாதுகாக்கப் பெருநோக்குச் சிந்தனை கொண்ட பெரியார் ஏன் கடவுள் மத மறுப்பு போன்ற கடுமையான பிரச்சாரத்தில், கிளர்ச்சியில் இறங்கினார்? என்ற கேள்விக்கு ஒரு அற்புதமான தத்துவத்தை, விளக்கத்தை அய்யா அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தரத் தவறவில்லை.

அவரது பண்பாட்டுப் புரட்சிக்கான அருமையான விளக்கம் (raison detre)

"ஒரு மனிதனை அவனிருக்கும் சிறையிலிருந்து விடுதலை செய்து கொண்டு வரவேண்டும் என்று விரும்பும் எவரும், முறைப்படி அவன் எந்த வழியில் சிறைக்குள் சென்றானோ அதேவழியில், அதே வழியின் மூலம்தான் வெளியே கொண்டுவரவேண்டும். அதைவிடுத்து வேறு வழிகளில் வந்தால் அந்த விடுதலை அவனுக்கு நீடிக்குமா? நிலைக்குமா?"

எனவேதான் அவரது போர் முறைகளும், அவர் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சிக்கு அவர் வகுத்த வியூகங்களும் தனித்தன்மை வாய்ந்தனவாகவே அமைந்தன!

அறிஞர் அண்ணா அவர்கள், "பெரியாரின் போர்முறை விசித்திரமானது. முன்னால் உள்ள எதிரிகளுடன் போர் புரிவது மற்றவர் போர் முறை.

எதிரிகளின் மூலபலத்தையே முறியடிப்பதுதான் பெரியாரின் போர் முறை.

கண்ணுக்குத் தெரியாத எதிரிகளையும் தாக்கித் தகர்ப்பது அவரது போர் முறை" என்றார்.

இது ஒரு சரியான விளக்கமாகும். அவரது போர்முறை பல்வேறு அரசுகளிடம் பெரும் வெற்றிகளை ஈட்டித் தந்துள்ளது என்பது உண்மையான சமூகப்புரட்சி வரலாறாகும்.

## சூத்திரர் என்பதற்குப் பதிலாகத்தான் திராவிடர் என்கிற பெயர்

திராவிடர் என்ற இனப் பெயரின் அடிப்படையில் கழகம் கண்டதற்குத் தந்தை பெரியார் கூறும் காரணம் வரலாற்று ரீதியானதும் பண்பாட்டு ரீதியானதுமாகும். அதுபற்றி தந்தை பெரியார் இதோ கூறுகிறார்:

"பிராமணர், பிராமணர் மகாசபை வைத்துக் கொள்கிறார்கள். அதனால் அவர்களுக்குப் பெருமையும்,

உரிமையும் கிடைக்கின்றன. நாம் நம்மைச் சூத்திரன் என்று கூறிக் கொண்டால் உயர் சாதியானுக்கு அடிமையாயிருக்கும் உரிமைதான் கிடைக்கும். பார்ப்பானின் தாசி மக்கள் என்ற பட்டம்தான் கிடைக்கும். அந்தச் சூத்திரத் தன்மையை அழிப்பதையே தமது முக்கிய வேலையாகக் கொண்டிருப்பதால்தான், அப்பெயரால் எவ்விதச் சலுகையோ, உரிமையோ கிடைக்காததால்தான் அப்பெயரில் உள்ள இழிவு காரணமாகத்தான், அத்தலைப்பில் அதே இழிதன்மையுள்ள திராவிடராகிய முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், வைசியர்கள், க்ஷத்திரியர்கள், வேளாளர்கள், நாயுடு, கம்மவார், ஆந்திரர், கன்னடியர், மலையாளிகள் ஆகியவர்கள் எல்லாம் ஒன்று சேர மறுத்து வருகிறார்கள். அதனால்தான், நம்மைச் சூத்திரர் என்று கூறிக்கொள்ளாமல் திராவிடர் என்று கூறிக் கொள்கிறோம். சூத்திரர் என்பவர்களுக்குத் 'திராவிடர்' என்பது தவிர்த்து வேறு பொருத்தமான பெயர் வேறு யாராவது கூறுவார்களானால் அதை நன்றியறிதலுடன் ஏற்றுக்கொண்டு எனது அறியாமைக்கு வருந்தி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவும் தயாராயிருக்கிறேன்." ("மொழியாராய்ச்சி", பவானி வள்ளுவர் பதிப்பகம் வெளியீடு)

## "கலந்துவிட்டது" என்பது...

"ஆரியன், திராவிடன் என்பது கலந்துபோய்விட்டது, பிரிக்க முடியாதது, ரத்த பரீட்சையாலும் வேறுபடுத்த முடியாதது என்று சிலர் வாதாடலாம். அது நமது கருத்தை அறியாமல் பேசிய அறிவற்ற பேச்சு என்றே சொல்லுவேன். ஆரிய திராவிட ரத்தம் கலந்துவிட்டிருக்கலாமே தவிர ஆரியத் திராவிட ஆச்சார அனுஷ்டானங்கள் கலந்து விட்டனவா? "பிராமணாள் ஓட்டல்" பிராமணர்களுக்கு மாத்திரம், பிராமணன் - சூத்திரன், பறையன், சக்கிலி, பிராமணனல்லாதவன் ஆகிய பிரிவுகள் எங்காவது கலந்துவிட்டதா? பேதம் ஒழிந்துவிட்டதா? பிராமணர்கள் என்பவர்கள் உயர்வும் பாடுபடாமல் அனுபவிக்கும் போக போக்கியமும், சூத்திரர்கள், பறையர்கள், சக்கிலிகள் (திராவிடர்கள்) என்பவர்கள் இழிவும், கஷ்ட உழைப்பும், ஏழ்மையும், தரித்திர வாழ்வும் என்னானது சரி சரி

கலந்துவிட்டதா? பிரிக்க முடியாது கலந்துவிட்டதா? அல்லது "அறிவு", "கல்வி", "தகுதி", "திறமை" கலந்துவிட்டதா? எது கலந்துவிட்டது? ரத்தம் கலந்தாலென்ன கலவாவிட்டால் என்ன? வாழ்வு, போக போக்கியன், உரிமைக்காக கலக்க வேண்டாமா?

சட்டைக்காரரர் என்று ஒரு கூட்டம் இருக்கிறது, இது வெள்ளை ஆரிய கருப்பு திராவிட ரத்தக் கலப்பு என்பதில் எவருக்கும் ஆட்சேபணை கிடையாது என்றாலும், நமக்கும், அவர்களுக்கும் எதில் கலப்படம் இருக்கிறது? அவர்கள் தனி சமுதாயமாக வெள்ளை ஆரியர் (அய்ரோப்பியர்) போலவே ஆச்சார அனுஷ்டானங்களில் நம்மில் இருந்து பிரிந்து உயர்வாழ்வுக்கு வாழுகிறார்கள். இவர்களைப் பார்த்து கருப்பு திராவிடன் இரத்தத்தால் பிரிக்க முடியாதவர்கள் என்று சொல்லுவதில் பொருள் உண்டா என்று பாருங்கள். **("குடிஅரசு", 14,7.1945)**

பண்பாட்டு அடிப்படையில் உள்ள வேறுபாட்டைத் தான் தந்தை பெரியார் சுட்டிக் காட்டுகிறாரே தவிர மற்றபடி வேறொரு இன அழிப்பு என்கிற சிந்தனை அவர் கருத்தில் கிடையாது. அவரது வாழ்நாளில் அதைச் செய்ததுமில்லை!

# 4. பண்பாட்டுப் புரட்சியில் பெரியார் பெற்ற வெற்றிகள் சில எடுத்துக்காட்டுகள்

1. 1924-இல் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது, திருவாங்கூர் ராஜ்யமான கேரளத்தில் வைக்கம் என்ற ஊரில், கோயிலைச் சுற்றி நான்கு வீதிகள் உள்ளதால், அவ்வீதிகளில், கீழ் ஜாதியான ஈழவ - தாழ்த்தப்பட்டோர் நடக்க உரிமை இல்லை என்ற சமூக அநீதியை எதிர்த்து, வெடித்துக் கிளம்பியதே 'வைக்கம் சத்தியாகிரகப் போராட்டம்'.

தெருவில் நடக்க மனிதனுக்கு உரிமை வாங்கித் தந்த அந்த சமூக நீதிப் போராட்டம் இந்தியாவின் முதல் மனித உரிமைப் போராட்டம் எனக் கூறலாம்.

அதனை நடத்தியவர்களை அன்றைய மன்னராட்சியும் திவானாக இருந்த ராகவ அய்யங்காரும், கைது செய்து சிறையில் அடைத்து அப்போராட்டத்தினைத் துவக்கத் திலேயே நசுக்கிவிட முனைந்தனர். சிறையில் இருந்துகொண்டு, தமிழ்நாட்டுக்கு, தந்தை பெரியார் அவர்களுக்கு, கேரள காங்கிரஸ் தலைவர் ஜோசப் ஜார்ஜ் அவர்கள் கடிதம் எழுதி சத்தியாகிரகத்தை அவரை முன்னெடுத்து நடத்தக் கேட்டுக் கொண்டார். அதை ஏற்று கேரளம் சென்று, பெரியார் முன்னின்று நடத்தி, இருமுறை கைதாகி, வைக்கம் சத்தியாகிரகத்தை பெற்றிபெறச் செய்தார். திரு.வி.க. அய்யா அவர்களுக்கு 'வைக்கம் வீரர்' என்று பட்டம் சூட்டினார். பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி, எம்.ஜி.ஆர். தலைமையிலான அரசு வைக்கத்தில் தந்தை பெரியாருக்குச் சில நினைவுச் சின்னங்களை அமைக்க முடிவு செய்தது. தந்தை பெரியார் சிலை, நூலகம், பூங்கா ஆகியவை அங்கே

அமைக்கப்பட்டு 1994-ஆம் ஆண்டு செல்வி ஜெ. ஜெயலலிதா தலைமையில் அமைந்த அரசு அங்குச் சிறப்பான முறையில் திறப்பு விழாவை நடத்தியது. *(31.1.1994)*



அந்நாள் நிதியமைச்சரும் சீரிய பகுத்தறிவாளருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், அச்சிலையைத் திறந்து வைத்தார். தமிழக அரசு சார்பாக நடைபெற்ற அவ்விழாவிற்கு நான் தலைமை தாங்க அழைக்கப்பட்டு கலந்துகொண்டேன்.

இன்றும் தமிழக அரசின் செய்தி விளம்பரத்துறை அதனைக் கேரள அரசின் கூட்டு ஒத்துழைப்புடன் பாதுகாத்து வருகிறது .

70 ஆண்டுகளுக்குப் பிறகு அங்கேயே இரு மாநில அரசுகள் சார்பில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்படுவது அவரது சமூகப் புரட்சிக்குக் கிடைத்த வெற்றி அல்லவா?

1974-75-இல் வைக்கம் சத்தியா கிரகத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்கள் அங்கு நடைபெற்றபோது, பிரதமர் திருமதி. இந்திராகாந்தி வைக்கத்தில் துவக்கி வைத்தார்; நிறைவு விழா நிகழ்ச்சிக்கு அன்னை ஈ.வெ.ரா. மணியம்மையார் அவர்களை அக்குழுவினர் அழைத்து பெருமைப்படுத்தினர். அவர்களோடு நானும் சென்று பங்கேற்று உரையாற்றினேன்.

கேரள மக்களும் தலைவர்களும் தந்தை பெரியார் அவர்களது தொண்டிற்கே முதல் பாராட்டுத் தெரிவித்தனர்.

## வைக்கம்

அதே வைக்கம் தொகுதியில் பிறந்த தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த திரு. கே.ஆர். நாராயணன் அவர்கள் குடிஅரசு தலைவராக, முதல் குடிமகனாக விளங்கினார் என்பது எவ்வளவு பெரிய சமுதாயப்புரட்சி !.

அது பண்பாட்டுப் புரட்சி பெற்ற வெற்றியின் மணி மகுடம் போன்றது அல்லவா?

# 5. சமூகநீதி என்னும் நெம்பு கோல்!

*1927 முதல் வகுப்புவாரி உரிமை அரசு ஆணை ('கம்யூனல் ஜி.ஓ') சென்னை மாநிலத்தில் அமலில் இருந்ததால்தான்,*

*'பள்ளத்தில் வீழ்ந்திருந்த மனிதர் எல்லாம்*

*விழிபெற்றுப் பதவி கொள்ளும் நிலை' ஏற்பட்டது!*

*ஆயிரமாயிரமாண்டுக் காலமாக ஒடுக்கப்பட்ட, ஊனப் படுத்தப்பட்ட பலகோடி மக்களுக்குக் கிடைத்த ஊன்றுகோல் அந்த வகுப்புரிமை ஆணை!*

*பல காலப் பட்டினிப் பட்டாளத்திற்குப் பரிமாறப்பட்ட பந்தி விருந்து அது!*

*அதில் பெரியாரின் பங்களிப்பு மிகவும் அதிகம்! அவர்கள் அரசியலை விட்டு வெளியேறி, சூளுரைத்து, சுயமரியாதை இயக்கம் காணுவதற்கே அவர் காங்கிரசு கட்சிக்குள் நடத்திய பல்முனை உள்ளிருப்புப் போராட்டங்கள் தானே காரணம்?*

*1950-இல் அந்த வகுப்புரிமை - சமூகநீதி - ஆணையை இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் உள்ள சில விதிகளைச் சுட்டி, சென்னை உயர்நீதிமன்றத்தில் திருமதி சண்பகம் துரைராஜன் என்ற 'உயர்ஜாதி'ப் பெண், வகுப்புரிமை சட்டம் செல்லாது என்று வழக்குத் தொடுத்தார்.*

*அரசியல் சட்ட ஆறு வரைவாளர்களில் ஒருவரான அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் அவர்களே, சென்னை உயர்நீதி மன்றத்தில் நேரில் வழக்கில் ஆஜராகி, வாதாடினார். உயர்நீதிமன்றம் அவ்வாணையைச் செல்லாது என்று பெரும்பான்மை தீர்ப்புமூலம் - (ஜஸ்டிஸ் திரு. என். சோமசுந்தரம் மட்டும் செல்லும் என்ற தனி தீர்ப்பு* (dissenting Judgement) *வழங்கினார்.) அறிவித்தது.*

உச்ச நீதிமன்றத்திலும் தமிழ்நாடு அரசு செய்த மேல் முறையீடும் தள்ளுபடி செய்யப்பட்டு, சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. ஆதிக்க ஜாதியினர் மிகவும் மகிழ்ந்தனர்.

தந்தை பெரியார் களம் கண்டார் - விழிகளில் குளம் கொண்டோர் சார்பில்! அறப்போராட்டம்! பொது மக்களை ஓரணியில் திரட்டினார். பண்டித நேரு பெருமகனார் பிரதமராக இருந்தார். டாக்டர் அம்பேத்கர் சட்ட அமைச்சர் என்ற நிலையில் இந்திய அரசியல் சட்டத்தின் முதல் சட்டத்திருத்தம் (First Amendment.. to the Constitution of India) கொண்டுவரப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, வகுப்புரிமை ஆணைக்கு மீண்டும் புத்துயிர் வந்தது! சமூகநீதி வென்றது!

இதுபற்றி

"As noted earlier, Champakam Dorairajam's case invalidated the Madras reservations in educational institutions and by implication barred all preferential treatment outside the sphere of government employment. The decision caused a political agitation in South India and led to the amendment of Article 15 by adding clause (4).

In the debate on Amendment Prime Minister Nehru remarked:

"The House knows very well and there is no need for trying to hush it up, that this particular matter in this particular shape arose because of certain happenings in Madras".

(Parliamentary Debates Vol XIII - 13 (Part II) at Col. 961.5.

The second Backward Classes Report Vo. II

**இதன் தமிழாக்கம்:**

*"முன்னரே குறிப்பிட்ட வண்ணம், சண்பகம் துரைராஜன் வழக்கு சென்னை மாநிலத்தின் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடுகள் செய்வதைச் செல்லாதது என்றாக்கியது. அதன் நிமித்தமாகப் பெறப்படும் முறையில் அரசுப் பணித்துறையில் முன்னுரிமைச் சலுகைகள் காட்டப்படுவது முழுவதும் தடைக்குள்ளாக நேர்ந்தது. அவ்வழக்கு முடிவு தென்னிந்தியாவில் அரசியல் கிளர்ச்சி தோன்றக் காரணமாயிற்று. அதன் விளைவே அரசியல் சட்ட 15ஆம் உறுப்பு 4 ஆம் பிரிவு ஒன்றைக் கூட்டி, சட்டத் திருத்தம் பண்ண வேண்டிய நிலைக்குக் கொண்டு செலுத்தியது. சட்டத் திருத்த விவாதத்தின் போது பிரதமர் நேரு வெளியிட்டதாவது: இந்தக் குறிப்பிட்ட வடிவத்தில் இந்தக் குறிப்பிட்ட நிகழ்வு தோன்றியுள்ளமை சென்னையில் நிகழ்ந்த சில குறிப்பிட்ட நடப்புகளினால்தான் என்பதை இந்நாடாளுமன்றம் நன்கறியும். அதை மூடி ஒளித்து வைக்க வேண்டியதில்லை."*

*[நாடாளுமன்ற விவாதங்கள் தொகுதி* XIII-13 *(பாகம்* II*)]*

*தந்தை பெரியார் அவர்கள் நிகழ்த்திய சமூகப் புரட்சி - ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்னும் அடிப்படை உரிமை இதன்மூலம் நிரந்தரமாகப் பெற்ற மிகப்பெரிய வெற்றி அல்லவா?*

*இதுபோலவே, மாநில அரசிடம் மட்டும் இருந்த இந்த ஒதுக்கீட்டுச் சமூகநீதி வாய்ப்புக்கள், மத்திய அரசின்கீழ் இயங்கும் அனைத்து அரசு, மற்றும் பொது நிறுவனங்களிலும் கிடைப்பதற்கு தொடர்ந்து பெரியார் மறைவுக்குப் பின்னரும் அவர் தொடுத்த வகுப்புரிமைப் போர் தொய்வின்றி தொடர்ந்தது - தொய்வின்றி அவரது தொண்டர்களால் !*

*42 மாநாடுகளும், 16 போராட்டங்களும் நடத்தப்பட்டன.*

*அது 1980-இல் மண்டல் பரிந்துரையாக மலர்ந்தது; அப்பரிந்துரைகள் 1992-இல் காய்த்து, கனிந்தன. சமூக நீதிக்காவலர் வி.பி. சிங் அவர்கள் பிரதமரான நிலையில் 1990-இல்*

அந்த மத்திய அரசின் ஆணையாக வந்தபோது, அவர் நாடாளுமன்றத்தில் சமூகப்புரட்சியாளர்களது தொண்டினைப் பாராட்டி நன்றியுடன் நினைவுகூர்ந்து, நாடாளுமன்ற ஏடுகளில் பதியவைத்தார்.

அது நாடாளுமன்ற ஏடுகளில் பதிந்தது என்பது ஒருபுறம் நமக்கு மகிழ்ச்சி அளித்தது என்றாலும், மண்டல் பரிந்துரைபற்றிய 9 நீதிபதிகளைக் கொண்ட 'பெஞ்ச்' தீர்ப்பு வழங்கியபோது அதில் தனித் தீர்ப்பு தந்த ஜஸ்டீஸ் திரு. எஸ். ரத்தினவேல் பாண்டியன் அவர்கள், பிரதமர் வி.பி. சிங் நாடாளுமன்றத்தில் பேசிய அதே வரிகளை தனது தீர்ப்பிலேயே எடுத்துக் கையாண்டு, உச்ச நீதிமன்ற வரலாற்று ஆவணத்திலும் பெரியாரின் சமூகப் புரட்சி பதியப் பெற்றது என்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது!

உச்சநீதிமன்ற நீதிபதி ஜஸ்டீஸ் திரு. எஸ். ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் இந்திரா சகானி Vs இந்திய யூனியன் வழக்கில் (மண்டல் கமிஷன் 19வது பாராவில்) அந்த வைரவரிகள் இதோ:

"Recognizing and recalling the self-less and dedicated social service carried on by those great leaders from their birth to the last breath, the then Prime Minister while making his clarificatory statement regarding the implementation of the Mandal Commission's report in the Rajya Sabha on the 9th August 1990 paid the tributes in the following words:

"In fact this is the realisation of the dream of BHARAT RATNA Dr. B.R. Ambedkar, of the great PERIYAR RAMASWAMY and Dr. Ram Manohar Lohia."

**இதன் தமிழாக்கம்:**

அந்த மாபெருந் தலைவர்கள் தங்களின் பிறப்பிலிருந்து இறுதி மூச்சுவரை தன்னலம் துறந்து சமுதாயத் தொண்டறத்தில் தங்களை ஒப்படைத்துக் கொண்டு உழைத்தமையை நினைவு கூர்ந்தும் அங்கீகாரம் செய்தும் அன்றைய பிரதமர் 1990 ஆகஸ்ட்

9 அன்று ராஜ்யசபாவில் விளக்க அறிக்கை ஒன்றை நிகழ்த்தும் வேளையில் மண்டல் ஆணைய அறிக்கையை நடப்புச்சூழல் பற்றிய

கீழ்வரும் சொற்களில் புகழுரையாகப் பேசினார்:

"மெய்யாகவே, பாரத ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கர், தலைசிறந்த பெரியார் இராமசாமி, டாக்டர் ராம் மனோகர் லோகியா ஆகியோரின் கனவின் நனவாக்கமே இது!"

தந்தை பெரியார் வலியுறுத்திய சமூகநீதிக் கொள்கை இன்றைக்கு இந்தியாவின் கொள்கையாகிவிட்டது. சமூகநீதி என்னும் இட ஒதுக்கீடு என்பது வெறும் கல்வி, உத்தியோக சம்பந்தப்பட்டது மட்டுமன்று; இந்த இரண்டும் இல்லாமல் ஆக்கப்பட்டதால் கண்ணிருந்தும் குருடனானவனுக்குப் பார்வை கொடுப்பது. நீ மண்ணல்ல - மனிதன் என்கிற வெளிச்சத்தைக் கொடுப்பதாகும்.

கல்வியும் உத்தியோகமும் ஒருவனின் சமூகத் தகுதியை உயர்த்தக்கூடியது. பெரும்பாலான ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிர்வாகத்திலும் ஆட்சி அமைப்பிலும் உரிய பங்கை அளிப்பதாகும்.

தகுதி போய்விடும் - திறமை அழிந்துவிடும் என்று குறுக்குச்சால் ஓட்டிப் பார்த்தார்கள் - நீதிமன்றம் சென்று பார்த்தார்கள். கடைசியில் அவர்களே எங்களுக்கும் இடஒதுக்கீடு வேண்டும் என்று மண்டிபோட்டு மனுபோடும் நிலையை உருவாக்கினார் தந்தை பெரியார். சமூகநீதியைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார் சொல்லும் கருத்து இதுதான்.

**"ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்கவேண்டும் என்று கருதி ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு குணமாக இருக்குமோ அதுபோலத்தான் எனக்குத் தோன்றுகிறது. மற்றும் அந்தத் தாய் தனது மக்களின் - உடல்நிலையில் இளைத்துப்போய் வலிவுக் குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு**

**அளிக்கிற போசனையைவிட எப்படி அதிகமான போசனையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தைகளாக ஆக்கவேண்டுமென்று பாடுபடுவாளோ, அதுபோலத்தான் நான் மற்ற வலுக்குறைவான பின்தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவு நான் பார்ப்பனர்களிடமும் மற்ற வகுப்புகளிடமும் காட்டிக்கொள்ளும் உணர்ச்சியாகும்" ('விடுதலை'- 1.1.1962).**

*தந்தை பெரியாரின் இந்தத் தாய் உள்ளத்தை என்னென்று சொல்வது! இதைப் புரிந்துகொள்ளாமல் நாத்தழும்பேற அவரைத் திட்டியவர்கள், தாக்கியவர்கள் உண்டு. ஆனால், அதுகுறித்து அவர் என்றைக்கும் அஞ்சியதுமில்லை - கெஞ்சியதுமில்லை.*

*தந்தை பெரியார் சமூகத் துறையில் இந்தச் சமூகச் நீதிக் கொள்கைக்குச் சட்ட அங்கீகாரம் பெற்றுத் தராவிட்டால் ஒடுக்கப்பட்ட மக்களின் நிலை என்னவாகியிருக்கும்?*

*குறிப்பாக ஒன்றை எடுத்துக்காட்ட முடியும். 1929-ஆம் ஆண்டுவரை. சென்னை பச்சையப்பன் கல்லூரியில் தாழ்த்தப் பட்டவர்களுக்கும், முஸ்லீம்களுக்கும் இடமளிப்பதில்லை. அவர்கள் இந்து மதத்தைச் சாராதவர்கள்; அவர்களுக்கு ஒரு இந்து அறக்கட்டளையால் நடத்தப்படும் கல்லூரியில் இடமில்லை என்று கூறிவிட்டனர். அதனை எதிர்த்து "குடிஅரசு" எழுதியது - தந்தை பெரியார் போராடினார். கடைசியில் தாழ்த்தப்பட்டவர்களும் இந்துக்களே என்று ஒரு தீர்ப்பு நீதிமன்றத்தில் பெறப்பட்டுத் தாழ்த்தப்பட்டவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.*

*அந்தக் கல்லூரியில் படித்த காரணத்தால்தான் ஒருவர் பட்டதாரி ஆனார். தமிழ்நாடு தேர்வாணையம் நடத்திய தேர்வில் உயர்நிலை அதிகாரி ஆனார்; பின் மாவட்ட ஆட்சியர் ஆனார்; அரசுச் செயலாளர் ஆனார்; தலைமைச் செயலாளர் ஆனார்; ஆளுநருக்கு ஆலோசகர் ஆனார்; அதன்பின் மத்திய தேர்வாணையக்குழு உறுப்பினர் ஆனார்; உச்சக்கட்டமாக ஒரு மாநிலத்தின் ஆளுநரும் ஆனார்.*

ஒரு பச்சையப்பன் கல்லூரியில் இடம் கிடைத்ததால்தானே இந்த நிலை ?. இட ஒதுக்கீடு என்பதன் விளைவு எத்தகையது என்பதற்கான எடுத்துக்காட்டு இது.

கல்வியும் உத்தியோகமும் கிட்டும்போது அவனை அடிமைப்படுத்த முடியாது - அவன் தலை நிமிர்ந்தவன் ஆகிவிடுகிறான் - சமூக மாற்றத்திற்கான நெம்புகோல் அது அந்த நெம்புகோலாகத்தான் தந்தை பெரியார் அவர்கள் இருந்தார்கள்.

# 6. மொழியில் மறுமலர்ச்சி

1938-39-இல் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பிரிக்கப்படாத சென்னை மாநிலத்தின் முதல் அமைச்சராக வந்தபிறகு, பள்ளிகளில் இந்தியைக் கட்டாயமாகத் திணித்தார். அதன் விளைவாக "இந்தி ஒழிக, தமிழ் வாழ்க" என்ற முழக்கத்துடன் இந்தி எதிர்ப்பு இயக்கம் வெடித்துக்கிளம்பியது!

புயலெனக் கிளம்பிய அந்த எதிர்ப்பு ராஜாஜி அமைச்சரவை பதவி விலக ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. 1940-இல் கட்டாய இந்தி ஆணை அன்றைய அரசால் திரும்பப் பெறப்பட்டது.

பிறகும் 1947-48ல் உயர்நிலைப்பள்ளிகளில் கட்டாய இந்தி முன்போல இல்லாவிட்டாலும், மறைமுகத் திணிப்பாக நுழைய முயன்றதும் தோல்வியில்தான் முடிந்தது.

அதன் தொடர்ச்சியான விளைவுதான், 1965-ல் மொழிப்போராக அரசியல் உத்வேகத்துடன், தமிழ் மாணவர்களால் முன்னெடுத்து நடத்தப்பட்ட கிளர்ச்சியாகியது; வன்முறைகளும்கூட அதில் வெடித்தது தவிர்க்க இயலாததாகிவிட்டது.

அன்றைய முதல் அமைச்சர் திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் கோட்டையில் இருந்துகொண்டு, மாணவர் பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்த ஒரு முடிவு, ஒரு தீப்பொறி, பெருநெருப்பாய் மாறியது. அன்றைய (காங்கிரஸ்) அரசு தவறான அணுகுமுறை என்ற 'பெட்ரோலை' ஊற்றித் தீயை அணைக்க முயற்சித்தது!

அதற்கு அக்கட்சி மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டியதாயிற்று.

திராவிடர் இயக்க ஆட்சிக்கு அதுவே பாதை வகுத்தது எனலாம்.

1967 தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்கள் முற்றிலும் இன்ப அதிர்ச்சி அடையும் வண்ணம் முடிவுகள் அமைந்தன! அன்றுமுதல் இன்றுவரை அதாவது 35 ஆண்டுகளாக, திராவிடர் இயக்கங்களே மாறி மாறி, ஒன்று ஆளுங்கட்சி மற்றொன்று எதிர்க்கட்சி என்று ஆண்டு வரும் அரசியல் அதிசயத்தைத் தமிழ்நாட்டில் தோற்றுவித்தது!

1967-இல் அமைந்த திராவிட முன்னேற்றக் கழக (தி.மு.க.) ஆட்சியில், முதல் அமைச்சர் அண்ணா அவர்கள் தனது ஓராண்டுக் காலத்தில் முப்பெரும் சாதனைகளைச் செய்ததை எண்ணிப், பூரித்து மகிழ்ந்தார்!

1. சென்னை மாநிலம் என்பதற்குப் பதிலாகத் தாய்த் தமிழ் மண்ணிற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியது.

2.தந்தை பெரியார் அவர்களால் புகுத்தப்பட்ட பண்பாட்டுப் புரட்சியாம் புரோகிதம், மற்றும் சடங்குகள் அற்ற பெண்ணுரிமையை அங்கீகரிக்கும் - வாழ்க்கைத் துணைநலமான சுயமரியாதைத் திருமணங்களுக்குச் சட்டவடிவம் கொடுத்தது!

(சட்டமன்றத்தில் எதிர்ப்பே இன்றி அந்த சட்டத்திருத்தம் ஏகமனதாக நிறைவேறியது குறிப்பிடத்தக்கது.)

3.தமிழ், ஆங்கிலம், இந்தி என்ற மும்மொழித் திட்டத்திற்குப் பதிலாக இருமொழித் திட்டமே (தமிழ், ஆங்கிலம் மட்டுமே) என்ற ஆட்சி மொழிக் கொள்கைத் திட்டமும் ஒருமனதாக நிறைவேறிக் கடந்த 35 ஆண்டுகளாகக் தொடர்கின்றது.

இதைப்பற்றிக் குறிப்பிட்ட முதல்வர் அண்ணா அவர்கள், பின்வரும் எந்தக் கட்சியும் இந்த முறையை மாற்றம் செய்யத் துணியமாட்டாது என்று உறுதியுடன் கூறினார்! இன்றுவரை அது நிலைத்த உண்மையாகிவிட்டது.

தந்தை பெரியார் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சிக்கு இந்தச் சுயமரியாதைத் திருமணம் செல்லுபடிச் சட்டம் ஓர் அரசியல் அங்கீகாரம் ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் இரண்டு முக்கிய வரலாற்று, அதிசயங்கள் உள்ளடங்கியுள்ளன.

1. பகுத்தறிவாளரான ஒரு தலைவரை (தந்தை பெரியாரை) வழிகாட்டியாக, ஆசானாகக் கொண்டு, அவருக்குத் தமது அமைச்சரவையே காணிக்கை என்று பிரகடனப்படுத்தியதுடன், அவரது சீடர்களும் அதிகாரபூர்வமாக - அதுவும் ஜனநாயக நெறிமுறையில் மக்களின் பேராதரவுடன் - ஆட்சியைப் பெற்ற ஓர் அதிசயம்!.

2.இரண்டாவது, அந்த ஆசான் வாழ்நாளிலேயே அந்த லட்சிய வெற்றிக்கனியை அவர் தம் சீடர்கள் தர, ஆசான் பெற, அமைந்தது மற்றொரு மிகப்பெரிய அதிசயம் ஆகும்!.

அமெரிக்காவில் சிகிச்சை முடிந்து ஓய்வில் இருந்த முதல்வர் அண்ணா அவர்கள் தந்தை பெரியார் அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் "நான் அறிந்த வரையில், உலக வரலாற்றில் தனது கொள்கை வெற்றியினைத் தன் வாழ்நாளிலேயே கண்ட ஒரே தலைவர் தாங்கள்தான். எவ்வித மனக்குறையுமின்றித் தாங்கள் நீண்டகாலம் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டது மேலே சுட்டிக் காட்டிய கருத்துக்கான ஆதாரம் அல்லவா? (இந்தச் சுயமரியாதைத் திருமணம் பற்றி பிறகு விளக்குவோம்.) மொழிக் கிளர்ச்சி என்ற பெயரில் தமிழ்நாட்டில் இந்தி மொழிக்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு ஆழமாகவே இருந்ததற்குத் தந்தை பெரியார் அவர்கள்தான் மூல காரணம் ஆவார் என்பதைக் கூறிய முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த திரு. சீத்தாராம் கேசரி அவர்கள், தந்தை பெரியார் அவர்கள்பால் மிகுந்த பற்றும் மரியாதையும் கொண்டவர். அவரது சமூகப் புரட்சியின் மூலம் தான் இந்தியாவில் இரண்டாவது சுதந்தரம், ஒடுக்கப்பட்ட

மக்களுக்குக் கிட்டும் என்பதை என்னிடம் அடிக்கடிக் கூறுவார்.' அதைப் பல பொது மேடைகளிலும் அவர் கூறியுள்ளார்.

அவர் என்னிடம் ஒருமுறை ஒரு சந்தேகம் கேட்டார். "தந்தை பெரியார் ஒருமிகப் பெரிய பகுத்தறிவாளர்; தனக்கு வேறு எந்தப் பற்றும் கிடையாது; அறிவுப்பற்று வளர்ச்சிப்பற்று, மனிதப்பற்றுதான் தனக்கு உண்டு என்று கூறிய மிகப் பெரிய புரட்சியாளரான அவர், இந்தியை வெறும் மொழிக்காக எப்படி எதிர்த்திருக்க முடியும்? அதற்கு வேறு ஆழமான காரணங்கள் இருக்கவேண்டுமே! அதை எனக்கு நீங்கள் தெளிவுபடுத்த வேண்டும்" என்று கேட்டார்.

"தங்கள் கேள்வி நியாயமானதே. ஆரியப்பண்பாட்டுப் படையெடுப்புக்கு, சமஸ்கிருத மொழி-கலாச்சாரம் புகுத்தப்படுவதற்கு - ஒரு முன்னோடி முயற்சிதான் வட நாட்டு மொழியான இந்தியை தமிழ்நாட்டு மக்கள் மத்தியில் புகுத்த முனைந்தது. It was a disguised form of imposition of Sanskrit alien culture - process of Sanskritisation. இதற்கு ஆதாரம் : 1938-ல் இந்தியைக் கட்டாயமாகப் பள்ளியில் புகுத்துமுன், அன்றைய முதல் அமைச்சரான திரு.சி.இராஜகோபாலாச் சாரியார் அவர்கள், சென்னை லயோலா கல்லூரியில் பேசும்போது, 'தமிழ்நாட்டு மக்கள் சமஸ்கிருதம் படிப்பது அவசியம். ஆனால் அதைக் கூறினால் அதற்கு உடனே கடும் எதிர்ப்புக் கிளம்பும் என்பதால் முதல்கட்டமாக இந்தியைப் படியுங்கள் என்று கூறுகிறோம்' என குறிப்பிட்டதாகும்.

இந்தியைப் படிக்க ஆரம்பித்தால், பிறகு சமஸ்கிருதம் புகுவதற்கு, எந்த எதிர்ப்பும் இருக்காது என்பது அவர்களது தொலைநோக்குத் திட்டம்" என்பதைக் கூறினேன்.

அந்தப்படியான ஒரு முயற்சியில் அரசியல் சட்டத்தை உருவாக்கிய பெரும்பான்மையான வரைவுக்குழுவினர் (1) அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் (2) கே.எம். முன்ஷி (3) டி.டி. கிருஷ்ணமாச்சாரி (4) சர்.என். கோபால்சாமி அய்யங்கார் ஆகியோர் ஆவர். (இவர்கள் நீங்கலாக மற்ற இருவர் -

சிறுபான்மை எண்ணிக்கை (1) டாக்டர் அம்பேத்கர், (2) மற்றொருவர் முகமது சாதுல்லா.)

நால்வரும் சமஸ்கிருதக் கலாச்சாரம் பரவ வேண்டுமென்பதில் ஒன்றுபட்ட கருத்துள்ளவர்கள். அதனால்தான் இந்திய அரசியல் சட்டத்தில் ஆட்சி மொழியாக இந்தி இருக்கவேண்டும் என்ற சட்ட விதியைப் புகுத்தி எழுதும்போது, எந்த மாதிரி இந்தி என்பதைத் திட்டவட்டமாக குறிப்பிட்டு எழுதினர். Deva Nagari Script **"தேவ நாகரி எழுத்தில் உள்ள இந்தி"** ஆட்சி மொழியாக பயன்படுத்தப்படல் வேண்டும் என்று எழுதினர்.

'தேவ பாஷை' என்று சமஸ்கிருதத்தில் அவர்கள் அழைப்பதால் அதன் எழுத்துக்கள் தேவ-நகரி-தேவ-கடவுள் எழுத்துகள் என்றே கூறி சமஸ்கிருத மயத்தை மிகவும் நாசூக்காகச் செய்தனர்.

காந்தி அடிகள் கூறிய இந்தி அல்ல அது. இந்துஸ்தானி அல்ல - இந்துஸ்தானி என்பதில் உருதுமொழிக் கலப்படம் உண்டு. இந்துஸ்தானி என்பது போர் வீரர்கள் பாசறையில் பேசப்பட்ட மொழி; உருது கலந்தது. ஆனால், மிகவும் சாமர்த்தியமானமுறையில் - அந்த இந்தி புகாமல் சமஸ்கிருத எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்ட தேவநாகரியைப் புகுத்தினர் என்பதைத் திரு. சீத்தாராம் கேசரி அவர்களிடம் நான் விளக்கியபோது; அதனை அப்படியே "உண்மைதான்; சரியாகச் சொன்னீர்கள், இந்த விளக்கத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என்றார். அவர் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட பீகார்க்காரர் - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்!

எனவே, தந்தை பெரியார் அவர்கள் இந்தி மொழித் திணிப்பை ஒரு பண்பாட்டுப் படையெடுப்பாகக் கருதித்தான் எதிர்த்தார். இதை அவர்களே பலமுறைகளில் பேசியும் எழுதியும் வந்துள்ளார்!

பெரியார் மனவேதனைப்பட்டுப் பேசியுள்ளதைக் கேட்போம்.

"இந்தியா....

தமிழனுக்கு எங்காவது உணர்ச்சி இருக்கிறதா?"

மொழி உணர்ச்சியைவிட சமுதாய உணர்ச்சியே மானத்தையும் அறிவையும் உருவாக்க தமது இன மக்களுக்கு வேண்டும் என்ற கவலைதான் அவரை இயக்கியது.

அவருக்கு அதில் அரசியல் பார்வை துளியும் இல்லை என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

பார்ப்பனர்களின் சமஸ்கிருதமயத்தால் தமிழர்களின் பெயர்கள் சமஸ்கிருதமயமாயின. ஊர்ப் பெயர்கள் சமஸ்கிருதமயமாக்கப்பட்டன. வழிபாட்டு முறை சமஸ்கிருமாயிற்று.

தந்தை பெரியாரின் பிரச்சாரத்தால், இயக்கத்தால் இதில் பெரும் மாறுதல்கள் நிகழ்த்தப்பட்டன. தமிழில் பெயர்கள் வைக்கத் தலைப்பட்டனர். அறிவுக்கொடி என்றும், அன்புமணி என்றும், தமிழ்மணி என்றும் பெயர்கள் நடைமுறைக்கு வந்தன. இராமய்யா அன்பழகன் ஆனதும், நாராயணசாமி நெடுஞ்செழியனானதும், சோமசுந்தரம் மதியழகன் என்றும், சாரங்கபாணி வீரமணி என்றும் பெயர் மாற்றம் செய்து கொண்டதும் மொழிப் புத்துணர்ச்சியின் விளைவால்தான். சமஸ்கிருதமய மாக்கப்பட்ட ஊர்ப் பெயர்களை மீட்கும் எழுச்சியும் ஏற்பட்டது. மாயவரம் மயிலாடுதுறை ஆனது ; இந்த வகையில்தான். ஸ்ரீ 'திரு' ஆனதும், அக்ராசனாதிபதி 'தலைவர்' ஆனதும், நமஸ்காரம் 'வணக்கம்' ஆனதும், வந்தனோபசாரம் 'நன்றி' ஆனதும், உபந்யாசம் 'சொற்பொழிவு' ஆனதும், தந்தை பெரியார் கொளுத்திய பண்பாட்டுப்புரட்சியின் விளைவால்தான்.

இலக்கியத் துறையிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டது. புராணங்களை எழுதிக் குவித்துக் கொண்டிருந்தவர்கள் மறுமலர்ச்சி சிந்தனையோடு எழுதத் தலைப்பட்டனர். மணிபிரவாள நடை மறந்துபோய் நல்ல தமிழ் நடை உருவாயிற்று.

"சுப்பிரமணிய துதியமுது" பாடிய கனகசுப்புரத்தினம் தந்தை பெரியாரின் தாக்கத்தால் புரட்சிக்கவிஞராக முகிழ்த்து எழுந்தார். தமிழ் மொழியில் தந்தை பெரியார் செய்த எழுத்துச் சீர்திருத்தம் இன்றைக்குச் சட்ட வடிவம் பெற்றுவிட்டது. தமிழ்நாட்டில் ம்ட்டுமல்ல, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிலும் சட்ட ரீதியான அங்கீகாரம் பெற்றுள்ளது.

தந்தை பெரியார் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சியின் போர்ப்படைத் தளபதிகளாக இலக்கியம், கலை, நாடகம் ஆகிய துறைகளில் பற்பலர் உருவாயினர்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தந்தை பெரியார் தம் பண்பாட்டுப் புரட்சியை இலக்கியத்தில் வடிவெடுத்துக் கொடுத்தார்.

அறிஞர் அண்ணா அவரது ஆற்றல்மிகு தளபதியாக ஆகி, பெரியார் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சிக்குப் பெரிதும் துணைநின்றார்.

அவர் துவக்கிய 'விடுதலை' நாளேட்டின் ஆசிரியராக ஈரோட்டில் சுமார் ஒன்றரை ஆண்டுகள் பணியாற்றி, பிறகு அய்யா அவர்களுடைய ஆசியுடனும், ஆதரவுடனும் தனியே 'திராவிட நாடு' என்ற வார இதழைத் துவக்கி, இளைய தலைமுறையை இக்கொள்கைக்கு ஈர்ப்பதில் பெரும் பங்காற்றினார்.

சொல்லேருழவராக, சொக்க வைக்கும் எழுத்துச் சிற்பியாக, சிறுகதை, நெடுங்கதை மன்னராக, பண்பாட்டுப் புரட்சி கலைத்துறையில் பரவினால் பல மடங்கு மக்களைச் சென்றடைந்து சிந்திக்க வைக்கும் என்று கருதி, அறிஞர் அண்ணா பல நாடகங்களை எழுதி அவரே-நடித்தார். தந்தை பெரியார் அவர்கள் தலைமையிலும் நடத்தினார்.

அவ்வாறு அண்ணா எழுதி நடித்த நாடகங்கள் 1. சந்திரோதயம் 2. சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் 3. நீதி தேவன் மயக்கம்.

இந்த நாடகங்கள் தந்தை பெரியார் நிகழ்த்திய பண்பாட்டுப் புரட்சியைப் பறைசாற்றிப் பரப்பியவை!

அந்த சிவாஜி கண்ட இந்து ராஜ்யத்தில் 'சிவாஜி' வேடம் ஏற்று நடித்த, வி.சி. கணேசனை தலைமை வகித்துப் பாராட்டிய தந்தை பெரியார் அவர்கள், "அவர் சிவாஜியாக மாறிவிட்டார்" என்று புகழ்ந்து, அவரது வாயால் "சிவாஜிகணேசன்" என்று வாழ்த்திப் பாராட்டினார். அதுவே கலை உலகத்தில் அவரது பெயராக நிலைபெற்று விட்டது.

அதுபோலத், திராவிட இயக்கத்தினால் ஈர்க்கப்பட்டு, மிகப்பெரிய புரட்சியை திரைப்படத் துறையில் செய்து, மக்கள் திலகமாக - கொடுத்துச் சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரராக - திராவிட இயக்கத்தின் அரசியல் பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டத்தை உருவாக்கியவராக - தந்தை பெரியார் தம் பண்பாட்டுப் புரட்சியை ஏற்று, திரைப்படத்தில் நடிக்கும்போது புராணப் பாத்திரங்களை ஏற்காது அமைதிப்புரட்சி செய்தவர் எம்.ஜி.ஆர்!

"நடிகவேள்" M.R. ராதா தந்தை பெரியாரின் பிரச்சாரப் போர்வாள், நாடுமுழுவதும் அவரது பண்பாட்டுப் புரட்சியினைத் தாங்கமுடியாமல், அவருக்கென்று நாடகத் தடைச் சட்டம் ஒன்றை அரசு கொண்டு வந்தது; அப்போது 144 தடைகள் போடப்பட்டன. அதைத் தாண்டி மக்களிடம் பிரச்சாரம் செய்தவர் - நடத்தியவர் ராதா!

நகைச்சுவை அரசர் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் நடித்த ஒவ்வொரு திரைப்படத்திலும், பெரியார் தம் பண்பாட்டுப் புரட்சிக் கருத்தினை நகைச்சுவைத் தேனில் குழைத்துக் கொடுத்தவர்!

இலட்சிய நடிகர் எஸ்.எஸ். இராஜேந்திரன், நடிகமணி டிவி. நாராயணசாமி, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி முதலியோர் இதில் கொள்கைப் பிரச்சாரக் கோமான்கள்!

தமிழ் இசைத் துறையில், எம்.எம். தண்டபாணி தேசிகர், தியாகராஜ பாகவதர், மதுரை சோமு, இசைச் சித்தர் சிதம்பரம் ஜெயராமன் இப்படிப் பலர்!

சினிமா, நாடகம் ஆகிய துறைகளில் இதனைச் செய்தவர்கள் கலைஞர் மு. கருணாநிதி, பாவலர் பாலசுந்தரம், சி.பி. சிற்றரசு, ஏ.வி.பி. ஆசைத்தம்பி இப்படி கலைத்துறைச் செம்மல்கள்.

இராவண காவியப் புலவர் குழந்தை போன்றவர்கள் இலக்கியத் துறையில் மறுமலர்ச்சிக் காவியங்களைப் படைத்தனர். இதுபோல எத்தனை எத்தனையோ உண்டு.

கோயில்களில் தமிழில் வழிபாடு செய்யலாம் என்கிற ஆணையே இங்கு வந்துவிட்டது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக உரிமை வேண்டும் என்று போராடினார் தந்தை பெரியார். அதை தமது இறுதி போராட்டமாகக்கூட அறிவித்தார். தந்தை பெரியார் மறைவுக்குப்பிறகு தொடர்ந்து திராவிடர் கழகம் போராடி வந்திருக்கிறது. அண்மையில் உச்சநீதிமன்றம் இந்தக் கருத்தை ஏற்றுக்கொண்டு தீர்ப்பும் வழங்கிவிட்டது என்றால் இது தந்தை பெரியார் கொள்கைக்கு மகத்தான வெற்றிதானே!

# 7. விழாவில் புரட்சி!

"தமிழர் விழா (பண்டிகை), என்பதாக, நான் எதைச் சொல்ல முடியும்? ஏதாவது ஒன்றுவேண்டுமே! அதை நாம் கற்பிப்பது என்பதும், எளிதில் ஆகக் கூடியது அல்லவே என்று கருதிப் பொங்கல் பண்டிகை என்பதைத் தமிழன் விழாவாகக் கொண்டாடலாம் என்று முப்பது ஆண்டுகளுக்கு முன் (1929-ல்) நான் கூறினேன். மற்றும் யாராவது கூறியும் இருக்கலாம்

இந்தப் பண்டிகையும் (Harvest Festival) அறுவடைத் திருவிழா என்ற கருத்தில் தானே ஒழிய, சங்கராந்திப் பண்டிகை, போகிப் பண்டிகை, இந்திர விழா என்று சொல்லப்படும் கருத்தில் அல்ல.

பொங்கல் பண்டிகை என்பது நாள், நட்சத்திரம் மதக் கதை ஆதாரம் முதலியவை எதுவுமே இல்லாமல் தைமாதம் ஒன்றாம் தேதி என்பதாக தைமாதத்தையும் முதல் தேதியையுமே ஆதாராமாகக் கொண்டதாகும்.

இதற்கு எவ்விதமான கதையும் கிடையாது. இந்தப் பண்டிகை, உலகில் எந்தப் பாகத்திற்கும், எந்த மக்களுக்கும் உரிமையுள்ள பண்டிகையாகும். என்றாலும், மற்ற இடங்களில் மற்ற மக்களால் பல மாதங்களில் பல தேதிகளில் பல பேர்களால் கொண்டாடப்படுவதாகும்" என்றார் தந்தை பெரியார்.

பொங்கல் இயற்கையோடு இணைந்து வாழும் வேளாண் நாகரிகத்தின் உயர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக விழாவாகும்!

உண்பதிலும், உடுப்பதிலும், அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு செயலிலும் மதங்கள் புகுந்து மனிதனை 'மதம்' பிடித்தவனாக்கிய நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றிடும் விழாவாகப் பொங்கல் விழா அமைந்துள்ளது!

## மத ஆதிக்கம் இல்லை !

சாதி மதஞ்சார்ந்த 'வாழ்வை Secularise - மதச்சார்பற்றதாக ஆக்குக', என்ற பகுத்தறிவு, மனிதநேய வளர்ச்சிச் சிந்தனை அடிப்படையில்தான்.

மதங்கள் ஆதிக்கம் செலுத்தாத

மணமுறையான சுயமரியாதைத்

திருமணத்தைக் கண்டார் பெரியார்!

(சுயமரியாதை) மணப்புரட்சி என்பது அடிப்படையில்

ஒரு மாபெரும் மனப் புரட்சியும் ஆகும்!

(It is a New Concept of Secularisation of Marriage System)

அதுபோலவே சுயமரியாதை சுதந்திர, தன்மானக் குடும்பத்தவரின் வாழ்வில் பொங்கல் விழா என்பதும் ஒரு மதங்கடந்த மகத்தான உழைப்புத் திருவிழா!

## திராவிடர்க்கு ஒரு ஆண்டு!

திராவிடருக்கு என ஒரு ஆண்டு இல்லையா? அதன் துவக்கம் எப்போது என்ற கேள்விக்கு அருமையான விடை தரும் விழாதான் பொங்கல் விழா!

தீபாவளியைப் பிரபலப்படுத்தும் பண்பாட்டுப் படையெடுப்பாளர்கள் பொங்கலைப் பின்னுக்குத் தள்ளுவது ஏன்? - இந்தக் கேள்விக்கு உண்மைத் தமிழ் பண்பாட்டுப் போராளிகள் விடை காண்பர்.

ஆரியக் கற்பனை, ஆபாசக் களஞ்சியம், அறிவை அண்டவிடாத அசிங்கம் - 'தீபாவளி' தமிழ்ச் சொல்கூட அல்ல!

தமிழனுடையது என்றால், அது தமிழ்ச் சொல்லாக அல்லவா இருக்கும்?

காபி (Coffee) என்பதை நாம் குடித்தாலும்கூட, அது அன்னியரால் இறக்குமதி செய்யப்பட்டு, நம்மிடையே புகுந்த

ஒன்று என்பதுபோல, தீபாவளியும், மற்ற மதப் பண்டிகைகளும் ஆகும்.

தனிப்பட்ட கதை, கற்பனைகளான செயற்கை அவை; பொங்கலோ உழைப்பைப் பெருமைப்படுத்தும் உன்னதத் திருவிழா! இயற்கையோடு இயைந்த இணையற்ற விழா!

திராவிடனுக்கு, திராவிட சமுதாயத்திற்கு, திராவிடப் பண்பாட்டிற்கு, வரலாற்று நடப்புக்கு, அறிவு ஆராய்ச்சிப் பொருத்தத்திற்கு ஏற்றவாறு விழா அல்லது பண்டிகை என்பதாக வேறு எதையாவது கூற முடிகிறதா? என்று கேட்ட பெரியார் தமிழரின் பொங்கல்தான் விழாது காக்கும் விழா என்று அறிவுறுத்தினார்!

## ஆரியத்தின் பார்வையில் விவசாயம்!

'பெரியார் ஒரு அழிவு வேலைக்காரர், ஆக்கம் அவர் அறியாதது என்று குற்றம் சுமத்திய பல குட்டை மனிதர்களின் செவிள்களில் ஓங்கி அறைவது போன்றது - இந்தப் பொங்கல் திருநாள்!'

ஆரியம் இதனை முழு மனதுடன் லட்சிய ரீதியாக ஏற்க முடியாது என்பது மனுதர்மத்தைப் படித்தால் விளங்கும்.

விவசாயம் என்பது பாவகாரியம்; மோசமான தொழில்.

"பிராமணன் ஏர் பிடிப்பது மகா மகா தோஷம்.

பிராமணன் ஏர் பிடித்தால் அது கொடுமை; நரகத்திற்கு அனுப்பி, அடுத்த ஜென்மத்தில் பன்றியாக பிறப்பான் என்ற அச்சுறுத்தல் தண்டனை!"

இது இந்து சனாதன, வர்ணாஸ்ரம தர்மம்!

'உழுவார் உலகத்தார்க்கு அச்சாணி' என்பது தமிழர்தம் பண்பாடு!

பின் எப்படி தீபாவளி முன்னே வந்தது?

பொங்கல் பின்னே தள்ளப்பட்டது?

இது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு! அதனை முறியடிக்கவே முழுதாய்ந்த பெரியார் பகுத்தறிவு முத்துக் குளித்துத் தந்தது பொங்கல்!

தமிழகத்தில் மட்டுமல்ல; தந்தை பெரியார் 1929, 1954-ஆம் ஆண்டுகளில் மலேசிய சுற்றுப் பயணம் மேற்கொண்டு, செய்த மறுமலர்ச்சிப் பிரச்சாரத்தின் காரணமாகத்தான் அந்நாட்டில் தமிழர் திருநாள் பொங்கல் நாள் என்ற புத்துணர்ச்சி ஏற்பட்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறார்கள். (கோலாலம்பூர் மாநாட்டுச் சிறப்பு மலர் 6.1.2001)

## 60 ஆண்டு முறை அகற்றல்

"கண்ணனும் நாரதரும் கலவி செய்து பெற்ற பிள்ளைகள் அறுபதும் தமிழ் ஆண்டு என்று வழங்கப்படுகிறது. 60 ஆண்டுப் பெயர்களில் ஒன்று கூடத் தமிழ் இல்லை. 60 ஆண்டுக்குமேல் உள்ள காலத்தைக் கணக்கிடுவதற்கு உதவியாக இல்லை. அதற்குரிய கதை தமிழர்களை இழிவுபடுத்துகிறது. மானமும் அறிவும் உள்ள மக்கள் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எனவே 60 ஆண்டு முறையை அரசின் அனைத்துப் பணிகளிலிருந்தும் (தமிழ்நாடு அரசிதழ், மாத நாள்காட்டி, குறிப்பேடு முதலியன) அகற்றுவதற்கு ஆவன செய்யுமாறு தமிழ்நாடு அரசையும் தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும் இந்த மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் தை மாதம் முதல் நாளே என்பதை உள்ளூர்த் தமிழர்களும் உலகத் தமிழர்களும் ஏற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களும் ஒத்துக்கொண்டு பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இப்பொழுது தேவை ஆட்சி ஒப்புதல் (Administrative Approval) மட்டுமே. அந்த ஆட்சி ஒப்புதலை அளித்து நடைமுறைப்படுத்துமாறு தமிழ்நாடு அரசையும் தமிழக முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்களையும் இந்த

மாநாடு விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறது!” என 6.1.2001 அன்று மலேசிய நாட்டின் தலைநகரான கோலாலம்பூரில் நடைபெற்ற தை முதல் நாளே தமிழாண்டுத் தொடக்கம் என்பதை வலியுறுத்தும் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை கலைவாணர் அரங்கில் பகுத்தறிவாளர் கழகம் நடத்திய புரட்சிக்கவிஞர் விழாவிலும் (29.4.1990) முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களிடம் கோரிக்கையாக வைக்கப்பட்டது. ஆனால், செயலுக்குத்தான் வரவில்லை.

நாரதன் என்கிற ஆண் கடவுளுக்கும் கிருஷ்ணன் என்கிற ஆண் கடவுளுக்கும் பிறந்த பிள்ளைகள்தான் தமிழ் ஆண்டுகளாம். (‘அபிதான சிந்தாமணி’ பக்கம் 1932)

பிரபவ, விபவ, சுக்கில, பிரமோதூத, பிரசோத்பத்தி, ஆங்கிரச, ஸ்ரீமுக, பவ, யுவ, தாது, ஈசுவர, வெகுதானிய, பிரமாதி, விக்ரம, விஷீ, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்திப, விய..... இவ்வாறு 60 வருடங்கள். ஒரு பெயர்கூட தமிழ் கிடையாது. ஆனாலும் இவை தமிழ் ஆண்டுகளாம்!

பிறப்பும் ஆபாசம்! பெயரும் தமிழில் இல்லை. தமிழும், தமிழரும், அவர்களின் பண்பாடும் எந்த அளவு சமஸ்கிருதமயமாக்கப்பட்டுள்ளது என்பதற்கு இது ஒன்று போதாதா?

தமிழர் வீடுகளில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் மாறுதல்கள் கொண்டுவரப்பட்டன. கல்யாணம் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்தமானது; கிரகப் பிரவேஷம் ‘புதுமனை புகுவிழா’ ஆனது; சஷ்டியப்த பூர்த்தி ‘மணி விழா’ ஆனது; உத்திரகிரியை ‘நீத்தார் நினைவு’ போற்றும் நாளானது மட்டுமல்ல; இவற்றுக்கெல்லாம் புரோகிதர்களை அழைத்து சமஸ்கிருதத்தில் நடத்தும் மூடச் சடங்குகளுக்கும் மூடு விழா நடத்தப்பட்டது என்றால் அது தந்தை பெரியார் நிகழ்த்திய தலைகீழ் சமூகப் புரட்சியின் அறுவடையாகும்.

தமிழ்நாட்டைத் தவிர இந்த மாறுதல்களை வேறு மாநிலங்களிலும் காண முடியுமா? ஏன்? அங்குப் பெரியார் இல்லை - ஒரு இயக்கம் இல்லை - அதனால் இல்லை என்பது தானே உண்மை!

# 8. கலையில் மாற்றம்

"தமிழ் இசைக்குக் கிளர்ச்சி செய்ததானது வீணாகவில்லை. தமிழிசைத் தொழிலாளர்கள் தமிழில் இசை கற்று வருகிறார்கள். பெரும்பாலும் தமிழில் பாடுகிறார்கள். இசையை நுகர்வோரும் தமிழில் இசை வேண்டுமென்று விரும்புகிறார்கள். இனி இந்த உணர்ச்சி குன்றிவிடாது. இசை விருந்தளிக்கும் செல்வவான்களும், நுகர்வோர்களும் தமிழுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும்வரை இந்த உணர்ச்சி வலுத்துக்கொண்டே போகும்."

"தமிழ் இசை நமது நல்வாழ்வுக்குப் பயன்படும்படிச் செய்ய வேண்டியது நமது கடமை. இன்று இதுவரை தமிழல்லாத வேறு மொழியில் இருந்த இசை (பாட்டுகள்) தமிழில் பாடவேண்டியதாக ஏற்பட்டதற்குக் காரணம் நமக்குத் தமிழினிடம் ஏற்பட்ட உணர்ச்சியேயாகும் - இதுஒரு பெரிய மாறுதல்தான்."

"இசை, நடிப்பு ஆகியவை எதற்குப் பயன்படுகின்றன? ஏதாவது ஒரு கருத்தை, ஒரு சேதியைக் காட்டுவதற்கும், அவை மனத்தில் பதிய வைப்பதற்கும் அவை வெறும் வாக்கியத்தில் இருப்பதை இசை இன்பத்தோடும், நடிப்பு இன்பத்தோடும், மனத்திற்குள் புகுத்துவதற்கும் ஆகவே முக்கியமாய் இருந்து வருகின்றன. அடுத்தபடியாக, இரண்டாவதாகத்தான் அவற்றில் இன்ப நுகர்ச்சி இருந்து வருகின்றது. ஆகவே, இசைக்கும், நடிப்புக்கும் கருத்தும் செய்திகளும் பிரதானமாகும்;"

"நம் நாடும் நாமும் எவ்வளவோ குறைபாடுகள் உடையவர்களாக இருக்கிறோம். அக்குறைபாடுகள் ஒழிக்கப்படுவதற்கு எவ்வளவோ முயற்சிகள் செய்கிறோம். இம்முயற்சியின் மூலம் எவ்வளவோ கஷ்ட நஷ்டங்கள்

அனுபவித்து வருகிறோம். இவற்றை யாராலும் மறுக்கமுடியாது. அப்படியிருக்க நம்முடைய கலைகள், நாம் அனுபவிக்கும் நுகரும் சாதனங்கள், இன்பத்தன்மைகள் ஆகியவை எப்படியிருக்க வேண்டும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாதாரணமாகப் பொருள் நட்டமோ, கால நட்டமோ, ஊக்க நட்டமோ இல்லாமல் நடைபெறும் காரியங்கள் கூட நம் நலத்துக்கு ஏற்றதாகவும், தீமை ஒழியத்தக்கதாகவும் இருக்க வேண்டுமென்று விரும்புவது அறிவுடைய மக்களின் தலையாய பண்பாகும். அவற்றில் நமக்குப் போதிய கவலை இல்லாததாலேயே, நம் நலத்துக்கு மாறான சேதிகளும் உணர்ச்சிகளும் கொண்ட காரியங்கள் வளர்ந்துவர ஏற்பட்டுவிட்டதுடன், இவைகளையே பொருள் கொடுத்தும், காலத்தையும் ஊக்கத்தையும் செலவழித்தும் நுகர்ந்து அறிவும், மானமும் கெட்டு, முற்போக்கும் தடையும் உற்றுக் கீழ் நிலைக்கு வரவேண்டியவர்களானோம்." (தந்தை பெரியார், தமிழர், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு)

தமிழ் மக்களுக்குக் கலை வளர்ச்சியைப் பற்றிய கவலை பண்டிதர்களைத் தவிர மற்ற கலை உணர்ச்சியே இல்லாத பொது மக்களுக்கும், கலை என்றால் என்ன என்று அறிந்திராத செல்வச் சீமான்களுக்கும், கலை இன்னது என்றே உணர்ந்திராமல் கலையின் பேரால் வயிற்றுப்பாட்டுத் தொழில் நடத்தின தொழிலாளிகளுக்கும் இன்று திடீரென்று ஏற்பட்டு, கலை வளர்ப்பு முயற்சியில் இறங்கத் தோன்றின காரணம் என்ன என்பதை முதலில் யோசித்துப் பார்க்கும்படி வாசகர்களை வேண்டிக்கொள்ளுகிறோம், அதாவது இந்தியின் ஆதிக்கத்தை ஒழிக்க மக்கள் 'தமிழ், தமிழ்' என்று செய்த தமிழ்க் கிளர்ச்சியேயாகும்.

தமிழ் நாட்டில் ஆரியர் ஆதிக்கம் பெற்று எல்லாத் துறைகளையும் தம் வயப்படுத்திக் கொண்டு தங்கள் இன நலத்துக்கும் சுயநலத்துக்கும் ஏற்றவண்ணம் அவைகளைப் பெருக்கிக் கொண்டார்கள். மேலும், அவற்றின் மூலமே தமிழர் செல்வத்தைக் கொள்ளை கொண்டு வாழ்வதல்லாமல்

சமுதாயம், சமயம் ஆகிய துறைகளிலும் தங்களது ஆதிக்கத்தையும், தமிழர்களுடைய இழிவையும், அடிமைத்தனத்தையும் பெருக்க முயற்சிக்கிறார்கள். இவை சுயமரியாதை உணர்ச்சியுள்ள தமிழர்களுக்குத் தோன்றி அவர்கள் ஒவ்வொரு துறையிலும் உள்புகுந்து தடவிப்பார்த்து உள் இரகசியங்களை வெளிப்படுத்தியதன் பயனாகவே கலை, இன, மொழி முதலிய இன்றையக் கிளர்ச்சிகள் தோன்ற வேண்டியதாயிற்று. இக்கிளர்ச்சிகளுக்குச் செல்வாக்கு ஏற்பட்டவுடன் பண்டிதர்கள், கலைத்தொழில் வாழ்வுக்காரர்கள், பிரபுக்கள் முதலியவர்கள் இவற்றில் கவனம் செலுத்திப் பயனும், பொது நலத்தொண்டு புகழும் பெற முயலவேண்டியவர் களானார்கள். இது மிக்க நியாயமும், பாராட்டத்தக்க காரியமும் ஆகும் என்பதில் எள்ளளவும் ஆட்சேபணை இல்லை.

## இசைக் கலை

ஆனால், இந்த முயற்சியினால் இம்மாதிரியான கிளர்ச்சி தோன்றவேண்டிய உட்கருத்து என்ன இருந்ததோ அதற்கு அனுகூலம் ஏற்பட வேண்டாமா என்றும், அனுகூலம் ஏற்படாவிட்டாலும், கேடாவது ஏற்படாமல் இருக்க வேண்டாமா என்றும் கேட்கிறோம். உதாரணமாக ''இசை (சங்கீத)க் கலைக்கு மொழி முக்கியமானது. ஒலி இனிமை, தாள இனிமைதான் முக்கிமானது. மொழி இனிமை முக்கியமன்று'' என்று இருக்குமேயானால் நமக்கு இந்த இசைக்கலை வளர்ச்சி முயற்சியில் இன்று கலந்து கொள்ளவேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லலாம். அப்படிக்கில்லாமல் இசையில் மொழி இனிமையே முக்கியமானது. அம்மொழி தமிழ் மொழியாய் இருக்கவேண்டும் என்று நாம் சொல்லுவதானால், அம்மொழிக்குப் பொருள் வேண்டாமா?

அப்பொருளுக்குப் பலன் வேண்டாமா? அப்பலன் நாம் செய்யும் கிளர்ச்சியின் குறிக்கோளுக்கு ஏற்றதாக நலந்தரத்தக்கதாக இருக்க வேண்டாமா? என்பதை யோசித்துப் பார்க்க வேண்டுவதாய் வாசகர்களை வேண்டுகிறோம்.

உதாரணமாகச் சென்னைத் தமிழ் இசை மாநாட்டில், இசைவாணர் தியாகராஜ பாகவதர் பாடினார். அவற்றுள் மாதிரிக்கு இரண்டு பாட்டுகளின் தன்மையைப் பாருங்கள்.

**ஒரு பாட்டு :**

(ராகம் ஷண்முகப்பிரியா)

பல்லவி

'பார்வதி நாயகனே பரம்சிவா கருணாகர சம்போ

அனு பல்லவி

சர்வ பௌமனே சங்கரனே கைலாசனே சந்திரசேகரா'

என்பதாகும் ;

**மற்றொரு பாட்டு :**

(ராகம் : லதாங்கி)

பல்லவி

'ஸ்ரீ ஜகதாம்பிகையே தீனதயாபரி சங்கரி

அனுபல்லவி

ஓ ஜனநி நீயே அபயம் சரணுன் உபயசரணம்', என்பதாகும்.

இப்படியேதான் அங்கு நடந்த 100-க்கு 97 மற்ற பாட்டுகளும் இருந்தன. இந்தப் பாட்டுகளைத் தெலுங்கிலோ, சமஸ்கிருதத்திலோ, இந்தியிலோ, ஜப்பான், ஜெர்மனி மொழியிலோ பாடி இருந்தால், என்ன குடி முழுகிப்போய் இருக்கும்?

இந்த மாதிரிப் பாட்டுகள் பாடச் செய்வதற்கு ஆகவா இரு கோடீசுவரர்கள் கூடி உலகத்தைத் திரட்டிப் பல பதினாயிரக்கணக்கான ரூபாய்கள், பல அறிஞர்களின் அருமையான நேரங்கள், ஊக்கங்கள், செலவழித்து என்றும் கண்டிராத ஓர் உயர் திருவிழா இராப் பத்து பகல் பத்துப் போல் நடத்துவது? என்பதையே யோசித்துப் பார்க்க வேண்டு கிறோம்.

இதுதான் தமிழிசைக் கிளர்ச்சி என்றால், இதற்கு (அய்க் கோர்ட் ஜட்ஜுகள், அய். சி. எஸ். கலெக்டர்கள் முதல்) இத்தகை ''பெரியவர்கள்'' விரோதம் தான் இப்பெரியோர்களுக்கும், தமிழிசை கிளர்ச்சி இயக்கத்திற்கும் எதற்கு ஏற்படவேண்டும், என்று யோசித்தால் இது ஒரு பைத்தியக்காரத்தனமான வேலை என்றே தோன்றும்.'' ('குடிஅரசு' 29.1.1944 தலையங்கம்)

என்று அலை அலையாக ஆதங்கத்தோடும், தன்மான உணர்ச்சியோடும் பொழிந்து தள்ளுகிறார் தந்தை பெரியார்.

"8-4-44-ல் பட்டுக்கோட்டை நாடியம்மன் உற்சவத்திற்காக மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் கச்சேரி செய்ய வந்தார். அப்பொழுது திருவாளர் நாடிமுத்துப்பிள்ளை, போலீஸ் ஜில்லா சூப்பிரிண்டண்ட், டிப்டி கலெக்டர், ஸ்பெஷல் கலெக்டர், சப்மாஜிஸ் டிரேட், டிஸ்டிரிக்ட் முன்சீப் இன்னும் இவ்வூர் பிரபலஸ்தர்களும் வீற்றிருந்தார்கள். அப்பொழுது அவ்வூர் சுயமரியாதை சங்க செயலாளர் திரு. மாப்பிள்ளையன் தமிழில்தான் பாட வேண்டும் என்று சொன்னார். அவர் தமிழில் தெரியாது என்றார். மீண்டும் பாடினார். நிறுத்து என்று மறுபடியும் சொன்னார். 5-4-44 முதல் நடைபெற்றுவரும் நாடியம்மன் கோயில் திருவிழாவில் நடைபெற்ற பாட்டுக் கச்சேரிகளில் நடத்திய தமிழ் இசைக் கிளர்ச்சியேயாகும். தமிழில் பாட மறுத்ததால் 8-4-44-ல் நடைபெற்ற மகாராசபுரம் விஸ்வநாத அய்யர் பாட்டுக் கச்சேரி கடும் வாதப் பிரதிவாதங்களுக்கிடையில் முக்கால் மணிநேரம் நிறுத்தப்பட்டுவிட்டது. உடனே டிப்டி கலெக்டர், தமிழில் பாடும் என்று பாடகரைச் சொன்னார். பிறகு பாடினார். தமிழ்ப்பாட்டு பாட தெரியாது என்றவருக்கு எப்படி, பாடத் தெரிந்தது - பார்த்தீர்களா?"

தமிழ்நாட்டில் தமிழில் பாடவேண்டும் என்று வற்புறுத்த வேண்டிய அவசியம் இருந்தது என்பதும், அதனை தந்தை பெரியார் கண்ட சுயமரியாதை இயக்கம்தான் சாதித்துக் காட்டியது என்பதும் வரலாற்றுக் கண்ணாடியாகும்.

## பெரியார் பேசுகிறார்

''இன்றைய நம் நிலை என்ன? முதலாவது சமுதாயத்தில் நாம் கீழான நிலையில் இருக்கிறோமா இல்லையா? இந்தக் கீழான நிலை ஏழைகளுக்கும், கயவர்களுக்கும் இருந்தால் நமக்குக் கவலையில்லை (ஏனெனில் இது தனி உடைமை நாடு). ஆனால் கோடீசுவரரும், கோணாத கை கொடை வள்ளலும், மிக்க மதிவாணருமான இராஜா சர் அண்ணாமலை அவர்களும், பேரறிஞரும், மலையாடும்படியான வாயாடிகளும், கருத்தாளர்களும் மெச்சும் மதி அரசர் சர் சண்முகம் அவர்களும், நம் சமுதாயத்தில் 4-ஆம் ஜாதி, 5-ஆம் ஜாதியாக மதிக்கப்படவும், அவ்வாறே பெரிதும் நடத்தப்படவும், காரணம் என்ன? ஏன் நடத்தப்படவேண்டும்? சம மனிதனாய்க் கருதப்படாததற்கு இவர்களிடம் உள்ள கறைகள் என்ன? குற்றம் என்ன? என்று கேட்கிறேன். இந்தக் கொடுமை இன்றா நேற்றா? இந்நிலையில் இவர்களுக்குள்ள பொருள், செல்வாக்கு, மதி, திறமை, ஊக்கம், உணர்ச்சி ஆகியவை உண்மையில் எதற்காகச் செலவிடப்பட்டு வரவேண்டும்? எதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்? இப்படிப்பட்டவர்கள் பிறந்த நாட்டிலே, இவர்கள் காலத்திலே மனித சமுதாயத்துக்கும் (ஏன்) இவர்களுக்குமே, சமுதாயப்பிறவி இழிவும், குறைபாடும் நீக்கப்படவில்லையானால், நீக்கப்பட இவர்கள் உழைக்கவில்லையானால், நீக்கப்பட இவர்களது அறிவு, ஆற்றல், உணர்ச்சி, ஊக்கம் செலவழிக்கப்பட வில்லையானால் மற்றும் வேறு யாருடைய காலத்தில் நாம் எதிர்பார்க்க முடியும், என்று கேட்கிறேன்........'' என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

''என்மீது ஒரு சிலர் முனிவு கொள்ளலாம், ஆத்திரப்பட்டு வஞ்சினம்கூடக் கூறலாம்; அதை நடத்துவிக்கவும் முனையலாம். இவற்றால் பொதுநலம் என்ன ஏற்படக்கூடும்? தனி நலம்தான் என்ன ஏற்படக்கூடும்? இப்பெரியார்களிடத்தில் இந்த விண்ணப்பம் கொடுக்க எனக்கு உரிமை இல்லையா?'' என்று வினவுகிறார்.

''சர் சண்முகம் அவர்கள் ஒரு பெரிய பொருளாதார நிபுணர். இவ்விஷயத்தில் அரசர்களும் மதிக்கத் தகுந்தவர், எதிரிகளும் கண்டஞ்சத் தகுந்தவர்; வள்ளல் அண்ணாமலையார் பொருளாதார நிபுணத்துவத்தையே உருவாய்க் கொண்டவர். இவ்விருவரின் பொருளாதார நிபுணத்துவம் இந்தத் தமிழ் இசை மாநாட்டில், தமிழ் இசைக் கிளர்ச்சியில் எப்படிப் பயன்படுகிறது என்று பாருங்கள்.

''தமிழிசைக் கிளர்ச்சிக்காக இவர்கள் செலவழித்த பொருளும், மற்ற தமிழ் மக்கள் செலழித்த பொருளும் தமிழ் நாட்டுப் பொருளல்லவா? தமிழர்களுடைய பொருளல்லவா? நிலை குலைந்த தரித்திரர்களாய், வயிற்றுப்பசிக்கு எச்சிக் கலையைத் தேடித்திரியும் ஈனமக்களாய்க் கருதப்படும் தமிழ் உயிர்களுடைய செல்வமல்லவா? இதற்குச் செலவழித்த உணர்ச்சியும், ஊக்கமும் ஆற்றலும் காலமும்கூட இவர்களுடையது அல்லவா, என்று கேட்பதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.''.....

''ஆகவே, நாட்டினுடைய செல்வம், அறிவு, ஊக்கம், உணர்ச்சி இந்தப் பஜனைக்காகவா இப்படிச் செலவழிக்கப்பட வேண்டும்? இதைக்காணும் அயலான் எவனாவது இந்த நாட்டு மக்களுக்குத் தன்மான உணர்ச்சியோ, இழிவையும் கீழ்மையும் கண்டு உடல் துடிக்கும் சொரணையோ இருக்கிறது என்று கருத முடியுமா? நாட்டு மக்களுக்கு, இதில் பிரவேசித்து இந்தத் தன்மானத்துக்குக் கேடு செய்யும் தன்மையைப்பற்றிச் சிந்திக்கவோ, விளக்கவோ, தடுக்கவோ, உரிமை இல்லையா என்று கேட்கிறேன்.''

''தமிழிசைக் கிளர்ச்சிக்குச் செலவாகும் பணத்தையும், நேரத்தையும் ஊக்கத்தையும் பார்த்தால், அதன் பயன் இந்தப் பஜனையில் முடிவதானால், மானமும்அறிவும் உள்ள எவனுக்குத்தான் வயிறு எரியாது என்று கேட்கிறேன்.''

''நாடகம் எதற்கு? அது படிப்பிக்கும் படிப்பினை என்ன? அதற்காக ஏற்படும் செலவுகள் எவ்வளவு? புராணக் கதைகளை

நடிப்பதினால் அனுபவிப்பதால் மூட நம்பிக்கை, ஒழுக்க ஈனம், கட்டுத்திட்டமற்ற காம உணர்ச்சி, கண்ட மாத்திரத்தில் காம நீர் சுரக்கும் படியாகப் பெண் மக்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ளுதல் முதலியன பிடிபடுவதல்லாமல் வேறு என்ன ஏற்படுகிறது?''......

ஆகவே, வாலிபர்களே, நீங்கள் ஆண்களும், பெண்களும் முன்வந்து இந்தக்கேட்டை ஒழிக்கவேண்டும், நாடகங்களில் போய் உட்கார்ந்து கொண்டு முன்சொன்ன காதல் வரும் சந்தர்ப்பங்கள் வரும்போது, ''வெட்கம் வெட்கம், மானங்கெட்ட பெண்கள் தாம் இதைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள், மானமும் ஒழுக்கமும் உள்ள பெண்கள் இந்த நாடகங்களை எட்டிக்கூடப் பார்க்கமாட்டார்கள்'' என்றும், மூடநம்பிக்கை வரும் சந்தர்ப்பங்களில் ''வெட்கம் வெட்கம், பகுத்தறிவற்றவர்களும், காட்டுமிராண்டிகளும்தான் இந்தக் காட்சிகளைக் காண வருவார்கள். அறிவும் மானமும் உள்ளவன் இதைத் திருத்தத்தான் முற்படுவான்'' என்றும் சொல்ல வேண்டும். அதுபோலவே இசையரங்குகளிலும் பஜனைப் பாட்டுகள் வரும்போது அவை காதுகளில் கேட்காதபடி ''யாயாயாயாயா'' என்று கூப்பாடுபோட்டு, அந்தச் சப்தம் மற்றவர்கள் காதுகளில் கேட்காமல் இருக்கும்படிச் செய்யவேண்டும். யுத்தத்தின் காரணமாக நமது சர்க்கார் ரேடியோவில் ஜப்பான், ஜெர்மன் பேச்சுகள் வரும்போது, வேறு யாரோ ஒருவர் அப்பேச்சுகள் நம் காதுகளில் விழாமல் இருப்பதற்கு ஆக 'பாயாயாயா' என்று சொல்லச் செய்கிறார்கள் அல்லவா, அதுபோலத்தான் நானும் சொல்லுகிறேன்.''

''நாம் நம் சமுதாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு கஷ்ட நஷ்டங்களுடன், எவ்வளவு நாள்களாக, எவ்வளவு பாடுபட்டு வருகிறோம்? அந்தப் பலன்கள் நாம் செய்த சிறு காரியத்தையும் கெடுக்கவும், யாரோ சுயநலக்காரர் சுரண்டுவதற்கும்தானா பயன்பட வேண்டும்..? நமக்கு ஒருவர் உதவி செய்யாவிட்டாலும், நம் காரியம் கெட்டுப் போகாமல் இருக்கும்படியாகவாவது

பார்த்துக்கொள்ள நமக்கு உரிமை இல்லையா, என்று கேட்கிறேன். இந்தப் பஜனைப் பாட்டும், இந்தப் புராண நாடகமும்இருக்கும்வரை நம் முட்டாள்தனமும் இழிவும், மானமற்ற கீழ்மையும், ஒழுக்க ஈனமும் ஒழிக்கப்பட முடியவே முடியாது என்பேன்.''

''எனவே, உங்கள் பங்கு என்ன? இந்தச் சமயத்தில் சும்மா இருக்க, வேடிக்கை பார்க்க உங்களுக்கு மனம் வருகிறதா? இப்போது சும்மா இருந்து விட்டுப் பின்னால் நீங்கள் வாழ்ந்துதான் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்கள் சரீரம் பெருத்தால் போதுமா? உங்கள் தனிப்பட்ட வாழ்வு, வாயில் சீட்டி அடித்துக்கொண்டு கைப் பிரம்பைச் சுழற்றிக்கொண்டு உல்லாச நடை நடக்கும்படியாக இருந்தால் போதுமா? நாம் இருக்கும் நிலையை நிர்வாணமான கண்ணைக்கொண்டு நிர்வாணத் தன்மையில் பாருங்கள்; அப்பொழுது தெரியும், உங்கள் உடைமை என்ன என்பது! வாலிபர்களே, இன்னமும் சில நாள் நான் வேலை செய்ய உற்சாகத்தைக் கொடுக்கிறீர்களா? அல்லது, இந்த அக்கிரமங்களைப் பார்த்து மனமுடைந்து உட்காரச் செய்கிறீர்களா? என் முயற்சி, என் உற்சாகம் - ஏன்? என் வெற்றிகூட - உங்கள் கையில் இருக்கின்றன. இதுவரையிலும்கூட உங்கள் கையில்தான் இருந்து வந்தன. என்ன சொல்லுகிறீர்கள்?'' (தந்தை பெரியார் தமிழர், தமிழ்நாடு, தமிழர் பண்பாடு )

தந்தை பெரியாரின் எழுச்சி உரையில் கலையால் தமிழினம் எவ்வாறு வீழ்ச்சி பெற்றது என்பதை எடுத்துக்காட்டி, அதில் தலைகீழ் மாற்றம் வரவேண்டிய உணர்ச்சியை ஊட்டுகிறார் - அதில் ஆத்திரமும் ஆவேசமும் கரை புரள்கிறது! அந்த அளவுக்கு இந்த இன மக்கள்மீது அவருக்கு அக்கறையும், கவலையும்!

### இசையிலும் வருணம்

இசையிலும்கூட வருணத்தை ஜாதியைப் புகுத்தியுள்ளனர் பார்ப்பனர்கள்.

'மகாபாரத சூடாமணி' என்னும் நூலில் (ஆசிரியர் சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கட்ராமய்யர் மற்றும் ஆர். விசுவநாதய்யர்) சங்கீதாதி ராக மேள லட்சணம் என்னும் நான்காம் பகுதியில் கீழ்க்கண்டவாறு கூறப்பட்டுள்ளது.

**வம்சம் நான்கு**

*சட்சமத் திமகாந் தாரம் தாமவை மூன்றும் தேவர்;*

*சுத்தபஞ் சமம்பி துர்க்கள்; சொல்லிய ரிஷபம் தெய்வம்;*

*உத்த ரிஷிக ளாகும்; மவுலி ராக்ஷதர் நிஷாதம்;*

*எத்தலத் தோறும் சொல்லு மிலக்கணம் ஈதா மன்றே.*

*(இ-ள்). சட்சம், மத்திமம், காந்தாரம் இம்மூன்றும் தேவர்; பஞ்சமம் பிதுரர்; ரிஷபம், தைவதம் ரிஷிகள்; நிஷாதம் இராக்ஷதர் வம்சங்களாம் (எ-று).*

*மவுலிராக்ஷதர் - கிரீடம் தரித்த அரக்கர்.*

**ஜாதி நான்கு**

*அந்தணன் சட்சமத் திமமான பஞ்சமே சாதி;*

*தந்தைைவ முந்தானே ரிஷபஞ் சத்திரிய னாகும்;*

*முந்துகாந் தாரநிஷாத மொழிந்திடில் வைசிய னாகும்;*

*சிந்தைசே ரந்தரகா கலிகள் சூத்திர னாமே.*

*(இ-ள்). சட்சம், மத்திமம், பஞ்சமம் இம்மூன்றும் பிராமண ஜாதி. தைவதம், ரிஷபம் இவ்விரண்டும் க்ஷத்திரிய ஜாதி. காந்தாரம், நிஷாதம் இவ்விரண்டும் வைசிய ஜாதி. அந்தரகாகலி ஸ்வரங்கள், சூத்திர ஜாதியாகும் (எ-று).*

*இப்படி இசையில்கூட வருண வேறுபாடு சாதி வேறுபாடு புகுத்தப்பட்டுள்ளது என்றால், தன்மானமுள்ள யார்தான் பொறுத்துக் கொள்ள முடியும்? இதில் மொழி பிரச்சினை மட்டுமல்ல; சாதி இழிவுப் பிரச்சினையும் புகுந்து கொண்டிருக்கிறது என்கிறபோது தந்தை பெரியாருக்கு கோபம் ஏற்பட்டதில் எள் மூக்கு முனையளவும் தவறுகாண முடியுமா?*

# 9. பெண்ணுரிமை சகாப்தம்!

ஆரிய மனுதர்ம அமைப்புப்படி பெண்கள் ஒரு ஜீவனேயல்ல. ஆணின் ஒரு உடைமையே யாகும்.

பால்யத்தில் தந்தையின் ஆக்ஞையிலும், யௌவனத்தில் கணவன் ஆக்ஞையிலும் கணவன் இறந்தபிறகு பிள்ளைகளின் ஆக்ஞையிலும் இருக்க வேண்டியதல்லாமல் ஸ்திரீகள் தன் சுவாதீனமாக ஒருபோதும் இருக்கக்கூடாது என்பதுதான் மனுதர்ம சாத்திரம். (மனு தர்மம் அத்தியாயம் 5 - சுலோகம் 148)

இந்நிலையைக் கண்டு தந்தை பெரியார் கொதித்தெழுந்தார். பெண் விடுதலையை முழுமுதற் கொள்கையாகக் கொண்டு போராடினார்.

"பெண் அடிமை என்பது மனித சமூக அழிவு என்பதை நாம் நினைக்காததாலேயே வளர்ச்சிபெற வேண்டிய மனித சமூகம் பகுத்தறிவு இருந்தும் நாள்தோறும் தேய்ந்து கொண்டே வருகிறது." ('குடிஅரசு' 16.6.1935) என்று கவலைப்பட்டார் பெரியார்.

கவலைப்பட்டதோடு முடங்கிவிடவில்லை. களத்தில் இறங்கினார் - கருத்துப் பிரச்சாரம் செய்தார் - போராடினார் - கடைசியில் பெரு வெற்றியும் பெற்றார்.

1925-இல் அவரால் துவக்கப்பட்ட 'குடிஅரசு' இதழில் கருத்துப் புரட்சியை ஊட்டினார். 1929 முதல் நடத்தப்பட்ட சுயமரியாதை இயக்க மாநாடுகளில் பெண் விடுதலை தீர்மானங்களை நிறைவேற்றினார்.

சுயமரியாதைத் திருமண முறையை அறிமுகப்படுத்தி ஆணுக்குப் பெண் சமம் என்றார். பெண்களுக்கு என்ன

உரிமைகள் வேண்டும் என்று அவரிடம் கேட்கப் பட்டபோது, ஆணுக்கு என்னென்ன உரிமைகள் எல்லாம் உண்டோ அத்தனை உரிமைகளும் பெண்களுக்கும் வேண்டும் என்று நெஞ்சில் தைக்குமாறு கூறினார்.

தமிழர் (திராவிடர்) திருமணம் என்றால் என்ன என்ற கேள்விக்குத் தந்தை பெரியார் கூறும் பதில்:

**“புருஷனுக்கு மனைவி அடிமை (தாழ்ந்தவள்) என்றும், புருஷனுக்கு உள்ள உரிமைகள் மனைவிக்கு இல்லை என்றும், உள்ள ஒரு இனத்திற்கு ஒரு நீதியான மனுநீதி இல்லாமல் வாழ்க்கையில் கணவனும், மனைவியும் சரி சம உரிமை உள்ள நட்பு முறை வாழ்க்கை ஒப்பந்தமாகக் கொண்ட திருமணம் தமிழர் திருமணம்”** என்று விளக்கம் தந்துள்ளார் தந்தை பெரியார் (‘விடுதலை’ 14.3.1950)

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உற்ற நண்பர்களாக, துணைவர்களாக வாழவேண்டுமேதவிர, எஜமான் - அடிமைகளாக வாழக் கூடாது என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, சாதி, மத, சடங்கு, சம்பிரதாயங்களுக்கு இடமின்றி எளிமையாக, சிக்கனமாகச் செய்யும் திருமண முறையான சுயமரியாதைத் திருமணம் என்பது தந்தை பெரியார் அவர்கள் நிகழ்த்திய பெரிய பண்பாட்டுப் புரட்சியாகும்!

சுயமரியாதைத் திருமண மேடைகளில் தந்தை பெரியார் எடுத்துவைத்த கருத்துகள், மாநாடுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பிற்காலத்தில் சட்ட வடிவமாயின. ஏன்? சுயமரியாதைத் திருமணமே சட்ட அங்கீகாரம் பெற்றது. அறிஞர் அண்ணா அவர்கள் முதல் அமைச்சரான நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து, இதற்கு முன்பு நடைபெற்ற சுயமரியாதைத் திருமணங்களும்கூடச் செல்லுபடியாகும் என்று சட்டம் செய்தார். இது 20.1.1968 சென்னை அரசிதழில் வெளியிடப்பட்டுச் சட்ட வடிவம் பெற்றது.

இந்தச் சுயமரியாதைத் திருமணம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, சிங்கப்பூர், மலேசியா நாடுகளில்கூட அரசுகள் சட்ட அங்கீகாரம் அளித்துள்ளன என்பது சாதார ணமானதா?

கல்வி, வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கு 50 சதவிகிதம் அளிக்கப்படவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் தந்தை பெரியார்.

இன்றைக்குச் சட்டமன்றம் நாடாளுமன்றங்களில் பெண்களுக்கு 33 சதவிகிதம் கிடைக்கவேண்டும் என்கிற நிலை எட்டப்பட்டுள்ளது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

பெண்கள் சகல துறைகளிலும் விழிப்புப் பெறுவதற்கும், விடுதலை எய்துவதற்கும், உரிமைகளை எட்டிப் பிடிப்பதற்கும் தந்தை பெரியார் அவர்கள் அயராது பாடுபட்ட காரணத்தால்தான் “பெரியார்” என்ற பட்டத்தை பெண்களே மாநாடு கூட்டிச் சூட்டினார்கள்.

பெண்களுக்குச் சொத்துரிமை, விவாகரத்துரிமை, விதவைப் பெண்ணுக்குத் திருமண உரிமை, கல்வி உரிமை, உத்தியோக உரிமை, வாரிசு உரிமை ஆகிய இவையெல்லாம் இன்றைக்குக் கிட்டியுள்ளன என்றால் இவற்றுக்கான விதையும், அடி உரமும், காவலும் தந்தை பெரியார்தான்.

13.11.1938 அன்று சென்னையில் நிகழ்ந்த தமிழ்நாட்டுப் பெண்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முதல் தீர்மானம்:

“இந்தியாவில் இதுவரை தோன்றிய சீர்திருத்தத் தலைவர்களால் செய்ய இயலாமற்போன வேலைகளை நம் மாபெருந் தலைவர் ஈ.வெ.ரா. செய்து வருவதாலும், தென்னாட்டில் அவருக்கு மேலாகவும் ஒப்பாகவும் நினைப்பதற்கு வேறு ஒருவரும் இல்லாததாலும் அவர் பெயரைச் சொல்லிலும், எழுத்திலும் வழங்கும்போது பெரியார் என்ற சிறப்புப் பெயரையே வழங்க வேண்டும் என்பதாகும்.”

உலகிலேயே பெரியார் என்றால் அது ஈ.வெ. ராமசாமி அவர்களையே குறிக்கும் என்பது தனித் தன்மையான ஒன்றாகும்.

மக்கள் தொகைப் பெருக்கம் என்பது பற்றி யாரும் கனவு காணாத காலத்திலேயே கருத்துக் கணித்தார் தந்தை பெரியார். மற்றவர்கள் இதனை நோக்கும் பார்வைக்கும் தந்தை பெரியார் கண்ணோட்டத்துக்கும் அடிப் படையிலேயே வேறுபாடு உண்டு.

“மற்றவர்கள் பெண்களின் உடல் நலத்தை உத்தேசித்தும் குடும்பச் சொத்துக் குறையாமல் இருக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும் கர்ப்பத் தடை அவசியம் என்று கூறுகின்றார்கள். பெண்கள் விடுதலை அடையவும் சுயேச்சை பெறவும் கர்ப்பத்தடை அவசியமென்று நாம் கூறுகிறோம்” (‘குடிஅரசு’ 6.4.1930) என்கிறார் பெண்ணுரிமைக் காவலராம் தந்தை பெரியார்.

மக்கள் தொகைக் கட்டுப்பாடு பற்றி இன்றைக்கு உலகமே பேசுகிறது. மக்கள் தொகைப் பிரச்சினையில் மாற்றுக் கருத்துக் கொண்டிருந்த உலகக் கம்யூனிஸ்டுகள்கூட இன்று தந்தை பெரியார் கருத்தை எதிரொலிக்கும் நிலையை அடைந்துள்ளனர் என்பது கோடிட்டுக் காட்டத் தகுந்ததாகும்.

தந்தை பெரியாரின் கருத்துப் பிரச்சாரத்தால் தமிழ்நாடு இத்துறையில் பெரும் பலன் அடைந்தது என்பதை ‘தி. வீக்’ ஆங்கில இதழ் (22.3.1992) படம் பிடித்தது.

1920-களிலேயே தந்தை பெரியார் இந்தத் திசையில் ஆற்றிய தொண்டை ஆங்கில ஏடு எடுத்துக் காட்டியுள்ளது.

The State had in fact benefited from an awareness movement set in motion by the social reformer Periyar E.V. Ramasamy Naicker in the Mids - 20s

தந்தை பெரியாரின் சிந்தனை வேகம் யாராலும் கட்டுப்படுத்தப்பட முடியாதது - திருமணமே கிரிமினல் குற்றமாக்கப்பட வேண்டும் என்கிற அளவுக்குக் கூட அவர் சென்றார் (‘விடுதலை’ 16.3.1970)

“திருமணமே செய்யாத சர்வ சுதந்திர வாழ்வே பெண்ணடிமையை ஒழிப்பதற்கு இறுதிவழி. சுயமரியாதைத்

திருமணத்தைக் கூட விரும்பாத காலம் ஒன்று வரும்" ('விடுதலை' 14.12.1970) என்று கூறியது கண்டு அதிர்ச்சி அடைந்தவர்கள் உண்டு.

அன்மையிலே அலகாபாத் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு தந்தை பெரியாரின் தொலைநோக்குக்கு அங்கீகாரத்தை அளித்துள்ளது.

## பெரியாரின் சிந்தனைக்கு உயர்நீதிமன்றத்தின் அங்கீகாரம்!

உத்திரப்பிரதேச மாநிலம் ஆக்ராவைச் சேர்ந்த பயல்கத்தாரா என்ற 21 வயது பெண் அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் தான் திருமணம் செய்யாமலேயே தன் காதலனுடன் சேர்ந்து வாழ அனுமதி கோரி மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதி, "திருமணம் ஆகாமலே ஒரு ஆணோ அல்லது பெண்ணோ - அவர்கள் விருப்பப்பட்டால் சேர்ந்து வாழலாம். அதற்கு அவர்களுக்கு முழு உரிமை அரசியல் சட்டத்தின் 21-ஆவது சரத்துகளின் கீழ் வழங்கப்படுகிறது" எனத் தீர்ப்புக் கூறினார்.

வெகு காலத்திற்கு முன்பே தந்தை பெரியார் அவர்களால் கூறப்பட்டு வந்த கருத்துக்கு நீதிமன்றம் வாயிலாகக் கிடைக்கப்பெற்ற அங்கீகாரம் இது.

இதைத்தான் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்கூட

"ஒருத்திக்கும் ஒருவனுக்கும்
வாழ்க்கையின் உடன் பாடென்னும்
திருமணம் ஒழிய வேண்டும்.
தெரிந்தவர் கூடி அன்பு
புரிவதால் தோன்றும் மக்கள்
பொதுமக்கள் ஆதல் வேண்டும்.
அருந்துதல் உறைதல் எல்லாம்
பொதுவென அமைதல் வேண்டும்"

என்று பாடினார்.

## 'Women in China today' என்ற நூலிலிருந்து

On October 1, 1949, Mao Tse-tung climbed the stairs to a high podium erected in Peking's beautiful Tiananmen Square and proclaimed the establishment of the People's Republic of China. Just a few months later, on May 1, 1950, the new Marriage Law was enacted. Legally, at least, it gave the women of China equal rights with men.

The opening principles state: "The feudal marriage system based on arbitrary and compulsory arrangements and the supremacy of man over woman, and in disregard of the interests of the children, is abolished."

"The New-Democratic marriage system, which is based on the free choice of partners, on monogamy, on equal rights for both sexes, and on the protection of the lawful interests of women and children, is put into effect."

The Marriage Law guaranteed women the right to divorce, to children support, to inherit property, to equal status on the home and at the workplace, and to use their own surnames.

இதன் தமிழாக்கம்:

*1949 அக்டோபர் முதலாம் நாளில் பீகிங் மாநகரத்துத் தினமன் சதுக்கத்தில் எழுப்பப்பட்டிருந்த நெடுமேடைப் பீடத்தின் மீதேறி மாசேதுங் சீனாவின் மக்கள் குடியரசு நிறுவப்பட்டு விட்டதைப் பறைசாற்றினார்.*

*ஒரு சில மாதங்களுக்குப் பின்னர், 1950 மே-முதல் நாளன்று புதிய திருமணச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. சட்டப்படி சீன மகளிர் அனைவரும் ஆண்களுக்குச் சமமாக அனைத்து உரிமைகளும் எய்தப் பெற்றனர்.*

*சட்டத்தின் தொடக்க நெறிகள் இப்படிப் பேசுகின்றன: "கொடுங்கோன்மையான - வலுக்கட்டாயப்படுத்துகின்ற ஏற்பாடுகள், பெண்மீது ஆண் மேலாட்சி செய்தல்,*

குழந்தைகளின் நலன்கள்பற்றிய அக்கறையின்மை ஆகியவற்றின் அடிப்படையின் மேல் அமைந்த நிலவுடைமைக் காலத்திய மணமுறை ஒழிக்கப்படுகின்றது.

வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை, ஒருவனுக்கு ஒருத்தி, இருபாலர்கட்கும் சமமான உரிமைகள், பெண்கள்-குழந்தைகளின் சட்டப்படியான நலன்களின் பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படை மீதமைந்த புதியதொரு திருமண முறை நடைமுறைப்படுத்தப் பெறுகிறது,"

புதிய திருமணச் சட்டத்தில் மணவிலக்கு உரிமை, குழந்தைக்கான ஆதரவு உரிமை, சொத்தில் பங்கு பெறும் மரபுரிமை, இல்லத்திலும் பணிமனையிலும் சரிசமமான தகுதி, சொந்த குடிப்பெயர் வைத்துக் கொள்ளும் உரிமை ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன.

மாசேதுங் 1949-இல் அறிவித்ததைத் தந்தை பெரியார் 1925-களில் அறிவித்துவிட்டார்.

# 10. களம் கண்டபோது...!

பண்பாட்டுப் புரட்சியைச் செய்த அவர் அதை நிகழ்த்துகையில் , கையாண்டமுறை உள்ளபடியே அணு உலக அதிசயங்களுள் ஒன்று என்றே கூறவேண்டும்.

புரட்சி என்றால் வன்முறை, நாசங்கள், இரத்த ஆறு ஓடும் என்பது உலக வரலாறு.

ஆனால் இவர் செய்ததோ மிகப் பெரிய அறிவுப் புரட்சி.

அமைதிப்புரட்சியாக அதை அவர்கள் செய்தார்கள்.

'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தம்' ஒன்றை அவர் நடத்திக்காட்டி அதில் வெற்றியும் பெற்றார்

தன்னையும் தன் தொண்டர்-தோழர்களையும் வருத்திக் கொண்டு வரலாறு படைத்தவர் வைக்கம் வீரரான தந்தைபெரியார் அவர்கள்.

எதிர் நீச்சல் அவருக்குப் பழக்கமான ஒன்று. சொல்லடி மட்டுமல்ல, கல்லடி, சாணியடி, அழுகிய முட்டை வீச்சு, முட்டைக்குள் மலத்தை வைத்து அவர் மீது வீச்சு, செருப்பு வீச்சுகள், 'செருப்புத்தோரண வரவேற்பு' - இப்படி மலைமலையாக வந்த எதிர்ப்பைக் கண்டு அவர் பயந்ததில்லை- ஓடி ஒளிந்ததில்லை.

எதிர்ப்பைக் கண்டபோது அவர் மேலும், தணலிலிட்ட தங்கம் ஒளி வீசுவது போல முழு ஒளி வீசத் துவங்கியவர்.

சிறைச்சாலை அவருக்கு மற்றொரு இல்லமாகியது.

அடக்குமுறைகள் ஆயிரமாயிரம் வந்த போதிலும் அவர்கள் அச்சப்பட்டு ஒதுங்கியதுமில்லை, அவர் பணியினின்று

ஓய்ந்ததுமில்லை. இன்முகத்தோடு இன்னலை ஏற்று மகிழ்ந்து இலட்சியப் பயணத்தைச் செய்வதில் அவருக்கு இணை அவரேதான்.

அரச வாழ்வைத் துறந்த சித்தார்த்தன், மக்களைத் திருத்த அலைந்து புத்தனானது போல், மைனர் இராமசாமி, பெரும் கோடீசுவரன் இராமசாமி, அனைத்தையும் துறந்து பெரியார் ஆனார்!

காடுமேடெல்லாம் சுற்றிச் சுற்றிப் பிரச்சாரம் செய்தார்! பாதையில்லாத ஊருக்கெல்லாம் "ஈரோட்டுப்பாதை" அமைத்தார்!

அவர்கள் சிறைவாசம், தண்டனை ஆகியவற்றை அவர்மட்டுமல்லாமல் அவரது குடும்பத்தவரையும் எப்படி ஏற்கப் பக்குவப்படுத்தினார் என்பதற்கு அவர்தனியே சுயமரியாதை இயக்கம் காணுவதற்கு முன்பாகக் காங்கிரசில் இருந்த காலத்திலேயே நடந்த ஒரு நிகழ்வைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாக இருக்கும். அன்றைய 'நவ சக்தி' ஏட்டில் வெளிவந்த அந்தச் செய்தி இதுதான்.

### ஸ்ரீமான் நாயக்கர் மனைவியாரின் செய்தி

"என் கண்வர் ஈ.வி.இராமசாமி நாயக்கர் இந்த மாதம் முதல் தேதி திருவனந்தபுரம் சிறையிலிருந்து விடுதலையானார். இன்று காலை 10 மணிக்கு (11.9.1924) மறுபடியும் இராஜத்துரோகக் குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்டிருக்கின்றார். இரண்டு வருஷத்திற்குக் குறைவில்லாத காலம் தண்டனை கிடைக்கக்கூடிய பாக்கியம் தமக்குக் கிடைத்திருப்பதாய்ச் சொல்லி என்னிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டுவிட்டார்.

அவர் திரும்பத் திரும்பத் தேச ஊழியத்தின் பொருட்டுச் சிறைக்குப் போகும் பாக்கியம் பெற வேண்டுமென்றும், அதற்காக அவருக்கு ஆயுள் வளரவேண்டும் என்றும் கடவுளையும் மகாத்துமா காந்தியையும் பிரார்த்திக்கின்றேன்.

அவர் பாக்கியில் வைத்துவிட்டுப் போவதாக நினைத்துக்கொண்டு போகிற வைக்கம் சத்தியாக் கிரக விஷயத்தில் வேண்டிய முயற்சிகள் எடுத்து அதைச் சரிவர அகிம்சா தருமத்துடன் நடத்த அனுகூலமான முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமாய் என் கணவரிடம் அபிமானமும் அன்பும் கொண்ட தலைவர்களையும் தொண்டர்களையும் பக்தியோடு பிரார்த்தித்துக் கொள்கின்றேன். **- நாகம்மாள்** (12.9.1924 "நவசக்தி" ஈரோடு, பக்கம் 8)

## தன்னை வருத்தி, பிறரை வாழவைப்பவர்

தன்னை வருத்திக்கொண்டு தனக்கென வாழாப் பிறர்க்குரியவரான தந்தை பெரியார் அவர்கள், 1956-இல் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குக்காகத் தண்டனை பெற்றார்.

ஒழுக்கத்திலும், நாணயத்திலும், திறமையிலும் தலைசிறந்த நிர்வாகியான திரு ஆர்.எஸ்.மலையப்பன் அய். ஏ. எஸ்., அவர்கள் திருச்சி மாவட்ட கலெக்டராகப் பணிபுரிந்த போது நிலம் சம்பந்தமாகப் பிறப்பித்த ஓர் ஆணையின்மீது தீர்ப்பு சொன்ன சென்னை உயர்நீதிமன்ற இரண்டு உயர் சாதி நீதிபதிகள், மற்றும் தேவையற்ற முறையில் இப்படிப் பட்டவர்களை கலெக்டர்களாகப் போட்ட அரசு வெட்கத்தால் தலைகுனியவேண்டும்; இப்படிப்பட்டவர் அந்தப் பதவி வகிப்பதற்கு லாயக்கற்றவர் என்றெல்லாம் தாறுமாறாகத் தீர்ப்பு எழுதினர். இந்தத் தீர்ப்பே சரியானது என்று மேலும் அவரை அசிங்கப்படுத்தி "இந்து" நாளேடு தலையங்கம் தீட்டியது.

ஒரு ஆணை சரி அல்லது தவறு என்பதை மட்டும் கூறவேண்டுமே தவிர மற்றவைகளைப்பற்றி இவ்வளவு மோசமாக ஏன் எழுதவேண்டும்?

இதே கலெக்டர் தனது சாதியினராக இருந்திருந்தால் இப்படி எழுதியிருப்பார்களா தங்களது தீர்ப்பில் இந்த இரண்டு நீதிபதிகள்? அல்லது இந்த இரண்டு நீதிபதிகளும் வேறு வகுப்பினராக இருந்திருந்தால் இந்தப்படி எழுதியிருப்பார்களா?

என்று கொதித்தெழுந்து, திருச்சி டவுன் ஆல் மைதானம் முன்பு பலலட்சம் மக்களைத்திரட்டி ஓர் கண்டனப் பொதுக்கூட்டம் போட்டு, எழுதிய ஏடு உட்பட அனைவர்பற்றியும் பேசினார். அதற்காகத்தான் கோர்ட் அவமதிப்பு வழக்கு!

அன்றைய தலைமை நீதிபதி ஜஸ்டீஸ் பி.வி.இராஜ மன்னார், ஜஸ்டீஸ் ஏ.எஸ்.பி. அய்யர் அய்.சி.எஸ்., ஆகியோர் இதனை விசாரித்துத் தந்தை பெரியார்மீதும், அன்னை ஈ.வெ. ரா. மணியம்மை மீதும் ('விடுதலை'யில் பேச்சை வெளியிட்டதற்காக) தண்டித்தனர் . அபராதம் கட்ட மறுத்தனர் அவர்களிருவரும்.

அப்போது நீதிமன்றத்தில் எதிர் வழக்காடாமல், தனது தொண்டுபற்றி ஒரு நீண்ட அறிக்கையினைத் தன்னிலை விளக்கமாகப் படித்தார் (23.4.1957). அதில் "இந்த நாட்டில் ஜாதி தர்மம் வர்ணசிரம அடிப்படையில் இருப்பதால், கீழ்ஜாதிக்காரர்களை மேலே வராமல் தடுப்பது மேல் ஜாதியினரின் தர்மமானபடியால் இப்படி நடக்கிறது! அதை எதிர்ப்பது எனது வாழ்நாள் தொண்டு - பணி அதற்காக நான் எந்த விலையும் தரத் தயார்!

வாயில்- நாக்கில் குற்றம் இருந்தாலொழிய

வேம்பு இனிக்காது, தேன் கசக்காது

பிறவியில் மாறுதல் இருந்தால் ஒழிய புலி

புல்லைத்தின்னாது-ஆடு மனிதனைக் கடிக்காது

அது போலவாக்கும் நம் உயர்ஜாதி ஆதிக்கவாதிகளின் மனப்பான்மை" என்று கூறிவிட்டு,

"புலி வேட்டைக்குப் போகும் போது புலி மேலே விழுந்து கடித்தால் ஒருவரிருவர் சாகவேண்டியது தவிர வேறு வழியில்லை" என்று உருக்கமாகத் தெரிவித்தார். சுமார் 40 பக்கம்கொண்ட அறிக்கை அது. பண்பாட்டுப் படையெடுப்பின் விளைவுகள் மூலம் பாமரர்களை மட்டுமல்ல, படித்த

பதவியாளர்களையும் காப்பாற்ற அவர் 'சுமந்த சிலுவைகள்' இப்படிப் பலப் பல.

இதில் ஒரு சுவையான சம்பவம், இதில் யாருக்கு ஆதரவாகப் பேசித் தந்தை பெரியார் தண்டனை பெற்றாரோ அந்த ஆர்.எஸ்.மலையப்பன் அவர்களைப் பெரியார் பார்த்ததில்லை, பழகியதில்லை. யாரைக்கண்டித்தாரோ அவர்களையும் அறியார். தனிப்பட்ட வெறுப்பு ஏதும் அவரிடத்தில் இல்லை. அவரது பார்வை பொதுநலப் பார்வை மட்டும்! அதனால் தான் கவியரசு கண்ணதாசன்

'நீதி மன்ற நீதிக்கும் நீதி சொல்வார்.
நெறி கெட்டு வளைந்ததெல்லாம் நிமர்த்தி வைப்பார்'

என்று வெகு ஆழமாக கொள்ளை இன்பம் குலவு கவிதை யாத்தார்!

## போராட்டக் களத்திலும் பொறுப்பான ஆணைகள்

தந்தை பெரியார் தான் மட்டுமல்ல; தம் இயக்கத்தால் நடத்தப்படும் போராட்டங்களில் கூட இயக்கத் தோழர்கள் எவ்வளவு கட்டுப்பாட்டுடனும் பொறுப்புடனும் ஒழுக்கத்துடனும் பொதுஒழுக்கத்துக்கும், சொத்துக்கும் பங்கம் இல்லாமலும் நடந்துகொள்ள வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார் . மன அளவில், மாற்றத்தின் அளவில் பெரும் புரட்சி இருக்கவேண்டும் என்பதுதான் அவரின் சிந்தனையே தவிர, வன்முறைதான் புரட்சி என்ற கொச்சைத்தனம் அவரிடம் என்றும் தலைகாட்டியதில்லை!

1948இல் இந்தி திணிக்கப்பட்டபோது தந்தை பெரியார் நடத்திய போராட்டத்தில் தொண்டர்களுக்குத் தந்தை பெரியார் விடுத்தவை பொதுத் தொண்டுக்கான உயர் இலக்கணமாகும்.

1. தொண்டர்களுக்குத் தனிப்பட்ட யாரிடமோ அல்லது தனிப்பட்ட எந்த வகுப்பிடமோ சிறிதும் கோபம், வெறுப்பு, துவேஷம் கூடாது.

2. கடின வார்த்தை, கேவல வார்த்தை, மனவருத்தம் அல்லது ஆத்திரமூட்டும் வார்த்தை கண்டிப்பாய் பிரயோகிக்கக் கூடாது.

### ஒரு புன் சிரிப்பு

3. போலீஸ்காரரிடம் நமக்கு சிறிதும் வெறுப்பு, கோபம், விரோத உணர்ச்சி இருக்கக்கூடாது.

4. போலீஸ்காரர் முன் வந்ததும் அவரைப் பார்த்துப் புன் சிரிப்பு காட்ட வேண்டும்.

5. கூப்பிட்டால், கைது செய்வதாய்ச் சொன்னால் உடனே கீழ்ப்படிய வேண்டும்.

6. போலீஸ்காரர் அடித்தால் மகிழ்ச்சியோடு சிரித்த முகத்துடன் அடி வாங்கவேண்டும். நன்றாய் அடிப்பதற்கு வசதி கொடுக்க வேண்டும்.

7. போலீஸ்காரர் பக்கத்தில் வந்தவுடன் நீங்கள் மெய்மறந்து பக்தியில் இருப்பதுபோல், ஒரு மகத்தான காரியத்தை நாம் சாதிப்பதற்கு இந்த அற்ப அதாவது நம் சரீரத்துக்கு மாத்திரம் சிறிது தொந்தரவு, வலி கொடுக்கக்கூடிய காரியத்தை ஏற்கும் வாய்ப்பு (பாக்கியம்) நமக்குக் கிடைத்திருக்கிறது என்று வரவேற்கும் தன்மையில் இருக்கவேண்டும்.

8. போலீஸ்காரர் அடிக்கும்போது தடுக்கும் உணர்ச்சியோ, தடியை மறிக்கும் உணர்ச்சியோ கண்டிப்பாக இருக்கக்கூடாது.

9. அப்படிப்பட்ட தொண்டர், சர்வாதிகாரியாக இருந்தாலும் அவர்கள் அருள்கூர்ந்து கிட்டவே வரக்கூடாது.

### முறையான முழக்கங்கள்

10. ஒலி ஒலிப்பதில் அசிங்கமான வார்த்தைகள், தனிப்பட்ட மனிதர்களைக் குறிக்கும் வார்த்தைகள் கண்டிப்பாய் உச்சரிக்கக்கூடாது.

11. எந்தக் காரியத்தின் மூலமும் தொண்டர்கள், நடத்துபவர்கள் , தலைவர்கள் பலாத்கார உணர்ச்சி, பலாத்கார பயன் உள்ள எண்ணங்கள், செய்கைகள் கொள்ளக் கூடாது.

## சுட்டால் மார்பைக் காட்டுங்கள்!

*12. போலீஸார் சுடுவார்களானால் பொது ஜனங்கள் ஓடலாம். ஆனால் தொண்டர்கள் மார்பைக் காட்டியே ஆகவேண்டும்.*

*13. இந்தி எதிர்ப்பு இயக்கம், காரியாலயம், நிர்வாகம், நிர்வாகஸ்தர்கள் ஆகியவர்களுக்குத் தொண்டர்கள் அடிமை போல் கட்டுப்பட்டாக வேண்டும்.*

*14. பெண்களிடமும், மற்றும் இயக்கத்தில் உள்ளவர்களிடமும், வெளியே உள்ளவர்களிடமும், வெளியில் உள்ளவர்களிடமும் அன்பாய், மிகமிக யோக்கியமாய் நடந்து கொள்ள வேண்டும்.*

*இப்படிப்பட்ட இன்னும் பல காரியங்களில் மிகுதியும் கண்டிப்பாய் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது அவசியம்.*

**("குடி அரசு" 7.8.1948)**

*பெரியார் உருவாக்கிய பண்பாட்டுப் புரட்சிகளில் இதுவும் தனித்தன்மையானதே.*

# 11. தந்தை பெரியாரின் அணுகுமுறை

தந்தை பெரியாரின் அணுகுமுறையானது நோய் நாடி அதன் முதல் நாடும் தன்மையானதாகும்.

மனித சமத்துவத்திற்கும், நேயத்திற்கும் தடையாக இருப்பது எதுவாயினும் அதனை அழித்துத் தரைமட்டமாக்கிவிட்டு, அதன்மேல் புத்துலகைப் படைப்பது என்கிற தீரத்தில் அமைந்தது அவரது பொதுத் தொண்டாகும்.

1928 நவம்பரில் சென்னையில் தென்னிந்திய சீர்திருத்தக்காரர்கள் மாநாடு நடைபெற்றது.

அம்மாநாட்டை செல்வி ஜோதிர்மாயி கங்குலி என்பவர் தொடங்கி வைத்தார். அந்த அம்மையார் பஞ்சாபில் இருந்த ஜாதி ஒழிப்பு சங்கத்தின் தலைவராவார். அம்மாநாட்டிலேயே சமபந்தி உணவு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அம்மாநாட்டில் தந்தை பெரியார் ஆற்றிய உரை அவரின் அணுகுமுறையை அப்பழுக்கின்றி வெளிப்படுத்தக் கூடியதாகும்.

“ஒரு பெரிய கிணறு இருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். அந்தக் கிணற்றிற்கு மிகப் பழமையானதும் விசேஷமானதுமான ஒரு புராணம் இருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். அதாவது, அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு துளி தண்ணீரைச் சாப்பிடுவதனாலோ அல்லது மேலே தெளித்துக் கொள்வதனாலோ நம்முடைய எல்லாப் பாவமும் மகா பாதகமான காரியம் என்று சொல்லப்பட்ட செய்கைகளைச் செய்தாலும் மன்னிக்கப்படுவதுடன் மோட்சலோகம் என்பது கிடைக்கும் என்று எழுதியிருப்பதாகவே வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் இப்போது அந்தக் கிணற்றுத் தண்ணீரில் ஒரு சிறிது சாப்பிட்டால் விஷபேதி காணக்

கூடியதாகவும், ஸ்நானம் செய்தால் சரீரமெல்லாம் சொறிசிரங்கு வரக்கூடியதாகவும் இருந்தால், அதற்காக நாம் செய்யவேண்டிய வேலை என்ன? அந்தத் தண்ணீரில் விஷப்பூச்சிகள் உண்டாகித் தண்ணீரைக் கெடுத்துவிட்டது என்று கருதி, அந்த விஷப்பூச்சிகள் சாகத்தக்க மருந்தை அந்தக் கிணற்றுக்குள் போடுவோம். அப்படிப் போட்ட பிறகும் அந்தத் தண்ணீரின் குணம், அப்படியே முன்போலவே இருக்குமானால் மேற்கொண்டு என்ன செய்வோம்? மருந்துக்கும் கட்டுப்படாத அளவு கெடுதி, அந்தத் தண்ணீரில் உண்டாய்விட்டதாகக் கருதி, அந்தக் கிணற்றுத் தண்ணீர் முழுவதையும் இறைத்து, வெளியில் ஊற்றி, அந்தக் கிணற்றையும் நன்றாகக் கழுவி விடுவோம். அந்தப் படி செய்தபிறகும் மறுபடியும் அந்தத் தண்ணீரின் குணம் அப்ப்டியே இருக்குமானால், அதன் காரணம் என்ன? அந்தக் கிணற்றுக்குத் தண்ணீர் வரும் ஊற்றே விஷத்தன்மை பொருந்தியது. அதாவது விஷநீர் ஊற்றுக் கிணறு என்றுதானே ஏற்படும்?

அப்படிப்பட்ட விஷநீர் ஊற்றுக் கிணற்றை என்ன செய்வீர்கள்? பழைய புராணத்தையும் அதில் உள்ள அந்தக் கிணற்றுப் பெருமையையும் மதித்து, அதிலேயே குளித்து, அந்த நீரையே சாப்பிட்டு, விஷ பேதியையும், சொறி சிரங்கையும் அடைந்து கொண்டிருப்பீர்களா? அல்லது அந்தக் கிணற்றை மண்ணைக் கொட்டி மூடிவிடுவீர்களா என்பதை யோசித்துப் பாருங்கள்'' என்று பேசினார்.

இதுதான் தந்தை பெரியார் அணுகுமுறை - கொள்கையை அணுகும் முறை!

6.4.1926-இல் தந்தை பெரியார் காரைக்குடிக்கு வந்தார். தோழர்கள் இராய - சொக்கலிங்கம், பி.ச. சுப்பிரமணியம், வ.ரா., கும்பலிங்கம் பிள்ளை போன்றவர்கள் தந்தை பெரியாரை மேளதாளத்துடன் அழைத்துச் சென்று தாழ்த்தப்பட்டவர் களுக்கென்று தனியாக வெட்டிய கிணற்றைத் திறந்து வைக்கச் சொன்னார்கள்.

தந்தை பெரியார் அங்கே என்ன பேசினார்?

"இந்தக் கிணற்றைத் திறந்து வைக்கும் வேலையைப் பெருமையாகக் கொண்டு எனக்கு அளித்திருந்தாலும் உண்மையைச் சொல்லுகிறேன். இந்தக் கிணற்றைத் திறந்து வைக்கக் கொஞ்சங்கூட என்மனம் இடந்தரவில்லை. இதுபோலத் தனிக் கிணறு வெட்டுவது ஆதி திராவிடர்கள் நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் என்பதும், அவர்கள் நம்முடன் கலக்கத் தக்கவர்கள் அல்லர் என்று எண்ணிக் கொண்டு ஒரு நிரந்தரமான வேலியும், நினைவுக் குறிப்பும் ஏற்படுத்துவதாகத்தான் அர்த்தமாகும்.

பட்சிகளும், மிருகங்களும் குளங்களில் தண்ணீர் குடிப்பதில்லையா? அப்படிப்பட்ட தண்ணீரை இந்த ஆதிதிராவிடர் தோழர்கள் எடுத்துச் சாப்பிடுவதால் என்ன கெடுதி ஏற்பட்டு விடும்?

அருமை ஆதிதிராவிடர் தோழர்களே! நீங்கள் உங்கள் ஜாதிக்கு இழிவு தேடிக் கொள்கிறீர்கள். எவரைக் கண்டாலும் இரு கை தூக்கி "சாமி'' என்று கும்பிடுகிறீர்கள். நீங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணம் உங்களுடைய ரத்தத்தில் கலந்து இருக்கிறது. அதை மாற்றிட வேண்டும். சுயமரியாதையில் கவலை இல்லாத ஜாதியாரை எவ்வளவுதான் உயர்த்தினாலும் உயராது'' என்று. தாழ்த்தப்பட்ட மக்களிடத்திலே சுயமரியாதைத் தீயைக் கொளுத்தினார். எந்த நோக்கத்துக்காக அழைக்கப்பட்டாரோ, அந்த நோக்கம் தவறானது என்று தாம் சிந்தித்து உணர்ந்தபோது, தம்மை அழைத்துப் பெருமைப்படுத்தினார்களே என்பதில் மயங்கிடாமல், உண்மையை வெட்டொன்று துண்டு இரண்டாகப் பேசும் அறிவு நாணயம் என்பது தந்தை பெரியாருக்கே உரிய தனித்தன்மையாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே தன்மான உணர்வும், விடுதலை உணர்வும் உண்டாக்கப்படுவதற்கு இந்த நாட்டிலே

தந்தை பெரியார், அவர் கண்ட இயக்கமும் முழுமுதற் காரணமாக இருந்து வந்திருக்கிறது, இருந்தும் வருகிறது!

தந்தை பெரியார் அவர்களின் பேச்சு முறை இயல்பான தன்மையும், நகைச்சுவை உணர்வும் நேரிடைப் பொருளும் கொண்டதாக இருக்கும்.

சாக்ரடீசும், பிளேட்டோவும் எப்படி கேள்விகளை எழுப்பி, மக்கள் மத்தியில் சிந்தனையைத் தட்டி எழுப்பினார்களோ அதுபோன்றதே தந்தை பெரியாரின் அணுகுமுறையும். 'தென்கிழக்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' என்று அய்.நா. அளித்த விருதில் பெரியார் பற்றிக் குறிப்பிட்டிருந்தது அந்த வகையில் மிகவும் பொருத்தமானதாகும்.

இதோ பெரியார் பேசுகிறார்:

"மனிதனுக்கு மனிதன் தொடக்கூடாது; கண்ணில் படக்கூடாது; தெருவில் நடக்கக்கூடாது; கோயிலுக்குள் போகக்கூடாது; குளத்தில் தண்ணீர் எடுக்கக்கூடாது என்கிறவை போன்ற கொள்கை தாண்டவமாடும் ஒரு நாட்டைப் பூகம்பத்தால் அழிக்காமலோ, எரிமலையின் நெருப்புக் குழம்பால் எரிக்காமலோ, சமுத்திரம் பொங்கி மூழ்கச் செய்யாமலோ, பூமிப் பிளவில் அமிழச் செய்யாமலோ, சண்டமாருதத்தால் துகளாக்காமலோ விட்டிருப்பதைப் பார்த்தபிறகும் கூட கடவுள் ஒருவர் இருக்கிறார் என்றும், அவர் நீதிமான் என்றும், சர்வதயாபரர் என்றும் யாராவது சொல்லவந்தால் அவர்களை என்னவென்று நினைப்பது என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள். இம்மாதிரி கொடுமைப்படுத்தித் தாழ்த்தப்பட்ட ஒரு மாபெரும் மக்கள் சமூகம் இன்னும் எத்தனை நாளைக்குத்தான் பொறுமையோடும், சாந்தத்தோடும், அஹிம்சா தர்மத்தோடும் இருக்கவேண்டும் என்று விரும்புகின்றீர்கள்? இம்மாதிரியான மக்கள் இன்னும் ஒரு நாட்டில் இருந்துகொண்டு உயிர்வாழ்வதைவிட, அவர்கள்

இம்முயற்சியில் உயிர் துறப்பதை உண்மையிலேயே தப்பு என்று யாராவது நினைக்கின்றீர்களா?'' ("தமிழர் தலைவர்", பக்கம் 65)

இந்தக் கேள்வி முறையிலே உள்ள நியாயத்தை யார் செவிமடுத்தாலும் சிந்திக்கத் தானே வேண்டும்?

தஞ்சாவூரில் வாலிபர் சங்கத்துக்குத் தலைமை தாங்கிப்பேச வந்தார் தந்தை பெரியார். அங்குப் பேசிய தமிழன்பர் ஒருவர் பெரியார் இராமாயணத்தைக் குறை கூறுவது தவறு என்றும், கலையுணர்ச்சிக்காகவும் அதைப் போற்ற வேண்டும் என்றும் கூறினார். அதற்கு அந்தக் கூட்டத்திலேயே தந்தை பெரியார் பதில் கூறினார்:

"நான் கலையுணர்ச்சியையும், தமிழ் உணர்ச்சியையும் வேண்டாம் என்று கூறவில்லை. தங்கக் கிண்ணத்தில் அமேத்தியம் (மலம்) இருந்தால் தங்கக் கிண்ணம் என்பதற்காக அமேத்தியத்தைப் புசிக்க முடியுமா? அதுபோல் கம்பராமாயணப் பாட்டுகள் சிறந்தவைதான். அவற்றில் உள்ள மூடநம்பிக்கைக்கும், தமிழர் இழிவுக்கும், ஆரியர் உயர்வுக்கும் ஆதாரமானவற்றை வைத்துக்கொண்டு எப்படி அவற்றைப் பாராட்ட முடியும்?'' என்றார்.

"கொசு வலை உபயோகிப்பதால், நாம் கொசுக்களுக்குத் துவேஷிகளாகி விடுவோமா? மூட்டைப் பூச்சி கடிக்காமலிருப்பதற்கு நம் வீட்டை அடிக்கடி சுத்தஞ்செய்வதால், நாம் மூட்டைப் பூச்சி துரோகிகள் ஆகி விடுவோமா? இப்படிப்பட்ட துவேஷத்திற்கும், துரோகத்திற்கும் நாம் ஆளாகக்கூடாது என்று பயந்து பயந்து, பார்ப்பனர் தூஷணைகளுக்கு நடுங்கி நடுங்கி நம் குறைகளை வெளியில் எடுத்துச் சொல்வதற்கும், அவைகளை நிவர்த்திப்பதற்கும் இயலாத அவ்வளவு மோசமான பயங்காளிகளாக ஆகிவிட்டோம்'' ("தமிழர் தலைவர்", பக்கம் 162)

இதில் தந்தை பெரியார் கூறும் உவமானங்கள் எவ்வளவு பொருத்தமானவை! அவர் பேச்சு முறை எதிரிகளையும் சிந்திக்க

வைக்கும் தன்மை கொண்டவை என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும்.

*1929-இல் தந்தை பெரியார் சிங்கப்பூர் சென்றிருந்தார்.*

*நகர மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. பார்ஸ்டன் என்னும் ஆங்கிலேயர் தலைமை வகித்தார். தந்தை பெரியார் பேசும்போது இந்தியாவைப்பற்றி அமெரிக்க மாது மிஸ்மோயோ எழுதியுள்ளதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். அப்பொழுது தந்தை பெரியாரிடம் ஒருவர் கேள்வி எழுப்பினார்.*

*கேள்வி: மேயோ எழுதியதன் கருத்து என்ன?*

*பதில்: கருத்து என்ன என்பதை நாம் பிறகு கவனிப்போம். அந்தம்மாள் எழுதியிருப்பவை உண்மையா? பொய்யா? என்று நாம் முதலில் பார்க்கவேண்டும்.*

*கேள்வி: காந்தியார் அந்தம்மாளைச் "சாக்கடைப் பரிசோதனை'' என்று சொல்லியிருக்கிறாரே?''*

*பதில்: திரு. காந்தியார், சாக்கடைப் பரிசோதனை என்று சொல்லியது உண்மையாயிருந்தாலும், சாக்கடை இல்லாத இடத்தையாவது, சிங்காரவனத்தையாவது காட்டி, அவற்றைப் பார்க்க அந்தம்மாளைக் கூப்பிட்டிருக்கலாம். அப்படிக் காட்டுவதற்கு ஆதாரமில்லாததால்தான் காந்தியார் இந்தியர்களைப் பார்த்து, 'மேயோ எழுதிய புத்தகத்தை மறந்து விடாமல் எப்பொழுதும் ஒரு பக்கத்தில் வைத்திருங்கள்'' என்று சொல்லியிருக்கிறார். இதன் கருத்து சாக்கடையைச் சுத்தம் செய்யுங்கள் என்பதேயாகும்.*

*கேள்வி: வேறு பலர் மறுப்பு எழுதியிருக்கிறார்களே?*

*பதில்: மேயோ சொன்னவற்றை யாரும் முழுதும் மறுக்கவில்லை. மிஸ் மேயோ நாட்டிலும் இவ்விதம் இல்லையா என்றுதான் எழுதியிருக்கிறார்கள். நீ மாத்திரம் யோக்கியனா என்றால், இதற்குப் பெயர் மறுப்பு ஆகுமா? ஒப்புக் கொள்வதாகும்.*

என்று பதில் அளித்தார்.

இது தந்தை பெரியாரின் தர்க்கவாதத்துக்கான ஒரு எடுத்துக்காட்டாகும்.

1928-ஆம் ஆண்டில் சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் தன்மான இயக்கக் கொள்கைபற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அய்யர் ஒருவர் பெரியாரிடம் கேள்வி ஒன்றைக் கேட்டார்.

"நீங்கள் சாமியைக் கல் என்று சொன்னீர்களே! இது சரியா?'' என்று கேட்டார்.

அதற்கு ஈ.வெ.ரா. உடனே: "ஆம்! வேண்டுமானால் எல்லோரும் என்னுடன் வாருங்கள்! காட்டுகிறேன்!'' என்று மேஜை மேலிருந்த கைத்தடியைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டார் கோவில் பக்கம்; எல்லோரும் கைகொட்டி நகைத்தனர்

மற்றொரு பார்ப்பனர்: "ஆனால், அந்தக் கல்லுக்கு மந்திர உச்சாடனம் செய்யப்பட்டிருக்கிறது'' என்றார்.

ஈ.வெ.ரா. - அப்படியானால், மொட்டைப் பாறையில் உடைத்த கல்லுக்குச் செய்த மந்திர உச்சாடனத்துக்கு உண்மையில் சக்தி இருக்குமானால், இதோ எதிரில் இருக்கும் உயிருள்ள மனிதருக்கும் கொஞ்சம் அதே மந்திரத்தை உபதேசம் செய்து, அவரை அந்தக் கல்லுச் சாமிக்குப் பக்கத்திலிருந்து பூசனை செய்யும்படியாகவாவது செய்யக்கூடாதா?'' என்றார்.

முதலில் கேட்டவர்: 'இந்துமதம்' என ஒன்று இல்லையென்பதை நானும் ஒப்புக் கொள்ளுகிறேன். நீங்களாவது ஒரு புதுமதம் சொல்லக்கூடாதா?'' என்றார்.

ஈ.வெ.ரா.: "நான் ஒரு புது மதத்தைப் போதிக்க வரவில்லை. ஒழுக்கத்திற்கு விரோதமான கொள்கைகளை மதம் என்றும், சாமி என்றும், புராணம் என்றும் பின்பற்றாதீர்கள். ஒழுக்கமாகவும், உண்மையாகவும், மற்ற மக்களிடத்தில் அன்பாகவும், சம பாவிப்பாகவும், பரோபகார எண்ணத்துடனும்

இருந்தால் போதும் என்றுதான் சொல்லுகிறேன். அதற்குத் தகுந்த கொள்கைகள் எந்த மதமானாலும் சரி, அது மதம் அல்லாவிட்டாலும் சரி என்றுதான் சொல்லுகிறேன்'' என்றார்.

கேட்டவர்: இருக்கின்றதை ஒழிப்பதானால், மற்றொன்றைக் காட்ட வேண்டாமா?'' என்றார்.

ஈ.வெ.ரா: வீட்டிற்குள் அசிங்கம் இருக்கின்றது. நாற்றம் அடிக்கிறது; எடுத்து எறியுங்கள் என்றால், அதற்குப் பதில் அந்த இடத்தில் என்ன வைக்கின்றது என்று கேட்பது சரியாகுமா?'' என்றார்.

இப்படியாக பிரச்சாரம் மூலமும், தர்க்க வாதங்கள் மூலமும் மக்கள் மத்தியில் தந்தை பெரியார் ஏற்படுத்திய பகுத்தறிவுப் புரட்சி, பண்பாட்டு மறுமலர்ச்சி என்பது சாதாரணமானதல்ல!

பிரச்சாரத்தின் மூலமாகத்தானே மூடநம்பிக்கைகளையும் புராணங்களையும், இதிகாசங்களையும் கற்பனைக் கடவுள்களையும் மக்கள் நம்பும்படியாகச் செய்தனர். அதே பிரச்சாரத்தைப் பகுத்தறிவு முறையில் பயன்படுத்தி, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மூடநம்பிக்கைகளின் வேர்களை வீழ்த்தினார் தந்தை பெரியார்.

தந்தை பெரியாரின் இந்த அணுகுமுறைக்கு மகத்தான வெற்றி கிட்டியதை யார்தான் மறுக்க முடியும்?

தமிழ்நாட்டுக்கு 1977 செப்டம்பரில் வருகை தந்த பிரபல சோசலிஸ்டும், பொருளாதார நிபுணரும், ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களின் உற்ற தோழருமான அசோக் மேத்தா அவர்கள் கூறிய ஒரு தகவல், கருத்து தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் இயக்கம் ஏற்படுத்திய தாக்கத்திற்கான அத்தாட்சியாகும்.

"தென்னகத்தில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் இன்றைக்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே பிற்படுத்தப்பட்ட மக்களின்மீது உயர் ஜாதிக்காரர்கள் செலுத்திய ஆதிக்கத்தை எதிர்த்து

சுயமரியாதை இயக்கம் அறைகூவல் விடுத்தது. பிற்படுத்தப்பட்ட மக்கள் அதிலே வெற்றி கண்டு அரசியலையும் கைப்பற்றினார்கள். தமிழகத்தில் ஏற்கெனவே நடந்துள்ள இத்தகைய மாற்றத்தின் எதிரொலியை அண்மையில் சில மாதங்களாக வட மாநிலங்களில் நடந்துள்ள அரசியல் மாற்றங்களில் காண முடிகிறது.

ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களாக இருப்பவர்கள் விவசாயிகள்தான். அத்தகைய பிற்படுத்தப்பட்ட மக்கள் இப்பொழுது வட மாநிலங்களில் அரசியலைக் கைப்பற்றிக்கொண்டு வருகிறார்கள். வடநாட்டுக்கும், தென்னாட்டுக்கும் இடையே இப்படிப்பட்ட சிந்தனைப் பூர்வமான ஒற்றுமை ஏற்பட்டு இருக்கிறது'' என்று அசோக் மேத்தா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

# 12. தந்தை பெரியார் பற்றி...

புத்தாயிரத்தை உருவாக்கிய தலைவர்கள் வரிசையில்
பெரியார்பற்றி – பிரபல ஆங்கில நாளேடான
'டைம்ஸ் ஆஃப் இந்தியா'

"E V Ramaswamy Naicker, or Periyar as he came to be known, was a radical social reformer. What is less known about him is that he was also active in the freedom struggle, participating in the non-cooperation movement, offering satyagraha and defending khadi, which Gandhi was then propagating. Portraying Periyar as just anti-Brahmin or anti-God would be to do injustice to a man who fought against Hindu orthodoxy with the kind of rare energy and conviction that transformed the social landscape of Tamil Nadu. To understand why Periyar's advocacy of rationalism and social reform caught the imagination of the underclass, his movement must be placed in the context of the rigid rituals that had legitimised caste oppression at that time.

Periyar left the Congress because of a difference of approach with Gandhi and developed Dravidian cultural alternatives to the prevailing hegemonic Brahminical culture.

Though Periyar was often criticised for his methods - which included breaking idols and taking out anti-God processions - he was emphatic that from his radical point of view, idols were symbols of Brahminical ideology and superstition."

**- 'The Times of India' - 7.12.99**

**இதன் தமிழாக்கம்:**

*"பெரியார் என்று மக்களுக்கு அறிமுகமாயுள்ள ஈ.வெ. ரர்மசாமி நாயக்கர் அவர்கள் ஒரு தீவிரமான சீர்திருத்தவாதியாவார்!*

*தமிழ்நாட்டின் சமூக அமைப்பு எனும் நிலப்படத்தை, அசைக்க முடியாத தனது உறுதியாலும், வேறு எங்கும் எளிதில் காணமுடியாத கடும் உழைப்பாலும் இந்து சனாதனத்தை எதிர்த்துப் போரிட்ட அந்த மாபெரும் மனிதரான பெரியார் அவர்களை, வெறும் பார்ப்பன எதிர்ப்பாளராகவும், கடவுள் மறுப்பாளராகவும் மட்டும் படம் பிடித்துக் காட்டுவது அவரின் பெருமைக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகும்!*

*விடுதலைப் போராட்டத்தில் மிகத் தீவிரமாகப் பங்கு கொண்டவர் அவர்; ஒத்துழையாமை இயக்கத்தில் கடுமையாக உழைத்தவர். காந்தியாருடன் சத்தியாகிரகங்களில் ஈடுபட்டு, காதி என்ற கதரைப் பரப்புதல் போன்ற பல அரிய தொண்டுகளை அவர் செய்தவர் என்பது நம் மக்களுக்கு அதிகம் தெரியாத ஒன்றாகும்."*

*"பெரியார் அவர்களது பகுத்தறிவுப் பிரச்சாரம், சீர்திருத்தக் கொள்கைகளும் எப்படி சமூக அடித்தளத்தில் அவதிப்பட்ட கடைக்கோடி மக்களைச் சுண்டி இழுத்தது என்பதை ஒருவர் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், அம் மக்களை வாட்டிய சாதிக் கொடுமைகளையும், அவற்றை நிலைநிறுத்த பயன்பட்ட சடங்கு சம்பிரதாயங்களையும் முதலில் சரியாய்ப் புரிந்துகொள்ள முனையவேண்டும்.*

*காந்தியாரின் அணுகுமுறையால் ஏற்பட்ட கருத்து மாறுபாட்டால் அவர் காங்கிரசை விட்டு வெளியேறினார்; காலங்காலமாய்த் தம் மண்ணில் நிலவிய பார்ப்பனப் பண்பாட்டிற்கு மாற்றாக ஒரு திராவிடப் பண்பாட்டை வளர்க்கும் இயக்கம் கண்டார் அவர்!*

சிலைகளை உடைத்தவர், கடவுள் மறுப்பு ஊர்வலங்களை நடத்தியவர் என்று அவர் கையாண்ட முறைகளுக்காகப் பெரியாரை பலர் கடுமையாக விமர்சித்தனர்.

அவைகள் பார்ப்பனீயத்தின் சின்னங்களாகவும் மூட நம்பிக்கைகளாகவும் காட்சி அளித்த காரணத்தால்தான் அவைகளை கடுமையாக எதிர்க்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்று அவர் தமது நிலையை உறுதிப்படுத்திப் பதிலை அளித்தார்."

## ஆயிரம் ஆண்டில் வரலாற்றை உருவாக்கியவர்கள்

## Makers of the Millennium

"வேதங்களில் பார்ப்பனர்களுக்கு மிகப் பெரும் சலுகைகள் அளிக்கப் பெற்றுள்ளன; எது நாள் வரை அந்தச் சலுகைகளுக்கு அறைகூவல் (சவால்) விடப்படவில்லையோ அதுவரை மட்டுமே அவை புனிதமானவையாக இருந்தன. இந்த அறைகூவல் தமிழ்தேசத்தில் புயலென எழுந்தது. கடவுள் சிலைகளை உடைத்த ஒருவர் அதைத் தொடங்கினார்.அவர் வேதங்களை மட்டுமின்றிக் கடவுளர்களைப்பற்றியும் கேள்விகளை எழுப்பினார். சில பிரச்சினைகளில் தீவிரம் போல் தோன்றும் நிலைகளை எடுத்தார், ஆனால் அவர் செய்த சமூகப் புரட்சியின் அடிப்படையான இயல்பை, அந்தப் புரட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் கூடத் தெளிவாகக் கண்டனர். தமிழ் நாட்டின் அரசியல்காட்சியும், அத்துடன் இந்தியாவின் பெருமளவு அரசியல் காட்சியும், இறுதி வடிவைப் பெற்றுவிட்டதாகத் தோன்றும் வகையில் இராமசாமி நாய்க்கரால் (1879-1973) மாற்றப்பட்டது."

## இந்தியா 1000 முதல் 2000

## From "India 1000 to 2000," Express Publications

The enormous privileges given to Brahmins by the Vedas were sacrosanct only as long as they went unchallenged. The

challenge rose in Tamil country like a whirlwind, spearheaded by an iconoclast who questioned the Vedas and the gods as well. He took apparently extremist positions on some issues, but the fundamental nature of the social revolution he wrought was clear even to its victims. The political perspectives of Tamil Nadu, and with it much to India, were altered with a seeming finality by **Ramaswamy Naicker 1879-1973**

*"ஆயிரம் ஆண்டெனும் மூதாட்டி யவள்*
*அணிந்திராத அணியாவார் அறிந்திராத அறிவாவார்*
*கணந்தோறும் இப்பெரிய தமிழ்நாடு*
*எதிர்பார்க்கும் தலைவராவார்*
*கழறவோ அவர் பெயர்தான் இராமசாமி"*

*(புரட்சிக்கவிஞர் - 'குடிஅரசு'க்கு எழுதிய வாழ்த்து.)*

*"ஆயிரம் ஆண்டுகள் (Millennium) என்று சொல்லும் வயதான பெண்மகள், இவ்வளவு நீண்ட பெரிய அளவுடைய கலை எல்லையில் பெரியார் போன்ற ஒரு அணிகலத்தைப் பெற்றதில்லை. அணிந்ததும் இல்லை. ஆயிரம் ஆண்டுகளில் எவ்வளவோ பேர் தோன்றினாலும் பெரியாருக்கு ஒப்பானவர்களை அந்தக் காலம் கண்டதில்லை.*

*அதே ஆயிரம் ஆண்டு என்னும் காலமகள் இந்த நீண்ட நெடிய காலமாகிய பேரெல்லையில் இதுவரை அறிந்துகொண்டிராத அறிவாகப் பெரியார் விளங்குகின்றார். பெரியாரைப் போன்ற அறிஞர்கள் ஆயிரம் ஆண்டுகளில் பிறந்ததில்லை!*

*இந்தப் பெரிய (தமிழ்)நாடு ஒவ்வொரு கணமும் இவருடைய தலைமையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது!"*

### ஆய்வாளரான இங்கிலாந்து அறிஞர் ஆய்வுரை

**Periyar E.V.R. has succeeded where more intellectuals have failed, by adding to the repid enthusiasm of rationalism, the more fiery urges of subnationalism.**

**- Philips Spratt**

**in "The DMK in Power"**

### வ.ரா.

'அக்கிரகாரத்து அதிசய மனிதர்' என்று அறிஞர் அண்ணா அவர்களால் வர்ணிக்கப்பட்ட வ.ரா. அவர்கள் கூறுகிறார்

"பேசுபவன், பேச்சோடு சரி; ஆனால் மவுனமாயிருப்பவன் என்ன செய்வான், எவ்வாறு செய்வான் என்று சொல்லவே முடியாது. இயற்கையும், ருசியும், யோசனையும் எங்கெல்லாம், எவ்வாறெல்லாம் தள்ளுமோ, அப்படி யெல்லாம் "ஆடிப்பாடி" ஆக வேண்டியதுதான். நாய்க்கர் இந்த சூத்திரத்துக்கு விலக்கல்ல.

புலிக்குப் பயப்பட்டவர்கள் என்மேல் படுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும் தைரியசாலிகளைப் போல, பலவேறு கூட்டத்தார்கள் தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பின்னர், தமிழ் நாட்டின் பெருமை குன்றிப்போய் எதிரிகளை எதிர்த்து மாய்த்து, வெற்றியை அடையும் வெறியும் சூழ்ச்சியும், தமிழர்களின் உள்ளத்தினின்று மாயமாய்ப் பறந்தோடி விட்டன.

"பயபக்தியுடனிரு, பழக்கத்தை விடாதே, பெரியோர் சொல் கேள்," இவைகள் நல்ல புத்திமதிகள்தான். ஆனால், இவைகள் தமிழர்களை எந்த நிலைக்குக் கொண்டுவந்து விட்டன என்பதை, மனம் பதைக்காமல் எழுத்தில் எழுத முடியாது. தமிழர்கள் அனைவரும் ஒரு காலத்தில் "இடித்தபுளிகளாக" விளங்கினார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. அநீதியை எதிர்க்கத் திறமையும் தைரியமும் அற்ற 'ஏழைகள்' ஸ்மரணையற்றுக் கிடந்த தமிழர்களின் உள்ளத்தை

"அடிதெரியும்படி" கலக்கிய பிரம்மாண்ட பாக்கியம் நாய்க்கரைப் பெரிதும் சேர்ந்ததாகும்.

இலக்கணம், சந்தி, புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி முதலியன நாய்க்கர் அவர்களைக் கண்டு நடுங்க வேண்டுமேயொழிய, அவைகளை லட்சியம் செய்பவர் நாய்க்கர் அல்ல. அவர் இயற்கையின் புதல்வன், மண்ணை மணந்த மணாளன். மண்ணோடு மண்ணாய் உழலும் மாந்தர்களுக்கு நாய்க்கரின் பிரசங்கம் ஆகாய கங்கையின் பிரவாகம் போன்றது என்பதில் சந்தேகமில்லை.

பொதுவான ஒரு மனது எல்லார் உள்ளங்களிலும் சரடுபோல் ஓடுகின்றது என்றார் எமர்ஸன் என்ற மேதாவி. இந்த "சரடு" தமிழ் மக்களின் உள்ளத்தில் உண்மையாக ஓடுமானால், ஒற்றுமைக் குறை ஏன் இருக்கவேண்டும், எவ்வாறு இருக்க முடியும் என்று ஒருவன் நினைப்பது சகஜந்தானே? லட்சியத்தில் ஒற்றுமையிருந்து, வாழ்க்கை முறையில் வித்தியாசமும் இல்லையானால், தமிழர்களின் சமுதாய வல்லமை ஒருக்காலும் சிந்திச் சிதறிப்போக முடியாது. நமது சமுதாய சக்தி ஒழுகிப்போகும் ஓட்டைகளை, நாய்க்கர் அவர்கள் ஆவலுடன் தேடினார். ஜாதிக் கொடுமை, மூடபக்தி, தீண்டாமை, வலியார் மெலியாரை வருத்தும் அசட்டுத்தனமான பரம்பரை அவலட்சணம், மனச்சாட்சியை ரப்பரைப்போல் அமைத்துக் கொள்ளும் சாமர்த்தியம், எதற்கும் சமாதானம் சொல்லும் விசித்திர ஜாலவித்தை, பெண்களின் முன்னேயும் பின்னேயும் பக்கத்திலும் படுதா, கிளிப்பிள்ளை வேதாந்தம், திண்ணை தத்துவம், போலிமதம், பிடுங்கல் புரோகிதம் - இவையும் இவை போன்றவை யாவும் ஓட்டைகள் என்று நாயக்கர் கண்டார்.

சர்க்கார் பேரில் நாயக்கருக்கு இருந்த கோபம், இவைகளின் பேரில் பாய்ந்தது. யோசித்து யோசித்து கோழையாகும் கூட்டத்தை நாயக்கர் அவர்கள் சேர்ந்தவரேயல்ல. செய்ய வேண்டும் என்று தோன்றியதை, தயங்காமல் செய்யும் தன்மை அவரிடம் காணப்படுவதுபோல், தமிழ்நாட்டில் வேறு எவரிடமும் காணப்படுவதில்லை. லாப நஷ்டக் கணக்குப்

பார்க்கும் தன்மைக்கும் தேசத்தொண்டுக்கும் சம்பந்தமேயில்லை என்பது அவரது கொள்கைபோலும்! இது ஒருவகையில் உண்மை என்பதை எவரும் மறுக்க முடியாது. மேலே குறிப்பிட்ட ஓட்டைகளை அடைக்கும் வேலையிலே தான் நாய்க்கர் அவர்கள், பலரால் 'பதர்' என்றும் பட்டம் பெற்று மதிக்கப்பட்டு வருகின்றார்.

எதற்கெடுத்தாலும், "எங்கள் தகப்பனார், எங்கள் பாட்டனார், எங்கள் மூதாதை" என்று அசட்டு நாடகப் பாத்திரத்தைப் போல உளறிக் கொண்டிருந்தால், தமிழர்கள் 'இக்கரை நடந்து அக்கரை' சேர்வது எக்காலம்? தனக்குத்தானே யோசிக்கும் பொறுப்பையும், திறமையையும் தமிழர்களின் உள்ளத்தில் ஓரளவு (அதைப் பெரிய அளவு என்றுகூடச் சொல்லலாம்) தூண்டிய ராமசாமி நாய்க்கரைப் 'பெரியார்' என்று அழைப்பதில் என்ன பிழை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.

"மநுநூல் பார்வையைக் கெடுத்துவிட்டது; நன்னூல் பாஷையைக் கெடுத்துவிட்டது" என்று ஒரு நண்பர் சொன்னார். இவை இரண்டுடன் சலிக்காமல் போர்தொடுக்கும் நாய்க்கரை, அந்தி மாலைப்பார்வை கொண்டவர்கள் துவேஷிக்கலாம்; திட்டலாம். ஆனால் நிகழ் காலமும் வருங்காலமும் நாய்க்கருக்குத்தான். இவைகளே பக்கத்துணைகள் என்பதில் சந்தேகம் சிறிதுமில்லை."

## டாக்டர் கார்த்திகேசு சிவதம்பி

பிரபல ஆராய்ச்சியாளரும், தமிழறிஞரும், வரலாற்றுப் பின்னணியோடு கூடிய சிந்தனையாளருமான இலங்கைப் பேராசிரியர் டாக்டர் கார்த்திகேசு சிவதம்பி அவர்கள் 1995-ஆம் ஆண்டு "Understanding the Dravidian Movement; Problems and Perspectives" "திராவிட இயக்கத்தைப் புரிந்து கொள்ளல் - பிரச்சினைகளும் கண்ணோட்டங்களும்" என்ற ஒரு சிறப்பான ஆய்வு நூலின் அறிமுக உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள தந்தை பெரியார் அவர்களைப் பற்றிய மதிப்பீடு வருமாறு:-

"It will be no exaggeration if we say that history of the twentieth century Tamilnadu is the history of Periyar E.V.R. and his movement. DR. Karthikesu Sivathamby hails him a social visionary. Whatever may be one's assessment of the results of the movement launched by him, he has to admit that Periyar strode like colossus; his ideas have contributed in no small measure to guiding and shaping Tamilnadu for over seventy five years and his influence is bound to ramain undisturbed for years to come - page 11"

*தமிழ் நாட்டின் 20-ஆம் நூற்றாண்டின் வரலாறு என்பது பெரியார் ஈ.வெ.ராமசாமியின், அவரது இயக்கத்தின் வரலாறே என்று கூறுவது மிகையாகாது. டாக்டர் கார்த்திகேசு சிவதம்பி அவரை ஒரு சமூக தீர்க்கதரிசி என்றே போற்றிப் புகழ்கிறார். அவரால் தொடங்கப்பட்ட இயக்கத்தின் விளைவுகள்பற்றிய ஒருவரது மதிப்பீடு எதுவாக இருந்தபோதும், பெரியார் மாபெரும் வீரனைப் போன்று கம்பீரமாக நிற்பவர் என்பதையும், அவரளித்த கருத்துக்கள் தமிழ்நாட்டைக் கடந்த 75 ஆண்டுகளாக வழிநடத்தி, வடிவமைத்தில் பெரும்பங்காற்றியுள்ளன என்பதையும் எவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அவரது கொள்கைகளின் தாக்கம் இன்னமும் எதிர்காலத்திலும் இடையூறின்றித் தொடர்ந்து நீடித்தே இருக்கும்.*

*அந்நூலில் சுயமரியாதை இயக்கங் கண்ட அதன் நிறுவனத்தலைவரான தந்தை பெரியார் அவர்களது சாதனைபற்றி, ஆராய்ச்சியாளர் டாக்டர் கா. சிவத்தம்பி அவர்கள் ரத்தினச் சுருக்கமான சிறுகுப்பி மருந்து போல, அழகுறப் படம் பிடித்துள்ளார்.*

"E.V.R., however deserves praise for the struggle he initiated for democratization and secularisation at the hitherto inarticulate levels of Hindu Society and it was this process of democratization that led to the process of modernisation of the lower levels of the society."

"இந்து சமூகத்தில் இதுவரை நிலவி வந்த விவாதிக்கத் தயங்கும், பேச்சுத் திறனற்ற நிலையினை மாற்றி, மதசார்பற்றதாகவும், ஜனநாயக நடைமுறைமிக்கதாகவும் ஆக்குவதற்கான போராட்டத்தை மேற்கொண்டமைக்காக ஈ.வெ.ரா. பாராட்டுக்குரியவர். ஜனநாயக நெறிமுறைப் படுத்திய என்னும் இந்த நடைமுறையே சமூகத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களை நாகரிகப்படுத்துவதற்கான வழி வகுத்தது."

பெரியாரியல் பெற்றியின் தன்மை எத்தகையது என்பது விருப்பு, வெறுப்பற்ற நடுநிலை ஆய்வாளர்களின் கண்ணோட்டமாக இதில் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

'யுனெஸ்கோ மன்றமும் 1970-இல் தந்தை பெரியாருக்கு அவரது அருந்தொண்டிற்காகச் சிறப்பு விருது வழங்கி கவுரவப்படுத்தியது; மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் திரிகுணசென் அவர்கள் சென்னை வந்து அன்றைய முதல் அமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் நடந்த விழாவில் விருது வழங்கிச் சிறப்பித்தார். அதன் Citation இதோ:

அனைத்து நாட்டுக் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகம்

வழங்கிய சிறப்புப் பட்டயம்

27.6.1970

**PERIYAR, THE PROPHET OF THE NEW AGE**

**The Socrates of Southeast Asia**

**Father of the Social Reform Movement**

**and**

**Arch Enemy of Ignorance, Superstition**

**Meaningless customs and Base Manners**

## தொலைநோக்காளர்!

"பெரியார், புத்துலகம் காணும் தீர்க்கதரிசி,

தென்கிழக்காசியாவின் சாக்ரட்டீஸ்,

சமூக சீர்திருத்த இயக்கத்தின் தந்தை, மற்றும்

அறியாமை, மூடநம்பிக்கை,

அர்த்தமற்ற பழக்க வழக்கங்கள், கீழ்த்தர நடைமுறைகள்

இவைகளின் கடும் எதிரி"

## இந்திய அரசு வெளியிட்ட அஞ்சல் தலை

*பெரியாரின் அரிய தொண்டறத்தை மதித்துப் பாராட்டும் வகையில் அவரின் நூற்றாண்டு விழாவின் போது இந்திய அரசின் அஞ்சல் துறை பெரியாரின் கையொப்பம் அடங்கிய அஞ்சல் தலையை (25 காசு) வெளியிட்டது.*




*அப்போது இந்திய அரசு வெளிப்படுத்திய விளக்க அறிக்கையில் குறிப்பிட்டவற்றில் ஒரு பகுதி:*

*ஆங்கில வாசகம் அப்படியே தரப்படுகிறது:*

"An ardent fighter, an avowed revolutionary, and a rationalist EVR was simple and humane."

*(ஓர் ஆர்வமிக்க போராளியாக, சூளுரை மேற்கொண்ட புரட்சியாளராக, ஒரு பகுத்தறிவாளராகத் திகழ்ந்த ஈ.வெ.ரா. எளிமையாய் இரக்கம் நிறைந்தவராய் விளங்கினார்.)*

**அமெரிக்க அறிஞர் கணிப்பு**

*"இந்தியாவில் இரண்டாயிரம் வருடத்தில் மகத்தான ஒரு சமுதாயப் புரட்சி தமிழ்நாட்டில்தான் நடந்திருக்கிறது; திராவிடர் கழகத் தலைவர் பெரியார்தான் அந்தப் புரட்சியைச் செய்தவர் என்பது அமெரிக்காவிலுள்ள மூத்த பேராசிரியர்களின் கருத்து ஆகும் "*

-பேரா. ஜான் ரைலி

**(ஆனந்த விகடன் 16.7.72)**

# 13. தொலை நோக்காளர்

தந்தை பெரியார் ஒரு தொலை நோக்காளர். அவர் பல ஆண்டுகளுக்கு முன் கணித்ததெல்லாம் இன்றைக்கு நடைமுறைக்கு வந்துள்ளது - சட்டங்களாகவும் வடிவம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டுக்கு ஒன்றிரண்டு:

ஆண்-பெண் சேர்க்கைக்கும் குழந்தை பெறுவதற்கும் சம்பந்தமில்லாமல் செய்யப்பட்டுவிடும். வீரியத்தை இன்ஜெக்ஷன் மூலம் பெண்கள் கருப்பைகளுக்குள் செலுத்தி நல்ல குழந்தைகளைப் பிறக்கச் செய்யப்படும்.

கம்பியில்லாத் தந்தி சாதனம் ஒவ்வொருவர் சட்டைப்பையிலும் இருக்கும்.

உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து ஆளுக்கான உருவம் காட்டிப் பேசிக் கொள்ளத் தக்க சவுகரியம் ஏற்படும்.

உணவு சத்துப் பொருள்களாகச் சுருக்கப்பட்டு ஒருவாரத்திற்கு ஒரு சிறுகுப்பியில் அடங்கக்கூடிய உணவு ஏற்படும்.

பெட்ரோலுக்குப் பதில் மின்சார சக்தியே உபயோகப்படுத்தப்படலாம்; அல்லது விசை சேகரிப்பாலேயே ஓட்டப்படலாம்.

மேற்கண்ட அவரின் தொலைநோக்குக் கணிப்புகள் எல்லாம் செயல் மலர்களாகப் பூத்துக் குலுங்குவதை மானுடம் அனுபவித்துக் கொண்டுதானிருக்கிறது.

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உலகம் எப்படி இருக்கும் என்ற சிந்தனையும், கண்ணும் கொள்ள எனக்கு

விருப்பமேயொழிய, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைப் பற்றிய அக்கறை கிடையாது."

**- (தந்தை பெரியார், 11.12.1944 அன்று ஈரோடு மாநாட்டில் ஆற்றிய உரை)**

தந்தை பெரியாரின் பண்பாட்டுப் புரட்சியில் பூத்துக் கனிந்தவரான அறிஞர் அண்ணாவின் கூற்றை நினைவு படுத்தி எனது உரையை நிறைவு செய்ய விரும்புகிறேன்.

"இப்படி ஒரு சமூகத்தை, நாட்டு மக்களை ஆளாக்கி விட்ட பெருமை உலகத்தில் பல தலைவர்களுக்குக் கிடைத்ததில்லை; நம்முடைய தமிழகத்தில் பெரியார் அவர்களுக்குத் தான் அந்தத் தனிப்பெருமை சேர்ந்திருக்கிறது; அந்தப் பெருமைக்குரியவர்களாக நாம் நம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும். அவர் அளித்துள்ள செல்வம் அவர் நமக்குக் காட்டியுள்ள லட்சியப் பாதையில் நடந்து செல்லுவதற்கேற்ற ஆற்றல் நமக்கு வரவேண்டுமென்று, அவர் இன்றையதினம் நமக்கெல்லாம் வாழ்த்துச் சொல்லவேண்டும். அந்த வாழ்த்து நமக்குப் புதிய வல்லமைனய - புதிய உற்சாகத்தைத் தரும் என்பதில் அய்யமில்லை."

"தந்தை பெரியார் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி சுலபத்தில் நிற்கப் போவதில்லை. அது போகவேண்டிய தூரத்துக்குப் போய் அடைய வேண்டிய சக்தியை, இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும்." **- அறிஞர் அண்ணா.**

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| AN INTRODUCTION TO RELIGION AND PHILOSOPHY - TEVARAM AND TIVVIYAPPIRAPANTAM | 200.00 |
| பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி-2 | 80.00 |
| ம.பொ.சி யின் தமிழ் உணர்வு | 40.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| இராமாயணம் - தோற்பாவை நிழற்கூத்து | 125.00 |
| அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத் தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி-4 | 110.00 |
| நாட்டுப்புறக் கதைகளும் நாடக ஆக்கமும் | 30.00 |
| A BUNCH OF ESSAYS ON TAMIL LITERATURE | 30.00 |
| திருக்குறள் பூரணலிங்கம்பிள்ளை ஆங்கில மொழிபெயர்ப்பு | 100.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| ON TRANSLATING TIRUKKURAL | 50.00 |
| ஐங்குறுநூறு மூலமும் உரையும் | 85.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| சொற்பிறப்பு - ஒப்பியல் தமிழ் அகராதி | 200.00 |
| THIRUVACHAGAM | 175.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| நானும் என் எழுத்தும் | 50.00 |
| தமிழர் கட்டிடக்கலை | 30.00 |
| THE NARRINAI FOUR HUNDRED | 175.00 |
| சர்வக்ஞர் உரைப்பா | 40.00 |
| தமிழில் ஆவணங்கள் | 75.00 |
| தமிழ் மேடை நாடக வரலாறு | 55.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| மேலை நோக்கில் தமிழ்க்கவிதை | 100.00 |
| SOUND CORRESPONDENCES BETWEEN TAMIL & JAPANESE | 35.00 |
| அயலகத் தமிழ்க்கலை, இலக்கியம், சமகாலச் செல்நெறிகள் | 125.00 |
| TAMIL LITERATURE AND INDIAN PHILOSOPHY | 200.00 |
| சதகத்திரட்டு தொகுதி-1 | 80.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| எழுத்திலக்கணக் கோட்பாடு | 70.00 |
| சதகத்திரட்டு தொகுதி-2 | 55.00 |
| உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை-4 | 70.00 |
| சுவடிச்சுடர் | 120.00 |
| தமிழிலக்கியத்தில் ஊனமுற்றோர் | 45.00 |
| தமிழக மகளிரியல் | 80.00 |
| தமிழ் மொழி-இன-இலக்கிய மேம்பாடு மறைமலையடிகளாரின் பங்களிப்பு | 20.00 |
| அறிவியல் தொழில் நுட்பக் கல்வி இன்றைய சந்தைச் சவால்கள் | 25.00 |

Pub.No.437 **பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி** **25.00**